மாணவர்

# தமிழ் இலக்கணத் தெளிவு

(S. S. L. C. பாடத் திட்டத்தின்படி
நான்கு, ஐந்து, ஆறும் பாரங்களுக்கு அமைந்தது)

ஆக்கியோர்
வித்துவான் ச. குருஸ் அந்தோணி
தமிழாசிரியர்
அர்ச்சு சூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

பிரசுர கர்த்தர் :
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்
மதுரை : : சென்னை

உரிமைப்பதிவு] 1940 [விலை அணா 10

First Edition—1936
Reprinted —1940

Approved for Class Use by the Text Book Committee, Madras.
Vide consolidated List F. S. G. G. Suppt, Part I-B, Page 130
Dated 30...4...40.

Printed at the Excelsior Power Press, Madura-40

# முகவுரை

எம் தமிழ் மொழியின் இயற்கை அமைப்பை அதன் இலக்கணத்தால் நன்கு உணரலாம். எம் முன்னோர், இலக்கணத்தை எவரும் எளிதில் கற்றுக்கொள்ள எளிய முறையைக் கைக்கொண்டிருந்திலர் என்பது அவர்கள் எழுதிச் சென்ற இலக்கணச் சூத்திரப் பாக்களால் நன்கு விளங்கும். அவைகள் தற்காலத்தில் கடினமாய்த் தோன்றுவதற்குக் காரணம், தமிழ் மொழிப் பயிற்சிக் குறைவேயாகும். பண்டைக் காலத் தமிழ் மக்களுக்கு அவைகள் இலகுவாயிருந்திருக்கலாம் என்பது எனது துணிபு. தற்காலத்தில் எவரும் இலக்கணம் எளிதில் படிப்பதற்குச் சூத்திரப் பாவால் அமைந்த இலக்கணத்தை உரை நடையில் எழுதிப் பயன்படுத்திய பெரியார் போப்பு ஐயர் ஆவார். இவர் எழுதிப் போந்த பின்னரே, தமிழில் உரை நடை இலக்கண நூல்கள் எழுந்தன.

மொழிப் பயிற்சிக்கு இன்றியமையாததாய் விளங்குவது இலக்கணமேயாகும். இது பற்றியே 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்,' என எம் முன்னோர் கூறிப் போந்தனர். ஆதலால், அரசியலார் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு வேண்டிய இலக்கணப் பகுதிகள் இவைகள் என்று வரையறுத்துத் திட்டம் செய்திருக்கின்றனர். அத் திட்டத்தின் வழி இந்நூல் எழுதப்பட்டது.

இந்நூலில் முந்தையோர் கண்ட சூத்திரங்களை வேண்டும் இடங்களில் பெய்துள்ளேன்.

அடியேனை இப்பணியில் ஊக்கியருளிய என் நண்பர்களுக்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

திருச்சிராப்பள்ளி, 26—10—38. } வித்துவான் ச. குருஸ் அந்தோணி

# பொருளடக்கம்


பொருள் — பக்கம்

## IV FORM

**I. எழுத்து:**

- எழுத்தின் வகை ... 1
- போலி ... 8

**II. சொல்:**

- சொற்களின் வகை ... 9
- திணை ... 15
- பால் ... 16
- எண் ... 17
- இடம் ... ,,
- வேற்றுமை ... 18
- வேற்றுமைத் தொகையும் விரியும் ... 22
- உருபு ஏற்கும் பொழுது திரியும் பெயர்கள் ... 23

**வினைச்சொல்:**

- வினைச் சொல்லின் வகை ... 23
- பகுபத உறுப்புக்கள் ... 28
- காலம் ... 31
- இடைச் சொல்: ... 32
- உரிச் சொல்: ... 33

**III. புணரியல்:** 34

- உயிரீற்றின்முன் உயிர் புணர்தல் ... 36
- உயிர்முன் வல்லினம் புணர்தல் ... 37
- மெய்யீற்றின்முன் உயிர் புணர்தல் ... 39

# V FORM


I. எழுத்து:

சுட்டெழுத்து (அகச்சுட்டு, புறச்சுட்டு) .... 41
வினவெழுத்து (அக வினு, புற வினு) ... 42
இனவெழுத்து ... 43
மாத்திரை ... 44
மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் .... 45
போலியின் வகை ... 47

II. சொல்:

வட சொல் ... 48
பெயர்ச் சொல் ... 49
ஆகுபெயர் ... 51
வேற்றுமை ... 52
சாரியைகள் ... 56
வினைச்சொல்:
தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று ... 57
முற்றுவினை, எச்ச வினை ... 59
பகுபத உறுப்புக்கள் ... 61
சில விகுதிகள் ... ,,
சாரியை, சந்தி, விகாரம் ... 63
தன்மை முதலிய இடப் பெயர்கள் விரவி வந்து முடிபேற்றல் ... 64
இடைச்சொல்
ஏகார ஓகார இடைச்சொற்கள் ... 65
'உம்' என்னும் இடைச்சொல் ... 66
உரிச்சொல் ... 67

III. பொதுவியல்:

குறிப்பு, வெளிப்படை, வழக்கு ... 69

IV. புணரியல்:

வேற்றுமைப் புணர்ச்சி ... 71
அல்வழிப் புணர்ச்சி ... 72

உயிர்முன் உயிர் புணர்தல் ... 75
மெய்ம்முன் மெய் புணர்தல் ... 79
ய, ர, ழ ஈற்றின்முன் வல்லினம் ... 81

V. யாப்பு:
அசை ... 84
சீர் ... 85
அடி ... 87

VI. அணி:
சொல்லணி, பொருளணி, தன்மையணி ... 88
உவமையணி ... 89
எடுத்துக்காட்டு உவமையணி, இல்பொருள் உவமையணி, உருவக அணி, ஏகதேச உருவகம், தற்குறிப்பேற்ற அணி ... 90

## VI FORM

I. எழுத்து:
முதல் எழுத்துக்களின் பிறப்பிடம் ... 92
சார்பு எழுத்துக்களின் பிறப்பு ... 92
உயிரளபெடை ... 93
மொழியின் ஈற்றில் நிற்கும் எழுத்துக்கள் ... 94

II. சொல்:
தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி ... 95
ஆகுபெயர் ... 96
வேற்றுமை ... 100
வினைச்சொல் ... 107
பொதுவினை ... 108
முற்றெச்சம் ... 111
இடைச்சொல்
மற்று, கொல் ... 112
தான், மன், முன், பின் ... 113
இனி, தொறும், தோறும், அந்தோ, ஐயோ வாளா, சும்மா ... 114

உரிச்சொல்
ஒரு குணங்குறித்த பல உரிச்சொல் ... 114
பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல் ... 115

III. பொதுவியல்:
வழு ... 115
வழாநிலை, வழுவமைதி, திணை வழுவமைதி ... 116
திணைபால் வழுவமைதி ... 117
பால் இடை வழுவமைதி ... 118
கால வழுவமைதி ... 119
மரபு, ஒருபொருட் பன்மொழி ... 120
இரட்டைக்கிளவி ... 121

IV. புணரியல்:
இயல்பு ... 121
மிகல் ... 122
திரிதல் ... 123
ய, ர, ழ முன் வல்லினம் ... 124
இகர ஐகார ஈறுகள் ... ,,
சில எண்ணும் பெயர்கள் இரட்டித்தல் ... 125
சாரியை தோன்றல் ... 126
அகர ஈற்றின் முன் வலி ... 127
குற்றியலுகரப் புணர்ச்சி ... 129
இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி ... 130

V யாப்பு:
மோனை ... 131
எதுகை ... 133
தளை, அலகிடுதல் ... 134
வெண்பாவின் பொது இலக்கணம் ... 135
கட்டளைக்கலித்துறை ... 137

VI. அணி:
வேற்றுமையணி, வேற்றுப்பொருள் வைப்பணி 138
அவநுதியணி, வஞ்சப்புகழ்ச்சியணி ... 139
காட்சியணி, ஒட்டணி, உயர்வு நவிற்சியணி ... 140

மாணவர்

# தமிழ் இலக்கணத் தெளிவு

## IV FORM

## I. எழுத்து

## (Letters)

**1.** மக்களாகிய நாம் சேர்ந்து வாழும் இயல்பை உடையவர்களாயிருக்கிறோம். ஆகவே, நாம் ஒருவருக்கொருவர் நம் எண்ணங்களை வெளியிடல் வேண்டும். அவ்வெண்ணங்களை வெளிப்படுத்துவது ஒலியாகும். நாம் அவ்வொலியைச் சில அடையாளங்களால் பிறர் அறிந்து கொள்ளுமாறு செய்கின்றோம். இவ்வடையாளமே எழுத்தாகும்.

ஆகையால், எழுத்து ஒலி வடிவு எழுத்து என்றும், வரி வடிவு எழுத்து என்றும் இரண்டு வகைப்படும்.

குறிப்பு:—ஒலி வடிவு, காதால் கேட்டு அறிந்துகொள்ளக் கூடியதாம்; வரி வடிவு, கண்ணால் பார்த்து அறிந்துகொள்ளக் கூடியதாம். எழுதப்படுதலின் எழுத்து எனப் பெயர் பெற்றது.

### எழுத்தின் வகை

### (Classification of Letters)

**2.** தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்கள் முதலெழுத்து என்றும் சார்பெழுத்து என்றும் இரு வகைப்படும்.

**3.** முதலெழுத்து (Primary letters) :—உயிர் எழுத்துக்கள் (**Vowels**) பன்னிரண்டு ; மெய்யெழுத்துக்கள் (**Consonants**) பதினெட்டு ; ஆக முப்பது எழுத்துக்களும் முதலெழுத்து எனப்படும்.

ந. சூ:—உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே. 1.

**4.** சார்பெழுத்து (Secondary letters) :—உயிர் மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என்னும் இப்பத்தும் சார்பெழுத்தாகும்.

குறிப்பு:—இப்பத்தும் முதலெழுத்துக்களைச் சார்ந்து வருவதால், சார்பெழுத்துக்கள் எனப் பெயர் பெற்றன.

உயிர்மெய் (Vowel consonants):— இவை உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்து.

(உ-ம்.) க்+அ=க, ன்+ஔ=னௌ.

ஆய்தம் (The guttural) :—இது மூன்று புள்ளி வடிவமாகிய (ஃ) எழுத்து.

உயிரளபெடை (Prolongation of Vowel sounds) :—உயிர் நெட்டெழுத்துக்கள் தங்களுக்கு உரிய ஒலி அளவினின்று மிகுந்து ஒலிப்பது உயிரளபெடையாம்.

(உ-ம்) ஓஒதல்

ஒற்றளபெடை (Prolongation of consonant sounds) :—மெய்யெழுத்துக்கள் தமக்கு உரிய அளவின் மிகுந்து ஒலிப்பது ஒற்றளபெடையாம்.

(உ-ம்) அங்ங்கு

குற்றியலிகரம் (Abbreviated இ) :—மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் இகரம், குற்றியலிகரம் எனப்படும்.

(உ - ம்.) நாடு + யாது = நாடியாது?

குற்றியலுகரம் (Abbreviated உ) :—மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் உகரம், குற்றியலுகரம் எனப்படும்.

| | | |
|---|---|---|
| (உ - ம்.) | நாடு | பாக்கு |
| | அஃது | பங்கு |
| | பொழுது | பெய்து |

ஐகாரக் குறுக்கம் (Shortened ஐ) :—மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் ஐகாரம், ஐகாரக் குறுக்கம் எனப்படும்.

ஔகாரக் குறுக்கம் (Shortened ஔ) :—மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் ஔகாரம், ஔகாரக் குறுக்கம் எனப்படும்.

மகரக் குறுக்கம் (Shortened ம்):—மாத்திரையில் குறுகி ஒலிக்கும் மகரம், மகரக் குறுக்கம் எனப்படும்.

ஆய்தக் குறுக்கம் (Shortened Guttural) :—தன் அளவில் குறுகி ஒலிக்கும் ஆய்தம், ஆய்தக் குறுக்கம் எனப்படும்.

ந. சூ:—உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு
அஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும். 2.

**5.** உயிரெழுத்து (Vowels):—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ. ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் இப்பன்னிரண்டும் உயிரெழுத்துக்களாம்.

குறிப்பு:—இவை உயிர்போலத் தனித்து இயங்குவன. ஆதலால், உயிர் எனப் பெயர் பெற்றன. இவை ஆவி எனவும் பெயர் பெறும்.

**6.** உயிர் எழுத்துக்கள் குற்றெழுத்து என்றும் நெட்டெழுத்து என்றும் இரு வகைப்படும்.

**7.** குற்றெழுத்து (Short vowels) :—அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குற்றெழுத்துக்களாம்.

குறிப்பு:—இவை நெட்டெழுத்தை நோக்கக் குறுகிய ஓசை உடையவையாதலின், குற்றெழுத்து எனப்பட்டன: இவை குறில் எனவும் பெயர் பெறும்.

ந. சூ:—அஇ உஎ ஒக்குறில் ஐந்தே. 3.

**8.** நெட்டெழுத்து (Long vowels):—ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழும் நெட்டெழுத்துக்களாம்.

குறிப்பு:—இவை தமக்கு இனமாகிய குறிலை நோக்க நீண்ட ஓசையுடையவை; ஆதலின், நெட்டெழுத்து எனப்பட்டன. இவை நெடில் எனவும் பெயர் பெறும்.

ந. சூ:—ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில்.

**9.** வினாவெழுத்து (Interrogative Letters) :—ஆ, எ, ஏ, ஓ என்னும் நான்கு எழுத்துக்களும் வினாவை உணர்த்தும்போது வினாவெழுத்து எனப்படும். இவற்றுள் ஆ, ஓ என்னும் இரண்டும் சொல்லின் கடைசியில் வரும். எ, சொல்லின் முதலில் வரும், ஏ, சொல்லின் முதலிலும் கடைசியிலும் வரும்.

(உ - ம்.) அவனா? —ஆ—ஈற்றில் வந்தது
அவனோ? —ஓ ,, ,,
எவன்? —எ முதலில் வந்தது

ஏவன் ? —ஏ முதலில் வந்தது.
அன்றே ? —ஏ ஈற்றில் வந்தது.

குறிப்பு:—யா என்னும் உயிர்மெய்யெழுத்தும் மொழிக்கு முதலில் வினப்பொருளில் வரும்பொழுது வினவெழுத்தாகும்.

(உ-ம்) யாது ?யாவன் ? யாங்ஙனம் ?

ந. சூ:—எயா முதலும் ஆஓ ஈற்றும்
ஏஇரு வழியும் வினவா கும்மே. 5.

**10.** மெய்யெழுத்து (Consonants) :—க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் பதினெட்டும் மெய்யெழுத்துக்கள்.

குறிப்பு:—உயிர் எழுத்தின் உதவியில்லாமல் தனித்து உச்சரிக்கப்படாத எழுத்து மெய்யென்று பெயர் பெற்றது. இவ்வெழுத்து உடல்; ஒற்று, புள்ளி, உறுப்பு எனவும் பெயர் பெறும்.

**11.** மெய்யெழுத்துக்கள், வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும்.

**12.** வல்லெழுத்துக்கள் (Hard letters) :—க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வல்லெழுத்துக்களாம்.

குறிப்பு:—இவை மார்பிலிருந்து பிறக்கும் வல்லோசையோடு உச்சரிக்கப்படுதலால்; வல்லினம் எனப் பெயர் பெற்றன. இவை வன்கணம், வன்மை; வலி என்றும் சொல்லப்படும்.

ந. சூ:—வல்லினம் கசட தபற என ஆறே. 6.

**13.** மெல்லெழுத்துக்கள் (Soft letters) :—ங், ஞ், ண்; ந், ம், ன் என்னும் ஆறு எழுத்துக்களும் மெல்லினம் எனப்படும்.

குறிப்பு:—இவை மெல்லிய ஓசையுடன் மூக்கிலிருந்து பிறத்தலால், மெல்லினம் எனப்பட்டன. இவை மென்கணம், மென்மை, மெலி எனவும் பெயர் பெறும்.

ந. சூ:—மெல்லினம் ஙஞண நமன என ஆறே. 7.

**14.** இடையினம் (Medial letters):—ய், ர், ல், வ் ழ், ள், என்னும் ஆறும் இடையினம் எனப்படும்.

குறிப்பு:—இவை வல்லின மெல்லினங்கட்கு இடைத்தரமாக ஒலிக்கப்படுவதால் இப்பெயர் பெற்றன. இவை இடைக்கணம், இடைமை, இடை எனவும் பெயர் பெறும்.

ந. சூ:—இடையினம் யரல வழள என ஆறே. 8.

**15.** உயிர்மெய் யெழுத்து (Vowel consonants):—பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யோடும் தனித்தனி சேர்ந்து பிறக்கும் இருநூற்றுப் பதினாறு எழுத்துக்களும் உயிர்மெய் எழுத்துக்களாகும்.

(உ-ம்.) க்+அ=க

ன்+ஔ=னௌ

**16.** ஆய்த எழுத்து (The Guttural) :—மூன்று புள்ளி (ஃ) வடிவாகிய எழுத்து ஆய்த எழுத்து எனப்படும். இது குற்றெழுத்துக்குப் பின்னும் உயிரோடு கூடிய வல்லெழுத்துக்கு முன்னும் வரும்.

(உ-ம்) எஃகு, கஃசு.

ந. சூ:—குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி

உயிரோடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே. 9.

**17.** குற்றியலுகரம் (Abbreviated உ):—தனித்து வருகின்ற நெட்டெழுத்திற்குப் பின்னும் தொடர்ந்து வரு

கின்ற ஏனைய எழுத்துக்களுக்குப் பின்னும் வரும் வல்லின மெய்யின்மேல் ஏறிய உகரம் குற்றியலுகரம் எனப்படும். இக்குற்றியலுகரம் சொல்லின் ஈற்றுக்கு அயலெழுத்தை நோக்க ஆறு வகைப்படும்.

(உ - ம்.) நாடு —நெடில் தொடர்க் குற்றியலுகரம்.
எஃகு —ஆய்தத்தொடர் ,,
வரகு —உயிர்த்தொடர் ,,
சுக்கு —வன்றொடர் ,,
பந்து —மென்றொடர் ,,
மார்பு —இடைத்தொடர் ,,

குறிப்பு:—நெடில் தொடர்க் குற்றியலுகரம் இரண்டே எழுத்தை உடையது.

**18.** முற்றியலுகரம் (Full Sound உ):—தனித்தும் தனிக்குறிலைச் சேர்ந்தும் வருகின்ற வல்லின மெய்யின் மேலும் மெல்லின இடையின மெய்களின்மேலும் வரும் உகரம் முற்றியலுகரமாம்.

(உ - ம்.) து —தனி மெய்யின்மேல் வந்தது.
விடு —தனிக்குறிலைச் சார்ந்த வல்லின மெய் யோடு சேர்ந்து வந்தது.
விம்மு —மெல்லின மெய்யின்மேல் வந்தது.
வாழ்வு —இடையின ,, ,,

**19.** குற்றியலிகரம் (Abbreviated இ):—வருமொழி முதலில் யகரம் வர, நிலைமொழி ஈற்றுக் குற்றியலுகரம் இகரமாகத் திரியும். அந்த இகரமே குற்றியலிகரமாகும்.

(உ - ம்.) நாடு + யாது—நாடியாது ?

குறிப்பு:—மியா என்னும் அசைச் சொல்லில் வரும் இகரமும் மாத்திரையில் குறைந்த இகரமாம்.

ந. சூ:—யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய. 10.

**20.** முற்றியலிகரம் (Full Sound இ):— குற்றியலிகரம் அல்லாத இகரங்கள் எல்லாம் முற்றியலிகரங்களாகும்.

உ - ம்.) தாழ்வு + இல்லை = தாழ்வில்லை.

## போலி

## (Interchange of Letters)

**21.** ஒரு சொல்லின் சாதாரண வழக்கத்திலும் செய்யுளிலும் ஓர் எழுத்துக்குப் பதிலாக வேறு எழுத்து வந்து பொருள் வேறுபடாமல் நிற்பது போலி எனப்படும். இப்போலி எழுத்துக்கள் சொல்லுக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் வரும்.

(உ - ம்.) பசல் - பைசல் — முதற்போலி
அரசு - அரைசு — இடைப் போலி
அகம் - அகன் — கடைப் போலி

குறிப்பு:—போல நிற்பது போலி.

---

# II. சொல்

## (Words)

**22.** எழுத்துக்கள் தனித்தாவது இரண்டு முதலாகத் தொடர்ந்தாவது ஒரு பொருளைத் தெரிவிப்பது சொல்லாம்.

குறிப்பு:—சொல், பதம், மொழி என்பன ஒரு பொருட் சொற்கள்.

(உ - ம்.) ஆ (பசு), ஆடு, அரசு.

**23.** இச்சொற்கள் பகாப்பதம், பகுபதம் என இரண்டு வகைப்படும்.

**24.** பகாப்பதம் (Primitive word):—பகாப்பதம் பகுதி விகுதி முதலியனவாகப் பகுக்கப்படாத இயல்பை உடைய பதமாம். அது பெயர்ப் பகாப்பதம், வினைப் பகாப்பதம், இடைப் பகாப்பதம், உரிப் பகாப்பதம் என நான்கு வகைப்படும்.

நீர், மரம் — பெயர்ப் பகாப்பதம்
நட, வா வினைப் பகாப்பதம்
மற்று, ஏ — இடைப் பகாப்பதம்
உறு, தவ — உரிப் பகாப்பதம்

**25.** பகுபதம் (Derivative word):—பகுதி விகுதி முதலியனவாகப் பிரிக்கப்படும் பதம் பகுபதமாம்.

| (உ-ம்.) | பகுதி | இடைநிலை | விகுதி |
|---|---|---|---|
| வலைஞன் — | வலை | ஞ் | அன் |
| தின்றான் — | தின் | ற் | ஆன் |

ந. சூ:—எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம்; அதுபகாப் பதம்பகு பதம்என
இருபா லாகி இயலும் என்ப. 11.

**26.** சொற்களின் வகை (Classification of words):-சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும். அவற்றோடு, திசைச்சொல், வடசொல் என்னும் இரண்டையும் சேர்க்க, சொற்கள் ஆறு வகைப்படும்.

**27.** பெயர்ச்சொல் (Noun):—ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல்லாகும். இப்

பெயர்ச்சொல் திணை, பால், எண், இடம் ஆகிய இவற்றை உணர்த்தி, வேற்றுமை உருபுகளை ஏற்று நிற்கும்.

(உ-ம்) மரம், மனிதன், வீடு, மணி.

**28.** இப்பெயர்ச்சொல் இடுகுறிப் பெயர் என்றும் காரணப்பெயர் என்றும் இரண்டு வகைப்படும்.

**29.** இடுகுறிப் பெயராவது (Arbitary noun), யாதொரு காரணமும் இல்லாது பொருளுக்கு மக்களால் இடப்பட்ட பெயர்.

(உ-ம்.) மரம், மலை, மண், கடல்.

**30.** காரணப் பெயராவது (Appellative noun), யாதேனும் ஒரு காரணம் பற்றிப் பொருளுக்கு இடப்பட்ட பெயர்.

(உ-ம்.) பறவை, அணி, கணக்கன்.

குறிப்பு:—*பறப்பதால் பறவையென்றும், அணியப்படுவதால் அணி என்றும், கணக்குப் பார்ப்பதால் கணக்கன் என்றும் பெயர் வழங்குதல் அறிக.*

ந. சூ:—இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின. 12.

**31.** வினைச்சொல் (Verb):—*பொருளினது செயலை உணர்த்தும் சொல் வினைச்சொல்லாகும்.*

குறிப்பு:—வினை, செயல், தொழில் *என்பன ஒரு பொருட் சொற்கள்.*

(உ-ம்.) வந்தான் — *இறந்த காலம்.*
வருகின்றான் — *நிகழ் காலம்.*
வருவான் — *எதிர் காலம்*

குறிப்பு:—வினைச்சொல் வேற்றுமை ஏற்காது, காலத்தைக் காட்டிச் செயலைத் தெரிவிக்கும்.

**32.** இடைச்சொல் (Particle):—தனித்து வழங்காமல் பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடும் சேர்ந்து பொருள் தரும் சொல் இடைச்சொல்லாம்.

(உ-ம்.) இராமனும் கிருஷ்ணனும் வந்தனர். இவைகளில் உள்ள உம் இரண்டும் இடைச்சொற்களாகும்.

**33.** உரிச்சொல் (Qualifying word):— தனித்து வழங்காமல் பெயர் வினைகளை அடுத்துக் குணத்தை விளக்கும் சொல் உரிச்சொல்லாம்.

(உ-ம்) சால நல்லது.
தவப் பிஞ்சு.
நனி தின்றான்.

**34.** திசைச்சொல் (Words of local usage):—அந்நிய மொழியிலுள்ள சொற்கள் தமிழில் கலந்து வழங்கப்படுமானால், அவைகளுக்குத் திசைச்சொற்கள் என்பது பெயர்.

(உ-ம்) ஷாப்பு —ஆங்கிலம்
சுபேதார் —இந்துஸ்தானி
சேப்புதல்—தெலுங்கு
சிக்குதல் —கன்னடம்

**35.** வடசொல் (Sanskrit word):—தமிழில் வந்து வழங்குகின்ற சமஸ்கிருதச் சொற்களுக்கு வடசொல் என்பது பெயர்.

(உ-ம்) குஞ்சரம், பிரயத்தனம், கமலம், காரணம்.

**36.** பல வகைப் பெயர்ச்சொற்கள் (The kinds of nouns):—பெயர்ச்சொற்கள், தாம் உணர்த்தும் பொரு

ளால் பலவகைப்படும். அவை பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என ஆறு வகையுள் அடங்கும்.

**37.** பொருட்பெயர்:—*மக்கட்பெயரும் பொருளின் பெயரும் பொருட்பெயராகும்.*

(உ-ம்.) கம்பர், மரம், ஆடு.

**38.** இடப்பெயர்:—*இடத்தைக் குறிக்கும் பெயர் இடப்பெயராகும்.*

(உ-ம்.) கண்டம், நாடு, நகரம், வீடு.

**39.** காலப்பெயர்:—*காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயராகும்.*

(உ-ம்.) ஆண்டு, திங்கள், நாள்.

**40.** சினைப்பெயர்:—*உறுப்புக்களுக்குப் பெயராய் வருவது சினைப்பெயராகும். (சினை-உறுப்பு)*

(உ-ம்.) தலை, கை, கால், இலை, காய், கிளை.

**41.** குணப்பெயர்:—*ஒரு பொருளின் தன்மையை உணர்த்தும் பெயர் குணப்பெயராகும். (குணம்—பண்பு)*

(உ-ம்.) பெருமை, சிறுமை, செம்மை, அழகு.

**42.** தொழிற்பெயர்:—*தொழில்களின் பெயர் தொழிற்பெயராகும்.*

(உ-ம்.) நடத்தல், இருத்தல், படித்தல்.

குறிப்பு:—*சில தொழிற்பெயர்கள் விகுதி பெறாமல் வரும் அவை* முதல் நிலைத் தொழிற்பெயர் எனப்படும்.

(உ-ம்.) உரை (*உரைத்தல்*)
அடி (*அடித்தல்*)

சில தொழிற்பெயர்கள் முதல்நிலை திரிந்தும் வரும். அவை முதல் நிலை திரிந்த தொழிற்பெயர் எனப்படும்.

(உ - ம்.) வீடு (விடுதல்), கேடு (கெடுதல்). விடு, கெடு என்ற முதல் நிலைகள் வீடு, கேடு என்று திரிந்து வந்தன.

**43.** வினையாலணையும் பெயர்:—வினைமுற்று, தொழிலையும், தொழில் செய்கின்ற பொருளையும் உணர்த்தி, வேற்றுமை உருபுகளை ஏற்றும் ஏற்காமலும் வருவது வினையால் அணையும் பெயராம்:

(உ - ம்.) வந்தவன் உண்டான்.
வந்தவனைக் கண்டேன்.

குறிப்பு:—தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு:—

1. தொழிற்பெயர், தொழிலுக்குப் பெயராய் வரும்; வினையாலணையும் பெயர், தொழில் செய்கின்ற பொருளைக் காட்டும் பெயராகும்.

2. தொழிற்பெயர், படர்க்கை இடத்திற்கே உரியது; வினையாலணையும் பெயர், தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடங்களுக்கும் உரியது.

3. தொழிற்பெயர் பெரும்பாலும் காலங்காட்டாது; வினையாலணையும் பெயர் காலங்காட்டும்.

**44.** கிளைப்பெயர்:—சுற்றத்தாரைக் குறிக்கும் பெயர் கிளைப்பெயர்.

(உ - ம்.) தமர் (தம்மவர்), நுமர் (நும்மவர்).

முறைப்பெயர்:—ஒரு கூட்டத்தாரில் ஒருவரை ஒருவர் முறை வைத்து அழைக்கும் பெயரே முறைப்பெயராகும்.

(உ - ம்.) மாமன், மைத்துனன்.

**45.** சாதிப்பெயர்:—*பல சாதிகளைக் குறிக்கும் பெயர் சாதிப்பெயராம்.*

(உ - ம்.) உழவர், வணிகர், பாணர்.

**46.** அளவுப்பெயர்:—*அளவுகளைக் காட்டும் பெயர்கள் அளவுப் பெயர்களாம். இவை* எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் *என்று நான்கு வகைப்படும்.*

| | | |
|---|---|---|
| (உ - ம்.) கால், அரை, ஒன்று | —*எண்ணல் அளவைப்பெயர்* | |
| பலம், வீசை | —*எடுத்தல்* | ,, |
| நாழி, கலம், துணி | —*முகத்தல்* | ,, |
| அடி, முழம் | —*நீட்டல்* | ,, |

**47.** தன்மைப்பெயர் (Nouns of first person):—*பேசுபவன், தன்னை மட்டும் குறிக்கும் பெயர் தன்மை ஒருமைப் பெயரென்றும், பிறரையும் சேர்த்துக் குறிக்கும் பெயர் தன்மைப் பன்மைப் பெயர் என்றும் இரு வகைப்படும்.*

(உ - ம்.) நான், யான் —*தன்மை ஒருமை*
நாம், நாங்கள் }
யாம், யாங்கள் } —*தன்மைப் பன்மை*

**48.** முன்னிலைப் பெயர் (Nouns of second person):—*முன் நிற்கின்ற ஒருவரைக் குறிப்பது முன்னிலை ஒருமைப் பெயரென்றும், பலரைக் குறிப்பது முன்னிலைப் பன்மைப் பெயரென்றும் இரு வகைப்படும்.*

(உ - ம்.) நீ—*முன்னிலை ஒருமைப் பெயர்*
நீர், நீயிர், நீவிர் }
நீங்கள், எல்லீர் } *முன்னிலைப் பன்மைப்பெயர்*

குறிப்பு:—*நீர் என்பதும் நீங்கள் என்பதும் மரியாதை பற்றி ஒருமையிலும் வழங்கும்.*

**49.** படர்க்கைப் பெயர் (Nouns of third person):— *தன்மை முன்னிலைப் பெயர்கள் அல்லாத மற்ற எல்லாப் பெயர்களும் படர்க்கைப் பெயர்கள் ஆகும்.*

(உ-ம்.) அவன், அவள், அவர், அது, அவை, அரசன், அரசி, அரசர், அரசர்கள்

**50.** பொதுப் பெயர்கள் (Nouns common to both Classes):— தான், தாம், எல்லாம் *முதலியன உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாய் வரும் பெயர்களாகும்.* இவை திணைப் பொதுப் பெயர் *என்றும் சொல்லப்படும்.*

| | உயர்திணை | அஃறிணை |
|---|---|---|
| தான்: | *தான் வந்தான்.* | *தான் வந்தது.* |
| | *தான் வந்தாள்.* | |
| தாம்: | *தாம் வந்தார்.* | *தாம் வந்தன.* |
| எல்லாம்: | *எல்லாம் வந்தோம்.* | *எல்லாம் வந்தன.* |
| | *எல்லாம் வந்தீர்.* | |
| | *எல்லாம் வந்தார்.* | |

குறிப்பு:—எல்லாம் *என்னும் பெயர் மூவிடத்துக்கும் பொதுவாய் வருதலால்,* இடப் பொதுப் பெயர் *எனவும்படும்.*

## திணை

## (Class)

**51.** *திணை என்பது சாதி, அல்லது பொருளின் பகுப்பு. அஃது உயர்திணை, அஃறிணை என இரு வகைப்படும்.*

குறிப்பு:—*உயர்திணை - உயர்வாகிய சாதி; அஃறிணை (அல் + திணை) - உயர்வு அல்லாத சாதி.*

**52.** மக்களும் தேவரும் உயர்திணை; ஏனைய உயிருள்ள பொருள்களும் உயிரில்லாப் பொருள்களும் அஃறிணையாகும்.

குறிப்பு:—மக்களுடைய உடம்பையும் உயிரையும் பிரித்தால் அவையும் அஃறிணையாம்.

(உ - ம்.) அரசன், இந்திரன்—உயர்திணை
ஆடு, மரம், உடல், உயிர்—அஃறிணை

குறிப்பு:—கடவுளை உயர்திணையாகவும் அஃறிணையாகவும் கூறலாம்.

(உ - ம்.) கடவுள் காக்கின்றார்; தெய்வம் இருக்கிறது.

ந. சூ:—மக்கள் தேவர் நரகர் உயர்திணை;
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை. **13.**

## பால்

## (Gender)

**53.** திணையின் பிரிவே பால் எனப்படும். அஃது ஆண் பால், பெண் பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால் என ஐந்து வகைப்படும்.

ஆண் பால் (Masculine singular), ஆண் மகனைக் குறிக்கும். (உ-ம்.) முருகன்.

பெண் பால் (Feminine singular), பெண் மகளைக் குறிக்கும். (உ-ம்.) வள்ளி

பலர் பால் (Plural of both the genders), பல மக்கள் கூட்டத்தைக் குறிக்கும். (உ-ம்.) மக்கள், அரசர்.

ஒன்றன் பால் (Neuter singular), அஃறிணைப் பொருளில் ஒன்றைக் குறிக்கும். (உ-ம்.) தென்னை

பலவின் பால் (Neuter plural), அஃறிணைப் பொருளில் பலவற்றைக் குறிக்கும். (உ - ம்.) மரங்கள்

**54.** ஆண் பால், பெண் பால், பலர் பால் என்னும் மூன்றும் உயர்திணைக்கு உரியன; ஒன்றன் பால், பலவின் பால் என்ற இரண்டும் அஃறிணைக்கு உரியன.

ந. சூ:—ஆண்பெண் பலர்என முப்பாற்று உயர்திணை. **14.**

ந. சூ:—ஒன்றே பலவென்று இருபாற்று அஃறிணை. **15.**

## எண்

## (Number)

**55.** எண் (Number) என்பது, எண்ணிக்கை. ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை எனவும், ஒன்றுக்கு மேல் பட்ட பலபொருளைக் குறிப்பது பன்மை எனவும் வழங்கப் படும்.

(உ - ம்.)

| | | |
|---|---|---|
| பொன்னன், தம்பி | ஆண் பால் | ஒருமை |
| பொன்னி, தங்கை | பெண்பால் | ஒருமை |
| தென்னை, பலா | ஒன்றன்பால் | ஒருமை |
| மக்கள் | உயர்திணை—பலர் பால் | பன்மை |
| மரங்கள் | அஃறிணை—பலவின்பால் | பன்மை |

## இடம்

## (Person)

**56.** இடம் என்பது, சொற்கள் வழங்குவதற்கு உரிய ஸ்தானம். அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும். பேசுவோர் தன்மையிடம்; முன்னின்று கேட்போர் முன்னிலை இடம்; பேசப்படும் பொருள் படர்க்கை இடம்.

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| தன்மை | நான் வந்தேன். | நாம் வந்தோம். |
| | யான் வந்தேன். | யாம் ,, |
| | | நாங்கள் ,, |
| | | யாங்கள் ,, |
| | | நீயிர் வந்தீர். |
| முன்னிலை | நீ வந்தாய். | நீங்கள் வந்தீர்கள் |
| படர்க்கை | அவன் வந்தான். | அவர்கள் வந்தார்கள் |
| | அவள் வந்தாள். | |
| | அது வந்தது. | அவை வந்தன. |

ந. சூ:—தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே. 16.

## வேற்றுமை
## (Case)

**57.** பெயரின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாகும். அவ்வேற்றுமை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டு வகைப்படும்.

குறிப்பு:—முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை என்றும், எட்டாம் வேற்றுமை விளி வேற்றுமை என்றும் சொல்லப்படும். பெயரின் பொருளை வேறுபடுத்துவதற்கு அடையாளமாக வருகின்ற இடைச்சொல் உருபு எனப்படும்.

ந. சூ:—ஏற்கும் எவ்வகைப் பெயர்க்குமீ றுய்ப்பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை. 17.

**58.** முதல் வேற்றுமை (Nominative Case):—திரிபு இல்லாமல் இயல்பாய் நிற்கும் பெயரே முதல் வேற்றுமையாம். இது வினையையும், பெயரையும், வினாவையும் கொண்டு முடியும்.

(உ - ம்.) அரசன் வாழ்க—வினையைக்கொண்டு முடிந்தது.
அரசன் அவன்—பெயரைக்கொண்டு முடிந்தது.
அவன் யாவன்?—வினாவைக் கொண்டுமுடிந்தது.

குறிப்பு:—எழுவாய், கருத்தா, வினை முதல், செய்பவன் என்பன ஒரு பொருட்சொற்கள்.

ந. சூ:—எழுவாய் உருபு திரிபில் பெயரே;
வினைபெயர் வினாக்கோளல் அதன்பயனிலையே.

குறிப்பு:—இவ்வேற்றுமைக்கு, ஆனவன், ஆகின்றவன் ஆவான், என்பான் என்பாள் முதலியன சொல்லுருபுகளாய் வரும்.

(உ - ம்.) கொற்றனானவன், கொற்றியானவள், கொற்றன் என்பான், கொற்றி என்பாள்.

குறிப்பு:—ஒரு வாக்கியத்தில் எழுவாய் தோன்றாதிருப்பின், அது தோன்றா எழுவாய் எனப் படும். (உ - ம்) மகனே வா—, இதில் நீ என்னும் எழுவாய் மறைந்து நிற்பது காண்க.

**59.** இரண்டாம் வேற்றுமை (Accusative Case):—இரண்டாம் வேற்றுமையின் உருபு 'ஐ' ஒன்றேயாம். இதன் தொழில், பெயர்ப்பொருளைச் செயப்படுபொருளாக வேறு படுத்துவது.

(உ - ம்.) கோவிலைக் கட்டினான்.
மரத்தை வெட்டினான்.

குறிப்பு:—செயப்படுபொருள் எப்பொழுதும் இரண்டாம் வேற்றுமையிலேயே வரும்.

**60.** மூன்றாம் வேற்றுமை (Instrumental Case):-மூன்றாம் வேற்றுமையின் உருபு ஆல், ஆன், ஒடு, ஓடு உடன் என்பவை. இதன் தொழில் பெயர்ப் பொருளைக்

கருவிப்பொருளாகவும், கருத்தாப் பொருளாகவும், உடன் நிகழ்ச்சிப் பொருளாகவும் வேறுபடுத்துவது. இதற்குக் கருவி வேற்றுமை என்னும் பெயருமுண்டு.

(உ - ம்.) *மண்ணால் குடத்தை வனைந்தான்—இது கருவிப் பொருளில் வந்தது.*

*அரசனால் கோயில் கட்டப்பட்டது—இது கருத்தாப் பொருளில் வந்தது.*

*மகனோடு மருமகன் வந்தான்—இது உடன் நிகழ்ச்சிப் பொருளில் வந்தது.*

குறிப்பு:—உடன், கொண்டு என்பன சொல்லுருபுகளாய் வரும்.

**61.** நான்காம் வேற்றுமை:—நான்காம் வேற்றுமைக்கு, உருபு 'கு' ஒன்றே ஆகும். இது கொடை, பகை, நேர்ச்சி தகுதி முதலிய பொருளில் வரும்.

(உ - ம்.) *அருங்கலன் அரசர்க்கு உரியது—தகுதி*

குறிப்பு:—பொருட்டு, நிமித்தம் என்பன இதன் சொல்லுருபுகளாய் வரும்

**62.** ஐந்தாம் வேற்றுமை:—ஐந்தாம் வேற்றுமைக்கு உருபுகள் இல், இன் என்பனவாகும். இது நீங்கல் ஒப்பு, எல்லை, ஏதுப்பொருளில் வரும்.

(உ - ம்.) *கல்வியில் பெரியவர் கம்பர்—ஏது*

*மலையின் வீழ் அருவி—நீங்கல்*

குறிப்பு:—நின்று, இருந்து என்பன இதன் சொல்லுருபுகளாய் வரும்.

(உ - ம்.) *காட்டினின்று வந்தான், காட்டிலிருந்து வந்தான்.*

**63.** ஆறும் வேற்றுமை:—ஆறும் வேற்றுமைக்கு உருபுகள் அது, ஆது, அ, உடைய என்பன. இதன் பொருள் பொருளின் சொந்தத்தைக் காட்டுதல்.

(உ - ம்) கொற்றனது கை
தனது கை
உன செல்வர்கள்
மன்னனுடைய மாளிகை

**64.** ஏழாம் வேற்றுமை:—ஏழாம் வேற்றுமைக்கு உருபுகள் கண் முதலியனவாம். இதன் பொருள் பெயர்ப் பொருளை இடப்பொருளாக வேறுபடுத்துவது.

## ஏழாம் வேற்றுமை உருபுகள்

ந. சூ:—கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்
பின்பாடு அளைதேம் உழைவழி உளிஉழி
உள்அகம் புறம்இல் இடப்பொருள் உருபே 19.

(உ - ம்.) மணியின்கண் ஒளி

குறிப்பு:—கண், கால் முதலியன இடப்பொருளைக் குறிக்கும்போதுமட்டும் ஏழாம் வேற்றுமை உருபுகளாகக் கொள்ளப் படும்.

**65.** எட்டாம் வேற்றுமை:— இவ்வேற்றுமைக்கு உருபு இல்லை ஆயினும், பெயர்ச்சொல் ஈறு திரிதலையும், கெடுதலையும், மிகுதலையும், ஈற்று அயலெழுத்துத் திரிதலையும், இயல்பாதலையும் கொள்ளும். இதன் பொருள் பெயர்ப் பொருளை முன்னிலையாக அழைப்பதாம். இதை விளி வேற்றுமை என்றும் சொல்லுவர்

(உ-ம்.) அம்மை — அம்மா — ஈறு திரிதல்
அரசன் — அரச — ,, கெடுதல்
அரசன் — அரசனே — ,, மிகுதல்
மக்கள் — மக்காள் — ஈற்றயலெழுத்துத் திரிதல்
ஐயன் — ஐயா — ஈறு கெட்டு அயல் நீளல்
ஐயன் — ஐயே — ,, ,, ,, திரிதல்
ஐயன் — ஐயாவே — ,, ,, ,, நீண்டு ஏகார [மிகுதல்
தம்பி — தம்பி — ஈறு இயல்பாதல்

ந. சூ:—எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்புஅயல்
திரிபு மாம்; பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே. 20

குறிப்பு:—முதல் வேற்றுமைக்கும் இயல்பாக வரும் எட்டாம் வேற்றுமைக்கும் சொல்லால் வேற்றுமை இன்றேனும், பொருளால் வேற்றுமை உண்டு.

## வேற்றுமைத் தொகையும் விரியும்

**66.** வேற்றுமைத் தொகையும் விரியும்: சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடரும்பொழுது இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையிலுள்ள உருபுகள் மறைந்தும் விரிந்தும் வரும். மறைந்து வருவதற்கு வேற்றுமைத் தொகை என்றும் விரிந்து வருவதற்கு வேற்றுமை விரி என்றும் பெயர் வழங்கும்.

(உ-ம்.) வே. தொகை. வே. விரி.

| வே. தொகை. | வே. விரி. |
|---|---|
| மரம் வெட்டினான் | மரத்தை வெட்டினான் |
| கல்லெறிந்தான் | கல்லால் எறிந்தான் |
| கொற்றன் மகன் | கொற்றனுக்கு மகன் |

| | |
|---|---|
| மலைவீழருவி | மலையின் வீழருவி |
| சாத்தன்கை | சாத்தனது கை |
| மலைநெல் | மலையின் கண் நெல் |

## உருபு ஏற்கும்பொழுது திரியும் பெயர்கள்

**67.** யான் யாம் என்னும் தன்மைப் பெயர்களும், நீ, நீர், நீங்கள், என்னும் முன்னிலைப் பெயர்களும், தான் தாம் என்னும் பொதுப்பெயர்களும் வேற்றுமை உருபுகளை ஏற்கும்பொழுது உருவத்தில் மாறுபடும்.

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| யான் | — என் + ஐ | — என்னை |
| யாம் | — எம் + ஐ | — எம்மை |
| நாம் | — நம் + ஐ | — நம்மை |
| நீ | — நின் + ஐ | — நின்னை |
| நீர் | — உம் + ஐ | — உம்மை |
| நீங்கள் | — உங்கள் + ஐ | — உங்களை |
| தான் | — தன் + ஐ | — தன்னை |
| தாம் | — தம் + ஐ | — தம்மை |

## வினைச்சொல்

## (Verbs)

**68.** ஒரு பொருளின் செயலைக் காட்டுகின்ற சொல் வினைச்சொல்லாகும். இவ்வினைச்சொல் வேற்றுமை உருபை ஏற்காமல் காலத்தைக் காட்டி வரும்.

(உ-ம்.) கந்தன் நடக்கிறன்.

குறிப்பு —இதில் நடக்கிறன் என்னும் சொல் கந்தனுடைய செயலைக் காட்டுகிறதென்று அறிக.

**69.** வினைச்சொல்லின் வகை:—இவ் வினைச்சொற்கள் முற்று வினை என்றும், எச்சவினை என்றும் இரண்டு வகைப்படும்.

**70.** முற்று வினைச்சொல், பொருள் முடிந்து நிற்கும் வினைச்சொல்லாம். இது திணை, பால், எண், இடம் முதலியவற்றை உணர்த்தும்.

(உ-ம்.) படித்தான்.

குறிப்பு:—இதில் உயர்திணை, ஆண்பால், படர்க்கை, ஒருமை, முதலியன விளங்குதல் காண்க.

**71.** எச்சவினை:—இது பொருள் முடியாமல் முற்று விகுதி குறைந்து நின்று, கருத்து முடிவதற்கு மற்றொரு சொல்லை வேண்டி நிற்கும்.

(உ-ம்.) உண்டு (வந்தான்).
உண்ட (பையன்).

குறிப்பு:—உண்டு; உண்ட என்ற குறைந்த வினைச்சொற்கள் தங்கள் கருத்து முடிவதற்கு வந்தான், பையன் என்ற சொற்களை முறையே வேண்டி நிற்பதைக் காண்க.

**72.** வினை முற்றின் வகை:—வினை முற்று, தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, படர்க்கை வினை முற்று, ஏவல் வினை முற்று, வியங்கோள் வினை முற்று என ஐந்து வகைப்படும்.

**73.** தன்மை வினை முற்று:—தன்மை இடத்திற்கு உரிய வினை முற்று, தன்மை வினை முற்று ஆகும்.

(உ-ம்.) வந்தேன், வந்தோம், வந்தேம்.

**74.** முன்னிலை வினை முற்று:—முன்னிலை இடத்திற்கு உரிய வினை முற்று, முன்னிலை வினை முற்று ஆகும்.

(உ-ம்.) வந்தாய் வந்தீர்.

**75.** படர்க்கை வினை முற்று:—படர்க்கை இடத்திற்கு உரிய வினை முற்று, படர்க்கை வினை முற்று ஆகும்.

(உ-ம்) வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன.

**76.** ஏவல் வினை முற்று:—முன்னிலை இடத்திற்கு உரியதாய் ஏவுதல் பொருளில் வரும் வினை முற்று, ஏவல் வினை முற்று ஆகும்.

(உ-ம்.) நட, வா.

குறிப்பு:—இவற்றுள் தன்மை, முன்னிலை, ஏவல் இம்மூன்றும் ஒருமை பன்மைகளை உணர்த்தும்; திணையையும், பாலையும் உணர்த்தா. படர்க்கை வினை முற்று, எண்ணோடு பாலையும் உணர்த்தும்.

**77.** வியங்கோள் வினை முற்று:—வியங்கோள் வினை, மரியாதை ஏவல் பொருளில் வரும். (வியம்—ஏவல்; கோள்—கொள்ளுதல்). இது ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாம்.

(உ-ம்.)

வாழ்க. } அவன், அவள், அவர், அது, அவை—படர்க்கை
யான், யாம், நீ, நீர்—தன்மை, முன்னிலை.

## தன் வினை, பிற வினை

## (Transitive, Intransitive and Causal verbs)

**78.** தன் வினை:—கருத்தா தானே செய்கின்ற வினை, தன் வினையாம்.

(உ-ம்.) செய்தான், படித்தான்.

**79.** பிற வினை:—பிற கர்த்தாவின் தொழிலை உணர்த்தும் வினை, பிற வினையாம். தன் வினைச் சொற்களோடு, வி பி, கு, சு, டு, து, பு, று என்னும் விகுதிகளைச் சேர்க்க, பிறவினையாகும்.

| | த. வி. | பி. வி. |
|---|---|---|
| (உ-ம்.) | செய் | —செய்வி |
| | உண் | —உண்பி |
| | போ | —போக்கு |
| | பாய் | —பாய்ச்சு |
| | உருள் | —உருட்டு |
| | நட | —நடத்து |
| | எழு | —எழுப்பு |
| | பயில் | —பயிற்று |

## எச்ச வினையின் வகை

## Kinds of Participles

**80.** எச்சவினைகள், பெயரெச்சம், வினையெச்சம் என இரண்டு வகைப்படும்.

**81.** பெயரெச்சமாவது, பால் காட்டும் விகுதி பெறாது, குறைந்த வினைச்சொல்லாய், பெயரைக் கொண்டு முடியும். (எஞ்சுவது எச்சம்).

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | படித்த | பையன்—இறந்தகாலப் | பெயரெச்சம் |
| | படிக்கின்ற | ,, —நிகழ்காலப் | ,, |
| | படிக்கும் | ,, —எதிர்காலப் | ,, |

**82.** வினையெச்சம்:—பால் காட்டும் விகுதி பெறாது. குறைந்த வினைச்சொல்லாய், வினையைக் கொண்டு முடிவது வினையெச்சமாம். இவ்வினையெச்சம், இன்னொரு வினையெச்சத்தையும், பெயரெச்சத்தையும், வினைமுற்றையும் கொண்டு முடியும்.

| | | |
|---|---|---|
| (உ-ம்.) | உண்டு வந்து போனான் | இறந்தகால வினையெச்சம். |
| | உண்டு வந்த பையன் | |
| | உண்டு வந்தான். | |

(இவற்றில் 'உண்டு' என்னும் வினையெச்சம் வேறொரு வினையெச்சத்தையும், பெயரெச்சத்தையும், வினைமுற்றையும் கொண்டு முடிந்தது காண்க.)

| | | |
|---|---|---|
| படிக்க வந்தான் | — | நிகழ்கால வினையெச்சம். |
| உண்ணின் (உரம் பெறுவான்)<br>உண்டால் (உரம் பெறுவான்)<br>உண்டக்கால் (உரம் பெறுவான்) | | எதிர்கால வினையெச்சம் |

ரு. சூ:—தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே. 21

## உடன்பாடு—எதிர்மறை

## (Affirmative and Negative)

**83.** வினைச்சொல் தொழிலின் நிகழ்ச்சியை உணர்த்தும்போது உடன்பாட்டு வினையென்றும், தொழில் நிகழாமையை உணர்த்தும்போது எதிர்மறை வினையென்றும் சொல்லப்படும்.

(உ-ம்) குமரன் வந்தான். — உடன்பாடு
குமரன் வந்திலன். — எதிர்மறை

**84.** எச்சங்கள் தொழிலின் நிகழ்ச்சியை உணர்த்தும் பொழுது உடன்பாட்டு வினையெச்சம், உடன்பாட்டுப் பெயரெச்சமெனவும், தொழில் நிகழாமையை உணர்த்தும்போது, எதிர்மறை வினையெச்சம், எதிர்மறைப் பெயரெச்சமெனவும் வழங்கப்படும்.

(உ-ம்.) உண்டு வந்தான் — உடன்பாட்டு வினையெச்சம்
உண்ணாமல் வந்தான் — எதிர்மறை ,,
படித்த பையன் — உடன்பாட்டுப் பெயரெச்சம்
படியாத பையன் — எதிர்மறைப் ,,

குறிப்பு:—எதிர்மறைப் பெயரெச்சமும், எதிர்மறை வினையெச்சமும் ஈறு கெட்டும் வரும். அப்பொழுது முறையே ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்றும், ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சம் என்றும் சொல்லப்படும்.

(உ-ம்) ஓடாக் குதிரை — ஓடாத குதிரை
நடவா நின்றது — நடவாது நின்றது.

## பகுபத உறுப்புக்கள்

## (Parts of the primitive word)

**85.** பகுபதங்கள் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறு உறுப்புக்களாகப் பகுக்கப்படும். இவற்றுள் பகுதி, விகுதி ஆகிய இரண்டும் முக்கிய உறுப்புக்களாகும்.

**86.** பகுதி (Root):—பகுபதங்களில் முதலில் நிற்கும் பகாப்பதங்களே பகுதியாகும். இப்பகுதிகளே முதல் நிலையாம்.

(உ-ம்.) வலைஞன், உண்டான். பொன்னன்—இவற்றுள் வலை, உண், பொன் என்பன முறையே பகுதிகளாகும்.

குறிப்பு:—வினைப் பகுதிகள் தொழிலை உணர்த்தும்.

**87.** விகுதி (Termination):—பகுபதத்தின் இறுதியில் நிற்கும் உறுப்பு விகுதி எனப்படும். இது கடை நிலை என்றும், இறுதி நிலை என்றும் சொல்லப்படும். இவ் விகுதியால் திணை, பால், எண், இடம் இவற்றை அறியலாம்.

(உ-ம்.) படித்தான்—இதில் ஆன் விகுதியாகும்.. இவ் விகுதி உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை முதலியவற்றை உணர்த்துதல் காண்க.

**88.** அன், ஆன் என்பன உயர்திணை ஆண்பால் படர்க்கை ஒருமையை உணர்த்தும் விகுதிகளாம்.

(உ-ம்) வந்தனன்—அன் விகுதி
வந்தான் —ஆன் விகுதி

**89.** அள், ஆள் என்பன உயர்திணைப் பெண்பால் படர்க்கை ஒருமையை உணர்த்தும்.

(உ-ம்) சென்றனள், சென்றாள்—அள், ஆள் விகுதிகள்.

**90.** அர், ஆர், ப, மார், கள் என்பன உயர்திணைப் பலர்பால் படர்க்கைப் பன்மையை உணர்த்தும். இவற்றுள் மார் விகுதி வினையொடு முடியும்; கள் விகுதி, விகுதிமேல் விகுதியாய் வரும்.

(உ-ம்) கற்றனர், கற்றார், கற்ப, கொண்மார் (வந்தார்)—வினையொடு முடிந்தன; செல்வார்கள்—கள் விகுதிமேல் விகுதியாய் வந்தது.

**91.** து, று, டு என்பன அஃறிணை ஒன்றன்பால் ஒருமையை உணர்த்தும்.

(உ-ம்) வந்தது ஆயிற்று உண்டு.

**92.** அ, ஆ என்பன அஃறிணைப் பலவின்பால் படர்க்கைப் பன்மையை உணர்த்தும். இவற்றுள் ஆ, எதிர்மறையில் மாத்திரம் வரும்.

(உ-ம்) உண்டன உண்ணா.

**93.** என், ஏன், அல், அன் என்பன தன்மை ஒருமை வினை முற்று விகுதிகளாம்.

(உ-ம்) உண்டனென், உண்டேன், செல்வல், செய்வன்.
குறிப்பு:—அல் விகுதி எதிர்காலத்தில் மாத்திரம் வரும்.

**94.** அம், ஆம், எம், ஏம் ஓம் என்பன தன்மைப் பன்மை வினை முற்று விகுதிகளாம்.

(உ - ம்.) கூறினம், கூறுவாம், செய்தனெம், செய்தேம், செய்தோம்.

குறிப்பு:—அம், ஆம் விகுதிகள் பெரும்பாலும் செய்யுளிலே வரும்.

**95.** ஐ, ஆய், இ என்பன முன்னிலை ஒருமை வினை முற்று விகுதிகளாம்.

(உ - ம்.) கண்டனை, கண்டாய், காணுதி.

குறிப்பு:—இகர விகுதி இடைநிலையின்றித் தானே எதிர் காலத்தைக் காட்டும்.

**96.** இர், ஈர் என்பன முன்னிலைப் பன்மை வினை முற்று விகுதிகளாம்.

(உ - ம்.) உண்டனிர், உண்டீர்.

**97.** ஆய் என்னும் விகுதி, ஏவல் ஒருமை வினைமுற்று விகுதியாகும்.

(உ - ம்.) நடவாய், படிப்பாய்.

குறிப்பு:—இவ்விகுதி பெரும்பாலும் குன்றியே வரும்.

**98.** மின், ஈர், உம் என்பன ஏவல் பன்மை வினை முற்று விகுதிகளாம்.

(உ - ம்) செய்மின், நடவீர், உண்ணும்.

**99.** க, இய, இயர் என்பன வியங்கோள் வினை முற்று விகுதிகளாம். இவை ஐம்பால் மூவிடங்களிலும் வரும்.

(உ - ம்.) வாழ்க, வாழிய, வாழியர் } நான், நாம், நீ, நீர், அவன், அவள், அவர், அது, அவை.

குறிப்பு:—இவ்வினை முற்றில் ஒருமை பன்மை என்னும் வேறுபாடு இல்லை.

## இடைநிலை
## (Particles)

**100.** வினைச்சொல்லில் முதல் நிலைக்கும் இறுதி நிலைக்கும் இடையிலுள்ள உறுப்பு இடைநிலை எனப்படும்.

(உ-ம்.) அறிஞன்—அறி, பகுதி; ஞ், பெயர் இடைநிலை; அன், விகுதி. ஞ், பெயரிடைநிலையாதலால், காலம் காட்டாது.

தின்றான் - தின், பகுதி; ற், இடைநிலை; ஆன், விகுதி. ற், வினை இடைநிலையாதலால், காலம் காட்டிற்று.

## காலம்
## (Tense)

**101.** இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் எனக் காலம் மூன்றாகும்.

குறிப்பு:—நடந்த தொழிலைக் குறிப்பது இறந்தகாலமாகும்; நடக்கிற தொழிலைக் குறிப்பது நிகழ்காலமாகும்; நடக்கப்போகிற தொழிலைக் குறிப்பது எதிர் காலமாகும்.

(உ-ம்.) நடந்தான், நடக்கிறான், நடப்பான்.

## காலம் காட்டும் இடைநிலைகள்

**102.** இறந்த கால இடைநிலைகள்:—த், ட், ற், இன் என்னும் நான்கும் ஐந்து பாலிலும், மூன்று இடங்களிலும் இறந்த காலத்தைக் காட்டும் இடைநிலைகளாம்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | செய்தான் | (செய்+த்+ஆன்)—த் | இடைநிலை |
| | உண்டான் | (உண்+ட்+ஆன்)—ட் | ,, |
| | சென்றான் | (செல்+ற்+ஆன்)—ற் | ,, |
| | பேசினான் | (பேசு+இன்+ஆன்)—இன் | ,, |

குறிப்பு:—இப்படியே ஐந்து பாலுக்கும் கொள்க.

ந. சூ:—தடறவொற் றின்னே ஐம்பால் மூவிடத்து
இறந்த காலம் தருந்தொழில் இடைநிலை. 23.

**103.** நிகழ்கால இடைநிலை:—கிறு, கின்று, ஆநின்று என்னும் மூன்றும் ஐந்து பாலிலும், மூன்று இடங்களிலும் நிகழ் காலத்தைக் காட்டும் இடைநிலைகளாம்.

(உ - ம்.) உண்கிறான் (உண் + கிறு + ஆன்)—கிறு இடைநிலை
உண்கின்றான் (உண் + கின்று + ஆன்)—கின்று ,,
உண்ணாநின்றான் (உண் + ஆநின்று + ஆன்)—ஆநின்று ,,

ந. சூ:—ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை. 24.

**104.** எதிர்கால இடைநிலை:—ப், வ் என்னும் இரண்டும் ஐந்து பாலிலும், மூன்று இடங்களிலும் எதிர் காலத்தைக் காட்டும் இடைநிலைகள்.

(உ - ம்.) தின்பான் (தின் + ப் + ஆன்)—ப் இடைநிலை
செய்வான் (செய் + வ் + ஆன்)—வ் இடைநிலை

ந. சூ:—பவ்வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது
இசைவினை இடைநிலை யாம்இவை சிலஇல. 25.

குறிப்பு:—சில சொற்களில் இடைநிலை காலங்காட்டாது. விகுதி காலம் காட்டுதலும், பகுதி இரட்டித்துக் காலம் காட்டுதலும் உண்டு.

(உ - ம்.) வருக—இதில் ககர விகுதி எதிர்காலம் காட்டிற்று. தொட்டான் (தொடு + ஆன்)—தொடு என்னும் பகுதி தொட்டு என இரட்டித்துக் காலங் கட்டுதல் காண்க.

## இடைச்சொல்

## (Particles)

**105.** தனித்து வழங்காது, பெயர் வினைகளை அடுத்து வருவது இடைச் சொல்லாகும்.

**106.** இடைச்சொற்கள்:—வேற்றுமை உருபுகளும், விகுதிகளும், இடைநிலைகளும், சாரியைகளும், உவம உருபுகளும், சுட்டும், வினாவும், குறிப்பும், இசைநிறையும், அசை நிலையும், ஏ, ஓ, உம் முதலியவைகளும் இடைச்சொற்களாம்.

(உ - ம்·) 1. வேற்றுமையுருபுகள்—ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலியன.

2. விகுதிகள்—அன், ஆன், அள், ஆள், முதலியன

3. இடைநிலைகள்—த், ட், ற், இன் முதலியன.

4. சாரியைகள்—அன், ஆன், அற்று, அத்துமுதலியன.

5. உவம உருபுகள்—போல, ஒப்ப, அன்ன, இன்ன முதலியன.

6. சுட்டுக்கள்—அ, இ, உ.

7. வினாக்கள்—ஆ, எ, ஏ, ஓ.

8. குறிப்பு இடைச்சொற்கள்—பொள்ளென, திடுக்கென.

9. இசைநிறைகள் பொருள் இன்றிச் செய்யுளில் வரும் ஏ, ஓ முதலியன.
(உ - ம்) ஏ ஏ இவளொருத்தி பேடி.

10. அசைநிலை—பொருள் தாராது அசைத்து நிற்பவை.
(உ - ம்.) மொழிமோ.

11. தத்தம் பொருள் உணர்த்துவன—ஏ, ஓ, உம் முதலியன.

## உரிச்சொல்

## (Qualifying words)

**107.** பெயரையாவது, வினையையாவது தழுவி, அவற்றின் குணத்தை விளக்கும் சொல் உரிச்சொல் எனப்படும். அவை, சால, உறு, தவ. நனி, கழி, கூர் முதலியன.

குறிப்பு:—இவைகளுக்குத் திணை, பால் இடம், வேற்றுமை, காலம் முதலிய பாகுபாடுகள் இல்லை.

# III. புணரியல்

## (Combination of words)

**108.** நிலைமொழியும், வருமொழியும் ஒன்றுபடப் புணர்வது புணர்ச்சியாகும்.

**109.** தொடர்ந்து வந்த இரண்டு வார்த்தைகளில் முதலில் நிற்பது நிலைமொழி எனவும், பின் நிற்பது வருமொழி எனவும் பெயர் பெறும்.

(உ-ம்.) மலை+பெரிது—மலை பெரிது—இதில் மலை நிலைமொழி ; பெரிது வருமொழி.

**110.** நிலைமொழியின் ஈற்றெழுத்தை நோக்க, அந் நிலைமொழி உயிரீறு, மெய்யீறு என இரு வகைப்படும்.

(உ-ம்.) 1. பனை+பெரிது—(பனை என்ற நிலைமொழியின் ஈற்றில் ஐ என்னும் உயிரெழுத்து இருப்பதால், இது உயிரீறு ஆயிற்று.)

2. மரம்+வளர்ந்தது—(மரம் என்ற நிலைமொழி ஈற்றில் மெய்யெழுத்து இருப்பதால், இது மெய் ஈறாயிற்று.)

**111.** வருமொழியின் முதலும், இவ்வாறே உயிர் முதல், மெய்ம்முதல் என இரு வகைப்படும்.

(உ-ம்.) ஆடு+ஆடிற்று (ஆடிற்று என்ற வருமொழியின் முதலில் உயிரெழுத்து இருப்பதால் உயிர் முதலாயிற்று.)

கோழி+கூவிற்று. (கூவிற்று என்ற வருமொழியின் முதலில் உயிர்மெய்யெழுத்து இருப்பதால், மெய்ம் முதல் ஆயிற்று)

குறிப்பு:—உயிர், மொழிக்கு முதலில் வரும்பொழுது தனித்தும், இறுதியில் வரும்பொழுது மெய்யெழுத்தோடு கூடியும் வரும். மெய், முதலில் வரும்பொழுது உயிரெழுத்தோடு கூடியும், இறுதியில் வரும்பொழுது தனித்தும் வரும்.

**112.** இப்புணர்ச்சி இயல்பு புணர்ச்சி என்றும், விகாரப்புணர்ச்சி என்றும் இரு வகைப்படும்.

**113.** இயல்பு புணர்ச்சியாவது, நிலைமொழியும் வருமொழியும் விகாரம் இன்றிப் புணர்வதாம்.

(உ-ம்) மலை + பெரிது—மலை பெரிது.
பால் + இனிது—பாலினிது.

ந. சூ:—விகாரம் அனைத்தும் மேவலது இயல்பே. 26.

**114.** விகாரப்புணர்ச்சியாவது, நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்களைப் பெற்றுப் புணர்வதாகும். இவ்விகாரங்கள் சொல்லின் முதல், இடை, கடை என்னும் மூன்று இடங்களிலும் வரும்.

**115.** தோன்றலாவது, நிலைமொழியும் வருமொழியும் தம்மில் புணரும்பொழுது இடையில் எழுத்தாவது சாரியையாவது தோன்றுதலாம்.

(உ-ம்.) மலை + சிகரம்—மலைச் சிகரம்—இதில் ச் என்னும் எழுத்துத் தோன்றியது.
கரும்பு + சாறு—கருப்பஞ்சாறு—இதில் அம் சாரியை தோன்றியது.

**116.** திரிதலாவது, நிலை மொழியும், வருமொழியும் தம்மில் புணரும்போது நிலை மொழியின் ஈறுவது, வருமொழியின் முதலாவது, இரண்டுமாவது திரிவதாம்.

(உ - ம்.)

பொன் + குடம் = பொற்குடம்—நிலைமொழி ஈறு திரிந்தது.

பொன் + நீது = பொன்றீது —வருமொழி முதல் திரிந்தது.

எள் + நெய் = எண்ணெய் —நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் திரிந்தன.

**117.** கெடுதலாவது, நிலைமொழியும், வருமொழியும் தம்மில் புணரும்போது நிலைமொழியின் ஈறு கெடுவது.

(உ - ம்.) மரம் + வேர் = மரவேர்—இதில் மகரவொற்றுக் கெட்டது.

குறிப்பு:—பதங்கள் புணரும்போது ஒருவிகாரமேயன்றி இரண்டு விகாரங்களும், மூன்று விகாரங்களும் வரவும் பெறும்.

(உ - ம்.) நிலம் + பனை = நிலப்பனை (கெடுதலும் தோன்றலும்.)

பனை + காய் = பனங்காய்—கெடுதலும், தோன்றலும், திரிதலும்.

ந. சூ:—தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழிமூ விடத்து மாகும். 27

## உயிரீற்றின் முன் உயிர் புணர்தல்

**118.** இ, ஈ, ஐ என்ற இம்மூன்று உயிரீற்றுச் சொல்லின் முன்னும் வருமொழி முதலில் உயிர் வந்தால், இடையில் யகரம் உடம்படு மெய்யாகத் தோன்றும்.

(உ - ம்.) மணி + அழகு = மணியழகு
தீ + ஒளி = தீயொளி
மலை + உயர்ந்தது = மலையுயர்ந்தது.

**119.** அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஏழு உயிரீற்றின் முன்னும் உயிர் முதல் மொழி வந்தால், இடையில் வகரம் உடம்படுமெய்யாகத் தோன்றும்.

(உ - ம்.) பல + அரசர் = பலவரசர்

மா + இலை = மாவிலை

திரு + அடி = திருவடி

பூ + அழகு = பூவழகு

நோ + அழகு = நொவ்வழகு

கோ + இல் = கோவில்

கௌ + அழகு = கௌவழகு

**120.** ஏகார ஈற்றுச்சொல்லின் முன் உயிர் வந்தால், இடையில் யகரமேனும் வகரமேனும் உடம்படுமெய்யாகத் தோன்றும்.

(உ - ம்.) அவனே + அழகன் = அவனேயழகன்

சே + அடி = சேயடி, சேவடி

ந. சூ:—இஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும். 28.

## உயிர்முன் வல்லினம் புணர்தல்

**121.** இயல்பாகவேனும் விதியாகவேனும் நிலைமொழி ஈறாக நின்ற உயிரின் முன் வருமொழி முதலில் வரும் க, ச, த, ப என்னும் வல்லின மெய்கள் பெரும்பாலும் மிகும்.

(உ - ம்.) தேடி + சென்றான் = தேடிச்சென்றான் } இயல்பு ஈறு
வாழை + பழம் = வாழைப்பழம் }

மரம் + கதவு = மரக்கதவு | விதி உயிரீறு
மரம் + வேர் = மரவேர் |

குறிப்பு:—இயல்பு உயிரீறு ஆவது, விகாரமின்றி இயல்பாகவே ஈற்றில் நிற்கும் உயிர். (உ - ம்.) வாழை + பழம் =

வாழைப்பழம். விதி உயிரீறுவது, மெய்யீற்றுச் சொல் ஒரு விதி பற்றி ஈறு கெட்டு, உயிரீறாக நிற்பது. (உ-ம்.) மரம்+கதவு = மரக்கதவு.

ந. சூ:—இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும்; வித வாதன மன்னே. 29.

**122.** பூ என்னும் பெயர்ச்சொல்லின்முன் வரும் வல்லினம் மிகுதலன்றி, அதற்கு இனமாகிய மெல்லினமும் தோன்றும்.

(உ-ம்.) பூ + கொடி = பூக்கொடி—வலி மிக்கது.

பூ + கொடி = பூங்கொடி
பூ + தோட்டம் = பூந்தோட்டம் } இனமாகிய மென்மை தோன்றல்.

ந. சூ:—பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும். 30.

**123.** கேடும் திரிபும்:— குற்றியலுகரத்திற்கு முன் உயிர் வந்தால், அவ்வுகரம் தனக்கு இடமாகிய மெய்யை விட்டு நீங்கும். யகர முதல் மொழி வந்தால், அவ்வுகரம் இகரமாகத் திரியும்.

(உ-ம்.) நாடு + ஆண்டான் = நாடாண்டான்.—இதில் உகரம் கெட்டது.

காடு + யாது? = காடியாது?—இதில் வருமொழி முதலில் யகரம் வர, குற்றியலுகரம் இகரமாகத் திரிந்தது.

ந. சூ:—உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்;
யவ்வரின் இய்யாம்; முற்றும்அற்று ஒரோவழி. 31.

## கேடும், திரிபும், மிகலும்

**124.** மகர ஈற்றுச்சொல்லின் முன் உயிரும் வல்லினமும் வர, மகரவீறு கெட்டு, உயிரீறு போலப் புணரும். வல்லினம் வந்தால், மகரம் கெடாது, அதற்கு இனமாகிய மெல்லெழுத்தாகத் திரியும்.

(உ - ம்.) மரம் + அடி = மரவடி—மகரங்கெட்டு உயிரீறு போல வகர உடம்படுமெய் பெற்றது.
மரம் + கட்டை = மாக்கட்டை—மகரம் கெட்டு உயிரீறு போல ஒற்று மிகுந்தது.
குளம் + கரை = குளங்கரை—மகரம் ககரத்துக்கு இனமாகிய ஙகரமாகத் திரிந்தது.

ந. சூ:—மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும். 32

## மெய்யீற்றின் முன் உயிர் புணர்தல்

**125.** நிலைமொழி ஈற்றிலுள்ள மெய்யெழுத்தின் முன் வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால், அவ்வுயிர் மெய்யெழுத்தோடு சேரும்.

(உ - ம்.) வேல் + எறிந்தான் = வேலெறிந்தான்.
பால் + அருந்தினன் = பாலருந்தினன்.

ந. சூ:—உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே. 33

**126.** தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த மெய்யின் முன் வருமொழி முதலில் உயிர் வந்தால், அம்மெய் இரட்டிக்கும்.

(உ - ம்.) கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்.
பொன் + அழகு = பொன்னழகு.

ந. சூ:—தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும். 34

**127.** ணகரச் சாரியை பெறுதல்:—ஆ, மா, கோ *என்ற மூன்று பெயர்களும் வேற்றுமை உருபுகளை ஏற்கும் பொழுது இயல்பாகப் புணர்தலன்றி, ணகரச் சாரியை பெறுதலும் உண்டு.*

(உ-ம்.) ஆ + ஐ = *ஆவை, ஆனை*
*மா* + ஐ = *மாவை, மானை*
*கோ* + ஐ = *கோவை, கோனை*

குறிப்பு:—*ஆமா* + ஐ = *ஆமாவை, ஆமானை என வருதலும் கொள்க.*

ந. சூ:—ஆமா கோனவ் வணையவும் பெறுமே. 35

நான்காம் பாரப் பகுதி முற்றிற்று.

# V FORM

## I எழுத்து.

## (Letters)

### சுட்டெழுத்து

### (Demonstrative Letters)

அகச்சுட்டு—புறச்சுட்டு

**1.** சுட்டு:—அ, இ, உ என்ற மூன்று உயிரெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வந்து சுட்டுப்பொருளைத் தரும் போது சுட்டெழுத்தாகும். (சுட்டுதல் - ஒரு பொருளைக் குறித்துக் காட்டல்)

**2.** அகச்சுட்டு:— இச்சுட்டெழுத்துக்கள் சொல்லுக்குள் நின்று சுட்டும்பொழுது அகச்சுட்டாகும்.

புறச்சுட்டு:—இவ்வெழுத்துக்கள் சொல்லின் புறத்தே நின்று சுட்டும்பொழுது புறச்சுட்டாகும்.

(உ-ம்) அவன், இவன், உவன்—அகச்சுட்டு
அம்மனிதன், இம்மனிதன், உம்மனிதன்—புறச்சுட்டு.

குறிப்பு:—அவன் என்ற சொல்லிலிருந்து அ என்னும் எழுத்தைப் பிரித்தால், மீதியிருக்கும் விகுதிக்குப் பொருள் இல்லாமையால், இச்சுட்டெழுத்துச் சொல்லுக்குள் அமைந்தது. ஆகையால், இஃது அகச்சுட்டாகும்.

அம்மனிதன் என்ற சொல்லிலிருந்து அ என்னும் சுட்டெழுத்தைப் பிரித்தால், மீதி இருக்கும் சொல்லாகிய மனிதன் என்

னும் சொல்லுக்குப் பொருளிருப்பதால், சுட்டெழுத்துச் சொல்லுக்குப் புறத்தே அமைந்தது. ஆகையால், இது புறச்சுட்டாகும்.

அகரம் சேய்மையிலுள்ள பொருளையும், இகரம் அண்மையிலுள்ள பொருளையும், உகரம் இடையிலுள்ள பொருளையும் உணர்த்தும்.

ந. சூ:—அஇ உம்முதல் தனிவரில் சுட்டே. 1.

## வினாவெழுத்து

### (Interrogative letters)

**3.** வினா:— எ, யா என்ற இரண்டு எழுத்தும் மொழி முதலிலும், ஆ, ஓ என்னும் இரண்டும் மொழி இறுதியிலும், ஏ, மொழி முதலிலும் இறுதியிலும் நின்று வினாப் பொருளைத் தருமாயின், வினாவெழுத்துக்களாகும். (வினா-கேள்வி).

அக வினா—புற வினா

**4.** அக வினா:— இவ்வெழுத்துக்கள் சொல்லின் அகத்தே இருந்து வினாப் பொருளைத் தந்தால், அக வினா எனப்படும்.

(உ-ம்.) எவன்? யாவன்? ஏவன்?

குறிப்பு:—எ, யா, ஏ என்ற இம்மூன்று எழுத்துக்களும் சொற்களின் அகத்தே வந்து வினாப் பொருளைத் தருதலின், அக வினாவாயின.

**5.** புற வினா:—ஒரு சொல்லின் புறத்தே வினாவெழுத்துக்கள் நின்று வினாப் பொருளைத் தந்தால், புறவினா எனப்படும்.

(உ-ம்.) எத்தேசம்? யாங்ஙனம்?

குறிப்பு:—எ, யா என்பன மொழிக்கு முதலில் வந்து புற வினாவாயின.

(உ - ம்) அண்ணனா? (அண்ணன் + ஆ)
அண்ணனோ ? (அண்ணன் + ஓ)
அண்ணனே? (அண்ணன் + ஏ)

குறிப்பு:—ஆ, ஓ, ஏ என்பன மொழிக்கு இறுதியில் வந்து புறவினாவாயின. மொழிக்கு இறுதியிலே வரும் வினா, எப்பொழுதும் புற வினாவாகவே வரும்.

யா என்னும் எழுத்து மொழிக்கு முதலில் அக வினாவாகவும் புற வினாவாகவும் வரும்.

(உ - ம்.) யாது? யாங்ஙனம்?

ந. சூ:—எயா முதலும் ஆஓ ஈற்றும்
ஏஇரு வழியும் வினாவா கும்மே. 2.

## இனவெழுத்து
## (Kindred Letters)

**6.** இனவெழுத்து:—பிறப்பு, அளவு, வடிவம் முதலியவற்றால் ஒன்றுக்கொன்று சம்பந்தமுடைய எழுத்துக்கள் இனவெழுத்துக்களாகும்.

**7.** உயிரெழுத்துக்களுள் நெட்டெழுத்துக்களுக்கு அவற்றின் குற்றெழுத்துக்களே இனமாகும்.

(உ - ம்.)

| நெடில் | குறில் |
|---|---|
| ஆ | அ |
| ஈ | இ |
| ஊ | உ |
| ஏ | எ |
| ஐ | இ |
| ஓ | ஒ |
| ஔ | உ |

குறிப்பு:—இவ்வெழுத்துக்கள் உருவத்தாலும் ஒலியாலும் இனமாயினமை காண்க. ஐகாரம் ஔகாரம் என்னும் இரண்டும் தமக்கென்று இனம் இல்லாமையால், ஒத்த ஒலியை உடைய இகர உகரங்களைத் தமக்கு இனமாகக் கொண்டன.

**8.** மெய்யெழுத்துக்கள் பதினெட்டினுள் வல்லோசையுடைய ஆறுக்கும் மெல்லோசையுடைய ஆறும் இனம்.

(உ - ம்.) க-ங, ச-ஞ, ட-ண, த-ந, ப-ம, ற-ன.

குறிப்பு:—ய, ர, ல, வ, ழ, ள என்னும் இடை எழுத்துக்களுக்கு இனம் இல்லை.

ந. சூ:—ஐஔ இஉச் செறிய முதலெழுத்து
இவ்விரண்டு ஓரின மாய்வரல் முறையே. 3.

## மாத்திரை
## (Quantity)

**9.** எழுத்துக்கள் ஒலிக்கப்படுவதற்குள்ள கால அளவே மாத்திரை எனப்படும். கண்ணிமைப் பொழுதும், கைந்நொடிப் பொழுதும் ஒரு மாத்திரை அளவாம்.

ந. சூ:—இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை. 4.

**10.** குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று. நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டு. மெய்யெழுத்திற்கும் குற்றியலுகரத்திற்கும், குற்றியலிகரத்திற்கும், ஆய்த எழுத்திற்கும் தனித்தனி மாத்திரை அரை. உயிர்மெய் எழுத்திற்கு அம்மெய்யின்மேல் ஏறிய உயிர் மாத்திரையே மாத்திரையாகும்.

குறிப்பு:—இசையிலும், பண்ட மாற்றிலும், புலம்பலிலும், விளித்தலிலும் மேற்சொல்லிய உயிரெழுத்தும், மெய்யெழுத்தும் தமக்குரிய அளவைக் கடந்து ஒலிக்கும்.

(உ - ம்) கீரையோஒ கீரை —பண்ட மாற்றல்
ஐயோஒ! மகனே! —புலம்பல்
தம்பீஇ, வா. —விளித்தல்
சாஅஅ, ரீஇ, காஅஅ —இசை

(பண்ட மாற்றல்—ஒரு பண்டத்தைக் கொடுத்து மற்றொரு பண்டம் வாங்குதல்.)

ரு. சூ:—ஆவியும் ஒற்றும் அளவிறந்து இசைத்தலும்
மேவும் இசைவிளி பண்டமாற்று ஆதியின். 5.

## மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

### ( Initial letters )

**11.** ஒரு சொல்லிலுள்ள எழுத்துக்களை முதலெழுத்தென்றும், இடையெழுத்தென்றும, கடையெழுத்தென்றும் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

**12.** மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்:—பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங என்ற பத்து உயிர்மெய் எழுத்துக்களும் தமிழ் மொழியின் முதலில் வரும் எழுத்துக்களாம்.

(உ-ம்.) அடை, ஆடை, இலை, ஈடு, உடல், ஊஞ்சல், எடு, ஏடு, ஐயம், ஒப்பு, ஓதி, ஔவியம்.

கறுப்பு, சரடு, தளிர், நன்மை, பகை, மலை, வம்பு யாப்பு, ஞாயிறு, ஙனம் (விதம்)

குறிப்பு:—மெய்யெழுத்துக்கள் தனித்து மொழி முதலாகா; ஆகவே, உயிரோடு கூடியே மொழி முதலாகும். விலக்கப்பட்ட எழுத்துக்களை மொழி முதலாகக் கொண்ட வழக்குச் சொற்கள் தமிழ்ச்சொற்கள் ஆகா.

ந. சூ:—பன்னீ ருயிரும் கசதந பமவய
ஞஙவீ ரைந்துயிர் மெய்யும் மொழிமுதல். 6.

**13.** உயிரோடு கூடி மொழிக்கு முதலில் வரும் பத்து உயிர்மெய்களுள் க, ச, த, ந, ப, ம என்னும் ஆறு மெய்யெழுத்துக்களும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களோடும் கூடி மொழிக்கு முதலாகும்.

(உ-ம்) கண், காது, கிளி, கீழ், குடை, கூடை, கெடு கேடு, கையன், கொடு, கோடு, கௌவை.

குறிப்பு:—மற்றவைகளுக்கும் இவ்வாறே கொள்க.

**14.** வகரமெய், அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்னும் எட்டு உயிரோடுங் கூடி மொழிக்கு முதலாகும்.

(உ-ம்.) வலை, வாழை, விளை, வீடு, வெளி, வேம்பு, வைக்கோல், வௌவால்.

ந. சூ:—உஊ ஒஓ அலவொடு வம்முதல். 7.

**15.** யகரமெய், அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிரெழுத்துக்களோடுங் கூடி மொழிக்கு முதலாகும்.

(உ-ம்.) யவனர், யானை, யுகம், யூகம், யோகி, யௌவனம்.

ந. சூ:—அஆ உஊ ஓஔ யம்முதல். 8.

**16,** ஞகரமெய், அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிர் எழுத்துக்களோடுங் கூடி மொழிக்கு முதலாகும்.

(உ-ம்.) ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கியது (இளைத்தது.)

ந. சூ:—அஆஎ ஒவ்வோடு ஆகும் ஞம்முதல். 9.

## போலியின் வகை

## (Kinds of the interchange)

**17.** போலி, முதற்போலி, இடைப்போலி, கடைப் போலி என மூன்று வகைப்படும்.

**18.** முதற்போலியாவது, சொல்லின் முதலில் ஓர் எழுத்து இருந்தவிடத்து வேறோர் எழுத்து வந்து பொருள் வேறுபாடின்றி நிற்பதாம். (போல நிற்பது போலியாகும்).

(உ - ம்.) பசல்—பைசல்
மஞ்சு—மைஞ்சு
பயல்—பையல்
(சகர, ஞகர, யகரங்களுக்கு முன்னே நின்ற அகரத்திற்கு ஐகாரம் போலியாயிற்று).

**19.** இடைப்போலியாவது, சொல்லின் இடையில் நின்ற ஓர் எழுத்திற்கு மற்றோர் எழுத்துப் போலியாய் வருவது.

(உ - ம்.) அமச்சு —அமைச்சு
இலஞ்சி—இலைஞ்சி
அரயன் —அரையன்
(சகர, ஞகர, யகரங்களுக்கு முன்னே இடையில் நின்ற அகரத்திற்கு ஐகாரம் போலியாயிற்று).

குறிப்பு:—சில மொழிகளின் கடையிலுள்ள தகர நகரங்களுக்குச் சகர ஞகரங்கள் போலியாக வரும்.

(உ - ம்.) உய்ந்தான்=உய்ஞ்சான்
நீந்தினன் =நீஞ்சினன், ஐந்து=அஞ்சு.

ந. சூ:—அ ஐ முதல் இடை ஒக்கும் சஞயமுன். 10.

**20.** கடைப்போலியாவது, சொல்லின் கடையில் நின்ற ஓர் எழுத்திற்கு மற்றோர் எழுத்துப் போலியாய் வருவது. இஃது இறுதிப் போலி என்றும் சொல்லப்படும்.

சில அஃறிணைப் பெயர்களின் இறுதியிலுள்ள மகரத்திற்கு னகரம் போலியாய் வரும்.

(உ - ம்.) நிலம்—நிலன் } மகரத்திற்கு னகரம்போலியாய் வந்தது.
அகம்—அகன்
கலம்—கலன்

ந. சூ:—மகர இறுதி அஃறிணைப் பெயரின்
னகரமோடு உறழா நடப்பன உளவே. **11.**

**21.** சில சொற்களின் இறுதியிலுள்ள லகரத்திற்கு ரகரம் போலியாய் வரும்.

(உ - ம்.)பந்தல் - பந்தர், குடல் - குடர்.

**22.** சில குற்றியலுகரங்களுக்கு அர் என்பது போலியாய் வரும்.

(உ - ம்.) வண்டு-வண்டர், சுரும்பு-சுரும்பர், மாது-மாதர்.

**23.** சில சொற்களின் இறுதியிலுள்ள மகரத்திற்கு லகரம் போலியாக வரும்.

(உ - ம்.) திறம் - திறல், பக்கம் - பக்கல்.

**24.** சில சொற்களின் இறுதியிலுள்ள லகரத்திற்கு ளகரம் போலியாகும்.

(உ - ம்.) மதில் - மதிள்.

## II. சொல்

### வடசொல்

**25.** ஆரியச் சொல் தமிழில் வந்து வழங்கும்போது வடசொல் எனப்படும் (ஆரியம் - சம்ஸ்கிருதம்)

**26.** அவ்வடசொல், தற்சமம், தற்பவம் என இரு வகைப்படும்.

**27.** வடசொல் தனக்கு உரிய ஒலியில் மாறுபடாமல் விகாரமின்றித் தமிழில் வழங்குமானால், தற்சமம் எனப்படும். (தற்சமம் - அதற்கு ஒப்பானது)

இச்சொற்கள் ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவாயுள்ள எழுத்துக்களால் ஆக்கப்படும்.

(உ - ம்.) கமலம், காரணம், குங்குமம்.

**28.** வடசொல், தனக்கு உரிய ஒலியில் மாறுபட்டு, விகாரத்தோடு தமிழில் வழங்கும்போது தற்பவம் எனப்படும். (தற்பவம்-அதினின்றும் பிறந்தது.)

| ஆரியச் சொல் | வடசொல் தற்பவம் |
|---|---|
| மாலா | மாலை |
| தயா | தயை |
| ரத்நம் | அரதனம் |
| பங்கஜம் | பங்கயம் |
| புஷ்பம் | புட்பம் |
| ஹரன் | அரன் |

## பெயர்ச்சொல்

**29.** காரண இடுகுறிப்பெயர்:— காரண இடுகுறிப் பெயராவது, காரணம் கருதிய பொழுது அக்காரணத்தை உடைய பல பொருள்களுக்குப் பொதுவாய் இருப்பினும், காரணம் கருதாதபொழுது இடுகுறியளவாய் நின்று (ஒன்றற்கே) சிறப்பாக வழங்கும் பெயராகும்.

(உ - ம்.) முக்கண்ணன், முள்ளி, கிறங்கு.

குறிப்பு:—முக்கண்ணன் என்பது காரணம் கருதிய போது மூன்று கண்களையுடைய சிவபிரான், விநாயகர் முதலிய கடவுளருக்குச் செல்லுமாயினும், காரணம் கருதாத பொழுது இடுகுறி

அளவாய்ச் சிவபெருமானுக்கே செல்லுதலால், காரண இடுகுறிப் பெயர் என வழங்கலாயிற்று. மற்றவைகளுக்கும் இப்படியே கொள்க.

**30.** போதுப்பெயர், சிறப்புப்பெயர்:— இப்பெயர்கள், போதுப்பெயர், சிறப்புப்பெயர் என்று இரண்டு வகைப்படும்.

**31.** பல பொருளுக்கும் பொதுவாய் வரும் பெயர் போதுப்பெயராகும்.

**32.** ஒரு பொருட்கே சிறப்பாய் வழங்கும் பெயர் சிறப்புப்பெயராகும்.

**33.** இடுகுறிப்பெயர், இடுகுறிப்போது என்றும், இடுகுறிச்சிறப்பு என்றும் இரு வகைப்படும்.

(உ-ம்.) மரம்—இடுகுறிப்பொது
தென்னை, பலா—இடுகுறிச்சிறப்பு

**34.** காரணப்பெயர், காரணப்போது என்றும், காரணச்சிறப்பு என்றும் இரு வகைப்படும்.

(உ-ம்.) அணி—காரணப் பொது
வளை, சிலம்பு—காரணச்சிறப்பு

குறிப்பு:—இடுகுறியளவாய் எல்லா மரங்களையும் உணர்த்துவதனுல் மரம் இடுகுறிப் பொதுப்பெயராயிற்று.

மரங்களுள் சிறப்பாக இடுகுறி அளவாய் ஒவ்வொன்றை உணர்த்துதலால், தென்னையும் பலாவும் இடுகுறிச்சிறப்பாயின.

அணி என்னும் சொல், பொதுவாக அணிதற்கு உரிய ஆபரணங்களை உணர்த்துவதால், காரணப்பொதுவாயிற்று.

வளை, சிலம்பு என்பன, கையிலும் காலிலும் அணிகின்ற அணிகளையே சிறப்பாக உணர்த்துதலால் காரணச் சிறப்பாயின.

ந. சூ:—இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின. 12.

## ஆகுபெயர்
## (Synecdoche)

**35.** ஒரு பொருளின் இயல்பான பெயர், அதனோடு சம்பந்தப்பட்ட வேறொரு பொருளுக்குத் தொன்றுதொட்டு ஆகி வருவது ஆகுபெயராகும்.

**36.** இவ்வாகு பெயர், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறினடியாகப் பிறக்கும். ஆகவே, ஆகுபெயர் ஆறு வகைப்படும்.

(1) பொருளாகு பெயர்:—ஒரு முதற் பொருளின் பெயர் அதன் சினைக்கு ஆகி வருவது.

(உ-ம்.) தாமரை போலும் முகம்.

குறிப்பு:—இங்கே தாமரை என்னும் முதற்பொருளின் பெயர், அதன் சினையாகிய மலருக்கு ஆதலால், முதலாகு பெயர் ஆயிற்று.

(2) இடவாகு பெயர்:—ஓர் இடத்தின் பெயர் அவ்விடத்திலுள்ள பொருளுக்கு ஆகி வருவது.

(உ-ம்.) ஊர் அடங்கிற்று.

குறிப்பு:—இங்கு ஊர் என்னும் சொல், அவ்விடத்திலுள்ள மக்களுக்கு ஆதலால், இடவாகு பெயராயிற்று.

(3) காலவாகு பெயர்:—ஒரு காலத்தின் பெயர் அக்காலத்தோடு சம்பந்தமுடைய பிறிதொரு பொருளுக்கு ஆகி வருவது.

(உ-ம்.) கார் அறுத்தார்கள்.

குறிப்பு:—இதில் கார் என்னும் மழைக் காலத்தின் பெயர், அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆதலால், காலவாகு பெயர் ஆயிற்று.

(4) சினையாகுபெயர்:—ஒரு பொருளின் சினையின் பெயர், அதன் முதலுக்கு ஆகி வருவது.

(உ-ம்.) வெற்றிலை நட்டான்.

குறிப்பு:—இங்கு வெற்றிலை என்னும் சினைப்பெயர், அதன் முதலாகிய கொடிக்கு ஆதலால், சினையாகு பெயராயிற்று.

(5) பண்பு ஆகுபெயர்:—ஒரு பண்புப்பெயர், அப் பண்பை உடைய பொருளுக்கு ஆகி வருவது பண்பாகு பெயராம். இது குணவாகு பெயரென்றும் கூறப்படும்.

(உ-ம்.) நீலம் சூடினாள்.

குறிப்பு:—இங்கு நீலம் என்னும் நிறக்குணப் பெயர், அதனை உடைய குவளை மலருக்கு ஆதலால், குணவாகுபெயர் ஆயிற்று.

(6) தொழிலாகு பெயர்:—ஒருதொழிலின் பெயர், அத் தொழிலை ஏற்ற பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயராம்.

(உ-ம்.) வற்றல் உண்டான்.

குறிப்பு:—இங்கு வற்றல் என்னும் தொழிற்பெயர், அத் தொழிலை ஏற்ற பொருளுக்கு ஆகி வந்ததால், தொழிலாகு பெயர்.

## வேற்றுமை

## (Case)

**37.** முதல் வேற்றுமை (Nominative Case):— இது கருத்தாப் பொருளில் வரும். (வினைமுதல், கருத்தா, செய்பவன், எழுவாய் என்பன ஒரு பொருட் சொற்கள்.)

(உ-ம்.) இராமன் அணிலை அடித்தான்.

குறிப்பு:—இதில் அடிக்கும் தொழிலைச் செய்பவன் இராமன் ஆதலால், இராமன் முதல் வேற்றுமை ஆதல் காண்க.

ந. சூ:—எழுவாய் உருபு திரிபுஇல் பெயரே;
வினைபெயர் வினுக்கோளல் அதன்பய னிலையே. 13

**38.** இரண்டாம் வேற்றுமை (Accusative Case):—இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ ஆகும். இதன் பொருள் செயப்படுபொருள். அதாவது, எழுவாயின் தொழிலை ஏற்கும் பொருள்.

(உ-ம்.) கந்தன் நிலத்தை உழுதான்.

குறிப்பு:—உழுதலாகிய கருத்தாவின் தொழிலை அடைந்தது நிலமாதலின், நிலம் செயப்படுபொருள் ஆயிற்று.

**39.** மூன்ரும் வேற்றுமை (Instrumental Case):—மூன்ரும் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன. இதன் பொருள், கருவிப்பொருளும், கருத்தாப் பொருளும், உடன்நிகழ்ச்சிப் பொருளுமாம்.

(உ-ம்.) வாளால் வெட்டினுன்.

குறிப்பு:—வெட்டுதற்குக் கருவி வாளாதலின், வாள் கருவிப் பொருள் ஆயிற்று.

தச்சனுல் செய்த பெட்டி.

குறிப்பு:—பெட்டியைச் செய்தவன் தச்சனுதலால், தச்சன் கருத்தாப்பொருள்.

தந்தையோடு மகன் வந்தான்.

குறிப்பு:—வருதலாகிய மகன் தொழில் தந்தையிடத்திலும் உடன் நிகழ்தலால், தந்தையொடு என்பது உடன் நிகழ்ச்சிப் பொருளாயிற்று.

**40.** நான்காம் வேற்றுமை (Dative Case):—நான்காம் வேற்றுமையின் உருபு கு ஆகும். இதன் பொருள்

கோடை, பகை, நேர்ச்சி முதலியனவாகும். இவை கோடற் பொருள் எனவும்படும்.

(உ - ம்.) இரப்போர்க்குச் சோறிட்டான்.

குறிப்பு:—சோறு கொடுக்கப்பட்டோர் இரப்போர் ஆதலின் இரப்போர்க்கு என்பது கொடைப் பொருளாயிற்று.

பாம்புக்குப் பகை கருடன்.

குறிப்பு:—இங்குக் கருடனின் பகைமையுடைய பொருள் பாம்பாதலின், பாம்புக்கு என்பது பகைப்பொருளாயிற்று.

இராமனுக்குத் தோழன் அனுமான்.

குறிப்பு:—இங்கு அனுமானின் நட்பை உடையவன் இராமன் ஆதலின், இராமனுக்கு என்பது நட்புப் பொருளாயிற்று. (நேர்ச்சி—நட்பு.)

**41.** ஐந்தாம் வேற்றுமை (Ablative of motion):—ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் இல், இன் ஆகும். இதன் பொருள் நீங்கல், ஒப்பு முதலியனவாம்.

(உ - ம்.) நாட்டினின்று வந்தான்.

குறிப்பு:—இங்கு நீங்கினவிடம் நாடாதலின், நாட்டினின்று என்பது நீங்கல் பொருள்.

காக்கையில் கரிது களம்பழம்.

குறிப்பு:—இங்குக் களம்பழத்திற்கு ஒப்பாகச் சொல்லப் பட்டது காக்கையாதலின், காக்கையில் என்பது ஒப்புப்பொருள்.

**42.** ஆறாம் வேற்றுமை (Genitive Case):—ஆறாம் வேற்றுமையின் உருபுகள் அது, ஆது, அ, உடைய ஆகும். இதன் பொருள் உரிமைப்படுத்துவது. (உரிமை—கிழமை)

(உ - ம்.) கந்தனுடைய வீடு.

குறிப்பு:—வீட்டுக்குரியவன் கந்தனாதலின், கந்தனது என்பது உரிமைப்பொருள்.

**43.** ஏழாம் வேற்றுமை (Local ablative): ஏழாம் வேற்றுமையின் உருபுகள் கண் முதலியவாகும். இதன் பொருள் இடப் பொருளாம்.

(உ - ம்.) ஊரின்கண் இருந்தான்

குறிப்பு:—இங்கு இருத்தற்கு உரிய இடம் ஊராதலின், ஊரின்கண் என்பது இடப்பொருளாயிற்று.

**44.** எட்டாம் வேற்றுமை (Vocative Case):-இதன் பொருள் விளிப்பொருளாம். (விளித்தல்—அழைத்தல்)

(உ - ம்.) அரசன்—அரச
பிள்ளை—பிள்ளாய்
தங்கை—தங்காய்

**45.** விளி ஏற்காத பெயர்கள்:—தன்மைப் பெயர்களும், முன்னிலைப் பெயர்களும், சுட்டுப் பெயரும், வினாப் பெயரும், நுமன், நுமள், நுமர் என்னும் கிளைப் பெயரும், தான், தாம் என்னும் பொதுப்பெயரும் விளிவேற்றுமையை ஏற்கா.

(உ - ம்.)

| | |
|---|---|
| யான், யாம், நாம் | —தன்மைப் பெயர் |
| நீ, நீர் | —முன்னிலை ,, |
| அவன், அவள், அவர், அது, அவை | —சுட்டு ,, |
| எவன்? எவள்? எவர்? எது? எவை? | —வினா ,, |
| நுமன், நுமள், நுமர் | —கிளை ,, |
| தான், தாம் | —பொது ,, |

நு. சூ:—நுவ்வொடு வினாச்சுட்டு உற்ற னளர
வைதத் தாம்தான் இன்னன விளியா. **14.**

## சாரியைகள்

## (Increments)

**46.** இரண்டு சொற்கள் தமிழில் புணரும் பொருட்டு இயைந்து நிற்பது சாரியை எனப்படும். (சார்ந்து வருவது சாரியையாகும்).

**47.** சாரியையாவன, அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தும், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன், தான், தாம் முதலியனவாம்.

ந. சூ:—அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம்
தம்நம் நும்ஏ அஉ ஐகுன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே. 15.

## பெயர் உருபு ஏற்கும்போது வரும் சாரியைகள்

**48.** பெயர்ச்சொல் உருபு ஏற்கும்போது வரும் சாரியைகள்:—அத்து, அன், இன், அற்று, ன், நம் முதலியன.

| | | சாரியை |
|---|---|---|
| (உ - ம்.) | மரம் + ஐ = மரத்தை | —அத்து |
| | அது + ஐ = அதனை | —அன் |
| | மா + ஐ = மாவினை | —இன் |
| | அவை + ஐ = அவற்றை | —அற்று |
| | ஆ + ஐ = ஆனை | —ன் |
| | எல்லா + ஐ = எல்லாநம்மையும் | —நம் |

## வினைச்சொல்

## (Verbs)

**49.** தெரிநிலைவினை, குறிப்பு வினையென வினைச்சொல் இரண்டு வகைப்படும்.

**50.** *தெரிநிலை வினை* **(Verbs Proper):**—*இவ்வினை, செயலும் காலமும் வெளிப்படையாகத் தெரிய நிற்கும்.*

**51.** *இத்தெரிநிலை வினை* **செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள்** *என்ற ஆறு பொருளை யும் காட்டும். வினை முற்றில் பகுதியால் செயலும், விகுதி யால் திணை, பால், இடம் முதலியனவும், இடைநிலைகளால் காலமும் அறியலாம். எச்சங்களில் செயலும் காலமும் வெளிப்படையாய்த் தோன்றும்.*

(உ-ம்.) வனைந்தான்.

குறிப்பு:—*இது தெரிநிலை வினைமுற்று. இதில் வனை என்ற பகுதியால் செயலும், ஆன் என்ற விகுதியால் செய்பவனாகிய குயவனும், ந் என்னும் இடைநிலையால் இறந்த காலமும் வெளிப் படையாகத் தோன்றின. இத்தொழிலிலிருந்து வனைவதற்குக் கருவியான தண்ட சக்கிரமும், வனைகின்ற இடமும் தோன்றுதல் காண்க.*

*தெரிநிலை வினை முற்று, மேற்கூறிய ஆறையும் காட்டுமெனி னும், செயப்படுபொருள் குன்றியவினை செய்பொருள் தவிர, மீதி ஐந்தையுமே காட்டும்.*

ந. சூ:—செய்பவன் கருவி நிலம்செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே. **16.**

## குறிப்பு வினை முற்று

**52.** குறிப்பு வினைமுற்றாவது, *காலங்காட்டும் உறுப் புத் தன்னிடத்தில் இல்லாமையால், காலம் தெளிவாய்த் தெரிதல் இன்றி, சொல்லுகின்றவனது குறிப்பினாலே காலம் தோன்றும்படி நிற்கும் வினை. இது பொருள், இடம்,*

காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறுவகைப் பெயரின் அடியாய்ப் பிறந்து எழுவாய்க்குப் பயனிலையாய் வரும்.

(உ-ம்.) பொன்னன்—பொருள்
பட்டணத்தான்—இடம்
ஆதிரையான்—காலம்
சடையன்—சினை
கரியன்—குணம்
கடுநடையன்—தொழில்

குறிப்பு:—பொன்னன் என்பது, ஒருவன் பொன்னை உடைமையால் அவனுக்குப் பெயராய்நின்று வேற்றுமை உருபை ஏற்றால், பெயர்ச்சொல்; ஆனால், ஒருவனது தொழில் நிகழ்ச்சியை உணர்த்திப் பெயர்க்குப் பயனிலையாய் வந்தால், குறிப்பு வினைமுற்றாகும். பின் வினை முற்றாய் நின்று, வினை செய்பவனை உணர்த்தி, வேற்றுமை உருபை ஏற்றால், குறிப்பு வினையாலணையும் பெயராகும். குறிப்பு வினையில் ஏவலும், வியங்கோளும் இல்லை.

ந. சூ:—பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல்வினைக் குறிப்பே.

**53.** ஐம்பால் மூவிடங்களிலும் வரும் குறிப்புவினை முற்றுக்கள் வேறு, இல்லை, உண்டு, யார், எவன் என்பனவாம்.

(உ-ம்.)

| | |
|---|---|
| அவன், அவள், அவர்<br>அது, அவை, நீ, நீர்,<br>யான், யாம். | வேறு, இல்லை, உண்டு,<br>யார், எவன் |

குறிப்பு:—எவன், யார் என்பன, ஆர், என் எனவும் ஆகும.
ந. சூ:—வேறுஇல்லை உண்டுஐம் பால்மூ விடத்தன. 18.

## முற்று வினை, எச்ச வினை
## (Finite verb and Participles)

**54.** தெரிநிலையும் குறிப்புமாகிய வினைச்சொற்கள் வினைமுற்று என்றும், வினையெச்சம் என்றும், பெயரெச்சம் என்றும் மூன்று வகைப்படும்.

(உ-ம்.) உண்டான் —தெரிநிலை வினை முற்று
உண்டு (வந்தான்) —தெரிநிலை வினையெச்சம்
உண்ட (மகன்) —தெரிநிலைப் பெயரெச்சம்
கண்ணன் கரியன் —குறிப்பு வினை முற்று
மெல்லப் பேசினன்—குறிப்பு வினையெச்சம்
சிறிய வீடு —குறிப்புப் பெயரெச்சம்

குறிப்பு:—இங்கு முறையே தெரிநிலைவினைமுற்று, தெரிநிலை வினையெச்சம், தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்பு வினைமுற்று, குறிப்பு வினையெச்சம், குறிப்புப் பெயரெச்சம் வந்தவாறுகாண்க.

**55.** ஏவல் வினை (Imperative form):— முன்னிலைக் கர்த்தாவை 'இது செய்' என ஏவும் வினை, ஏவல் வினையாகும். அது எதிர் காலத்தில் மாத்திரம் வரும்.

**56.** அவ்வினை, ஏவல் ஒருமை வினை முற்று என்றும் ஏவல் பன்மை வினை முற்று என்றும் இரு வகைப்படும்.

(உ-ம்.) உண்ணாய் } ஆய், இ என்னும் ஒருமை விகுதி
செய்தி } கள் பெற்று வந்தன.

உண்மின். } மின், உம், ஈர் என்னும் பன்மை
உண்ணும். } விகுதிகள் பெற்று வந்தன.
செய்யீர். }

குறிப்பு:—ஏவல் ஒருமை வினை முற்று, விகுதி குன்றியே வரும்.

(உ-ம்.) செய், உண், நில், பார்.

ஏவல் பன்மை வினை முற்று, செய்யுங்கள், உண்ணுங்கள் என்று விகுதிமேல் விகுதி பெற்று வருதலும் உண்டு.

**57.** எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று (Negative form):—ஆகார இடைநிலை பெற்று வரும்.

(உ-ம்.) உண்ணுதே, செய்யாதே.

**58.** எதிர்மறை ஏவல் பன்மைவினை முற்று, அல் என்னும் எதிர்மறை இடைநிலையும், மின் விகுதியும் பெற்று வரும்.

(உ-ம்.) செய்யன்மின், உண்ணன்மின்,

**59.** வியங்கோள் வினைமுற்று (Optative form):— இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும் வினை முற்று வியங்கோள் வினை முற்றும். (வியம்-ஏவல், கோள்-கொள்ளுதல்).

குறிப்பு:—இது மரியாதைக் குறிப்பாக வரும்.

(உ-ம்.) வாழ்க, வாழிய, வாழியர், வாழி, வாழ. (அவன், அவள், அவர், அது, அவை, நீ, நீர், யான், யாம்)

குறிப்பு:— இங்கு, க, இய, இயர், இ, அ என்ற விகுதிகள் வந்தமை காண்க.

ந. சூ:—கயவோடு ரவ்வோற்று ஈற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கும் என்ப. 19.

**60.** எதிர்மறை வியங்கோள் வினைமுற்று:—இது அல் என்னும் எதிர்மறை இடைநிலை பெற்றுத் தொழில் நடவாமையை உணர்த்தும்.

(உ-ம்.) உண்ணற்க, செல்லற்க.

குறிப்பு:—இவ்வியங்கோள் வினை முற்று, வாழ்த்து, வைதல், அருளுதல், விதித்தல் முதலிய பொருளில் வரும்.

முன்னிலை வினைமுற்றுக்கும், ஏவல் வினை முற்றுக்கும் உள்ள வேறுபாடு :

*முன்னிலை வினைமுற்று மூன்றுகாலத்திற்கும் வரும்; ஏவல் வினைமுற்று எதிர் காலத்தில் மாத்திரம் வரும்.*

ஏவலுக்கும் வியங்கோளுக்கும் உள்ள வேறுபாடு:

(1) *ஏவல் கட்டளைப் பொருளில் மாத்திரம் வரும்; வியங்கோள் வாழ்த்துதல், அருளுதல் முதலிய பொருளில் வரும்.*

(2) *ஏவல் முன்னிலையில் மாத்திரம் வரும்; வியங்கோள் ஐம்பால் மூவிடங்களிலும் வரும்.*

(3) *ஏவலில் ஒருமை பன்மை என்ற பிரிவு உண்டு ; வியங்கோளில் அப்பிரிவு இல்லை.*

**61.** பகுபத உறுப்புக்கள் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என ஆறு வகைப்படும். *இவற்றுள், பகுதி விகுதி ஆகிய இரண்டு உறுப்புக்களும் பகுபதத்திற்கு இன்றியமையாதவை.*

## *சில விகுதிகள்*

### (Terminations)

**62.** பெயர்ப் பகுபத விகுதிகள்:—அன். ஆன், அள், ஆள், அர், ஆர், அ, து, இ, மார், மன், மான், கள், வை, கை, பி, ன், ள், ர்.

(உ-ம்.) *பொன்னன், வானத்தான், குழையள், குழையாள், குழையர், குழையார், குழையன, யாது, பொன்னி, குருமார், வடமன், கோமான், கோக்கள், அவை, தங்கை, தம்பி, பிறன், மகள், பிறர்.*

**63.** வினைப் பகுபத விகுதிகள், அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, அ, ஆ, ஐ, ஆய், இர், ஈர், என், அம், ஆம், ஓம், உம், க, உ, இ, ய், கு, இன், கால், மல், மே, து *என்பன.*

**64.** வினைமுற்று விகுதிகள்:—அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து *என்பன வினைமுற்று விகுதிகளாம்.*

**65.** வினையெச்ச விகுதிகள்:—உ, இ, ய், அ, கு, இன் ஆல், கால், மல், மே, து, றி. *என்பன வினையெச்ச விகுதிகளாம்.*

(உ- ம்.) *நடந்து, ஓடி, போய், நடக்க, உண்ணற்கு, உண்ணின், உண்டால், நடந்தக்கால், செய்யாமல், செய்யாமே, இல்லது, இன்றி.*

குறிப்பு:—*இவற்றுள், மல், மே, து முதலியன எதிர் மறையில் வரும்.*

**66.** பெயரெச்ச விகுதிகள்:—அ, உம் *என்பன பெயரெச்ச விகுதிகளாம்.*

(உ - ம்.) *படித்த, படிக்கிற, படிக்கும்.-'உம்' விகுதி தெரிநிலைப் பெயரெச்சத்திற்கு மாத்திரம் வரும்.*

**67.** பண்புப் பெயர் விகுதிகள்:—மை, ஐ, பு, கு, றி, று, அம், பம், நர் *முதலியன பண்புப் பெயர் விகுதிகளாம்.*

(உ - ம்.) *நன்மை, தொல்லை, நட்பு, நன்கு, நன்றி, நன்று, நலம், ஒட்பம், நன்னர்.*

**68.** தொழிற் பெயர் விகுதிகள்:—தல், அல், அம், ஐ கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, மை, து.

( உ- ம்) *படித்தல், ஆடல், ஆட்டம், கொலை, வருகை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, உணர்ச்சி, கல்வி, விக்குள், சாக்காடு, நடவாமை, வருவது.*

**69.** சாரியை:—விகுதியையும், இடை நிலையையும் சார்ந்து வரும் உறுப்பிற்குச் சாரியை என்பது பெயர். அன், ஆன், அம், ஆம், அல், அத்து, அற்று, இன், இற்று, தன், தான், தம், தாம், நும், அ, உ, ஐ, கு முதலியவை பொதுச் சாரியைகள்.

**70.** சந்தி:—பகுபத உறுப்புக்கள் ஒன்றோடொன்று புணரும் பொழுது தோன்றுகின்ற எழுத்துக்களுக்குச் சந்தி என்பது பெயர்.

**71.** விகாரம்:—பகுபத உறுப்புக்கள் புணரும் புணர்ச்சியில் இடையில் தோன்றுவனவாகிய வலித்தல், மெலித்தல், நீட்டல், சூறுக்கல், விரித்தல், தொகுத்தல் விகாரங்கள் முதலியனவாம்.

**72.** கூனி—கூன் + இ—பகுதி, விகுதியால் முடிந்தது. வலைஞன்—வலை + ஞ் + அன்— பகுதி, விகுதி, இடைநிலையால் முடிந்தது.

உண்டான்—உண் + ட் + ஆன்—பகுதி, விகுதி, இடைநிலையால் முடிந்தது. (இது வினைச்சொல்லாதலால், இடைநிலை இறந்த காலத்தைக் காட்டிற்று.)

உண்டனன்—உண் + ட் + அன் + அன்—பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை என்ற நான்கு உறுப்பால் முடிந்தது.

படித்தனன்—படி + த் + த் + அன் + அன் —பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி என்ற ஐந்து உறுப்பால் முடிந்தது.

நடந்தனன்—நட + த் (ந்) + த் + அன் + அன் —பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தியால் ஆகி, அச்சந்தியாகிய வல்லொற்று மெல்லொற்றாகித் திரிந்து, ஆறு உறுப்பால் முடிந்தது.

**73.** தன்மை முதலிய இடப்பெயர்கள் விரவி வருதல்:—சில இடங்களில் தன்மைப் பெயரோடு முன்னிலைப் பெயர் கலந்து வரும். இப்படி வரும்பொழுது, அம், ஆம் என்னும் விகுதி கொண்ட தன்மைப் பன்மை வினை முற்றைக் கொண்டு முடியும்.

(உ-ம்.) யானும் நீயும் உண்டனம்.
யானும் நீயும் உண்டாம்.

**74.** தன்மைப் பெயரோடு படர்க்கைப் பெயர் கலந்து வரும்பொழுது, எம், ஏம், ஓம் என்னும் விகுதி பெற்ற தன்மைப் பன்மை வினை முற்றைக்கொண்டு முடியும்.

(உ-ம்.) யானும் அவனும் உண்பெம்.
,, ,, உண்டேம்.
,, ,, உண்டோம்.

**75.** தன்மைப் பெயரோடு முன்னிலைப் பெயரும் படர்க்கைப் பெயரும் சேர்ந்து வரின், கும், டும், தும், றும் என்னும் விகுதிகளைக் கொண்ட தன்மைப் பன்மை வினை முற்றைக் கொண்டு முடியும்.

(உ-ம்.) யானும் நீயும் அவனும் உண்கும்.
,, ,, ,, உண்டும்.
,, ,, ,, வருதும்.
,, ,, ,, சென்றும்.

குறிப்பு:—இவை தன்மையோடு பிற இடங்களையும் உளப்படுத்திக்கொண்டு வருவதனால், உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினை முற்றுக்கள் எனப்படும்.

ந. சூ:—அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்
உம்ஊர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை. 20.

**76.** முன்னிலைப் பெயரோடு படர்க்கைப் பெயர் கலந்து வரும்போது, முன்னிலைப் பன்மை வினை முற்றினால் முடியும்.

(உ-ம்.) நீயும் அவனும் கண்டீர்.

குறிப்பு:—இதுவும் உளப்பாட்டு முன்னிலைப்பன்மை வினை முற்று என்று சொல்லப்படும்.

ந. சூ:—முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை **21.**

## இடைச்சொல்

## (Particles)

**77.** ஏகார இடைச்சொல்:—ஏ என்னும் இடைச் சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை என்னும் ஆறு பொருளைத் தரும்.

(உ-ம்.) பிரிநிலை—கந்தனே வயதில் மூத்தவன்.
வினா—நீயே அதை உடைத்தாய்?
எண்—நிலனே, நீரே, தீயே, காற்றே.
ஈற்றசை—அவர் போனாரே.
தேற்றம்—இராமனே இதைச் செய்தான்.
இசைநிறை—வந்தாரே துரை வந்தாரே.

ந. சூ:—பிரிநிலை வினாஎண் ஈற்றசைதேற்றம்
இசைநிறை எனஆறு ஏகா ரம்மே. 22

**78.** ஓகார இடைச்சொல்:—ஓ என்னும் இடைச் சொல், ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிப்பு என எட்டுப் பொருளைத் தரும்.

(உ-ம்.) ஒழியிசை—படித்தற்கோ வந்தாய், என்பதில், படித்தற்கு அல்ல; விளையாடுதற்கு வந்தாய், என்னும் ஒழிந்து நின்ற பொருள் வந்தது.

வினா:—நீர் என்னைத் தேடியது பகலிலோ?

சிறப்பு:—ஓஒ மகா வல்லவன்!—உயர்வு சிறப்பு
ஓஒ கொடிய துஷ்டன்!—இழிவு சிறப்பு

எதிர்மறை:—அவனே கொண்டான், என்பது, அவன் கொண்டிலன் என்னும் பொருள் தந்தால், எதிர்மறை ஆகும்.

தெரிநிலை:—ஆணோ? அதுவும் அன்று; பெண்ணோ? அதுவும் அன்று-என்பதில் தெளிவாக இன்ன பொருள் என்று தெரிவித்து நிற்றலால், தெரிநிலை.

கழிவு:—ஓ, ஓ, அடிபட்டுக் கிடக்கிறான்!—என்பது நடந்ததற்கு இரங்குதல்.

அசைநிலை:—உரைப்பேன் கேண்மினோ (இது செய்யுளில் வரும்).

பிரிப்பு:—இவனோ, பரிசு கொண்டவன்—பலரினின்றும் ஒருவனைப் பிரித்துக் காண்பிப்பதால், பிரிநிலை.

ந. சூ:—ஒழியிசை வினாச்சிறப்பு எதிர்மறை தெரிநிலை
கழிவுஅசை நிலைபிரிப்பு எனஎட்டு ஓவே. 23.

**79.** 'உம்' என்னும் இடைச்சொல்:—இது எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப் பொருளைத் தரும்.

(உ-ம்.) எதிர்மறை:—தம்பி வருதற்கும் உரியன்—என்பது வாராமைக்கும் உரியன் எனப்பொருள் படுதலால் எதிர்மறை.

சிறப்பு:—ஞானிக்கும் விளங்காத வித்தை—உயர்வு சிறப்பு.
பிள்ளையும் மனத்தில் செய்து சொல்லும் கணக்கு—இழிவுசிறப்பு.

ஐயம்:—எட்டாயினும், பத்தாயினும் கொடு.

எச்சம்:—அண்ணனும் வந்தான்—இது முன் தம்பியும் வந்தான் எனப் பொருள்தரின், இறந்த நிகழ்ச்சியைத் தழுவி

நிற்றலால், இறந்தது தழுவிய எச்சம் எனப்படும். தம்பியும் வருவான் எனப் பொருள் தரின், எதிரது தழுவிய எச்சம் எனப்படும்.

முற்று:—எல்லாரும் வந்து விட்டார்கள் — இது முற்றுப் பொருளைத் தருவதால், முற்று.

எண்:—இரவும், பகலும் — இவை எண்ணி நிற்றலால், எண்.

தெரிநிலை:—ஆணும் அன்று; பெண்ணும் அன்று; ஆனால் குற்றியே—தெளிவாகக் குற்றியைக்குறிப்பதால் தெரிநிலை.

ஆக்கம்:—என் தமையனார் எனக்கு உபாத்தியாயரும் ஆயினார். இதில் தமையனார் ஆனதும் அல்லாமல் உபாத்தியாயரும் ஆயினார் என்னும் பொருள் தருதலால், ஆக்கம்.

நூ. சூ:—எதிர்மறை சிறப்பையம் எச்சம்முற்று அளவை
தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே. 24.

## உரிச்சொல்

## (Qualifying words)

**80.** உரிச்சொல்:—இது பெயரைத் தழுவி வரும் போது பெயர் உரிச்சொல் என்றும், வினையைத் தழுவி வரும் போது வினை உரிச்சொல் என்றும் இருவகைப்படும்.

(உ-ம்.) சாலப் பகை—சால என்னும் உரிச்சொல் பகை என்னும் பெயரைத் தழுவி வந்ததால், பெயர் உரிச்சொல் ஆயிற்று.

நனி வருந்தினேன்—நனி என்னும் உரிச்சொல் வருந்தினேன் என்னும் வினையைத் தழுவி வந்ததால், வினை உரிச்சொல் ஆயிற்று.

# III. பொதுவியல்

## (General remarks on the parts of Speech)

**81.** சொற்கள் பொருளை உணர்த்தும்பொழுது, குறிப்பாகவும் வெளிப்படையாகவும் உணர்த்தும்.

**82.** குறிப்பு:—குறிப்பாய்ப் பொருளை உணர்த்தும் சொற்கள் ஒன்றொழி பொதுச்சொல், விகாரம், தகுதி, ஆகு பெயர், அன்மொழித்தொகை, வினைக்குறிப்பு, முதற்குறிப்பு, தொகைக்குறிப்பு, பிற குறிப்பு என்று பல வகைப்படும்.

(உ-ம்.) ஒன்றொழி பொதுச்சொல் :—ஆயிரம் மக்கள் பொருதார்—இதில் மக்கள் என்னும் பொதுப் பெயர் பொருதார் என்னும் குறிப்பினால் பெண்மக்களை ஒழித்து, ஆண் மக்களைக் காட்டினது.

விகாரம்:—செய்யுளில் வருகின்ற விகாரச் சொற்கள், மரை மலர்—என்பதில் தாமரையின் முதற்குறையின் விகாரமாகிய மரை என்னும் சொல், மலர் என்ற குறிப்பினால் தாமரையை உணர்த்திற்று

குறிப்பு:—விகாரம்: வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல், முதற்குறை இடைக்குறை, கடைக்குறை எனப் பல வகைப்படும்.

தகுதி:—நன்காடு என்பது, சுடுகாடு என்னும் சொல் சொல்லத்தகாது எனக்கொண்டு மங்கலமாகச் சொல்லப்படுவதால் தகுதியாயிற்று.

ஆகுபெயர்:—ஊர் அடங்கிற்று — இங்கு வினையினால் ஊர் என்பது ஊரை உணர்த்தாது, குறிப்பாக ஊரிலுள்ள மக்களைக் குறித்தது.

அன்மொழித் தொகை:—பெருந்தகை வந்தான்—இதில் பெருந்தகை என்னும் தொடர் வந்தான் என்னும் குறிப்பால் பெருந்தகைமையையுடைய ஆண் மகனைக் காட்டிற்று.

வினைக்குறிப்பு:—இவன் முன் பொன்னன்—இதில் பொன்னன் என்னும் சொல் முன் என்னும் குறிப்பால் பெயர்ப் பொருளை ஒழித்து, பொன்னனாய் இருந்தான் என்னும் வினைக் குறிப்பாயிற்று.

முதற்குறிப்பு:—ஆத்தி சூடி படித்தான்—இதில் ஆத்தி சூடி என்னும் சொற்கள் படித்தான் என்னும் குறிப்பினால் அச் சொற்களை முதலில் உடைய நூலைக் காட்டின.

தொகைக் குறிப்பு:—ஐவரோடு குந்தி வந்தாள்—இதில் ஐவர் என்னும் சொல், குந்தி என்னும் குறிப்பால் பாண்டவரை உணர்த்திற்று.

பிற குறிப்பு:—பாயா வேங்கை, பறவாக் கொக்கு—இவற்றில் பாயா, பறவா என்னும் குறிப்பால், வேங்கை, கொக்கு என்பன முறையே வேங்கை மரத்தையும் மாமரத்தையும் உணர்த்துவதால், பிற குறிப்பாயின.

**83.** வெளிப்படை:—குறிப்பாய்ப் பொருள் உணர்த்துவதல்லாமல், வெளிப்படையாய்ச் சொற்கள் பொருளை உணர்த்தினால் வெளிப்படை எனப்படும்.

(உ-ம்.) நிலம், நீர், கல், காற்று.

ந. சூ:—ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகுபெயர் அன்மொழி வினைக்கு றிப்பே
முதல்தொகை குறிப்போடு இன்ன பிறவும்
குறிப்பில் தருமொழி; அல்லன வெளிப்படை.

## வழக்கு
## (Usage)

**84.** சொற்கள் வழங்கும் முறைக்கு வழக்கு என்பது பெயர். அது இயல்பு வழக்கு என்றும், தகுதி வழக்கு என்றும் இரண்டு வகைப்படும்.

**85.** இயல்பு வழக்கு:—இயல்பு வழக்கு என்பது, ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லால் அப் பொருளைக் கூறுவதாம். அது இலக்கணம் உடையது, இலக் கணப்போலி, மரூஉ என்று மூன்று வகைப்படும்.

**86.** இலக்கணம் உடையது என்பது, இலக்கண நெறிபற்றி வருவது.

(உ-ம்.) நிலம், நீர், கல்.

**87.** இலக்கணப்போலி என்பது, இலக்கணத்துக்குப் பொருந்தாவிடினும், இலக்கணம் உடையது போலச் சான் ஞேரால் தொன்று தொட்டு வழங்கி வருவது.

(உ-ம்.) வாயில்—இல்வாய் என்பது வாயில் என முன் பின்னுக மாறி வழங்கப்பட்டது. புறக்கடை—கடைப்புறம் என்பது, முன் பின்னுக மாறியது.

**88.** மரூஉ என்பது, இலக்கணம் சிதைந்து, உருமாறி, ஆன்ஞேர் ஆட்சி பெற்று வழங்குவதாம்.

(உ-ம்.) அருமந்த பிள்ளை 'அருமருந்து அன்ன' என் பது 'அருமந்த' என்று மருவிற்று.

சோணுடு—'சோழ நாடு' என்பது 'சோணுடு' என்று மரு விற்று.

உறந்தை—'உறையூர்' என்பது 'உறந்தை' என்று மருவிற்று.

ஆறு, ஆனை—யாறு,யானை என்பன ஆறு, ஆனை எனமருவின.

**89.** தகுதி வழக்கு:—ஒரு சொல்லை ஒழித்து அதற் குத் தகுந்த வேறொரு சொல்லைக்கொண்டு அப்பொருளைக் கூறுவதாம். இது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூன்று வகைப்படும்.

**90.** இடக்கரடக்கல் :—சொல்லத்தகாத சொற்களைப் பெரியோர்களிடத்து மறைத்துக் கூறுதல்.

(உ-ம்.) கால் கழுவி வருகிறேன். (இடக்கர்-இடக்கான சொற்கள் ; அடக்கல் - மறைத்தல்.)

**91.** மங்கலம்:—அமங்கலமான சொல்லை ஒழித்து மங்கலமாகக் கூறுதல்.

(உ- ம்.) நன்காடு—'சுடுகாடு' என்பது 'நன்காடு' என மங்கலமாகக் கூறப்பட்டது.

**92.** குழூஉக்குறி:—ஒரு கூட்டத்தார் தமக்குள் சில அடையாளச் சொற்களை அமைத்துக்கொள்ளுவது. (குழூஉ-கூட்டம், குறி- அடையாளம்).

(உ - ம்.) சொல் விளம்பி—கட்குடியர் கள்ளைச் சொல் விளம்பி என்பர்.

பறி—தட்டார் பொன்னைப் பறி என்று சொல்வர்.

ந. சூ:—இலக்கணம் உடையது இலக்கணப் போலி
மரூஉஎன்று ஆகும் மூவகை இயல்பும்
இடக்கர் அடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோடு ஆறும் வழக்கியல். 26.

# IV. புணரியல்

## (Combination of words)

**93.** புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இரு வகைப்படும்.

**94.** வேற்றுமைப் புணர்ச்சி:—இரண்டு முதலாக ஏழு ஈறாக இடையே உள்ள ஆறு வேற்றுமை உருபுகளும் விரிந்தும் மறைந்தும் நிற்கப் பதங்கள் பொருந்தும் புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சியாம்.

**95.** வேற்றுமை உருபு மறைந்து நிற்கும் தொடர் வேற்றுமைத்தொகை நிலைத்தொடர் என்றும், விரிந்து நிற்கும் தொடர் வேற்றுமைத் தொகா நிலைத்தொடர் என்றும் சொல்லப்படும்.

(உ - ம்.)

| வேற்றுமைத் தொகை | | வேற்றுமை விரி |
|---|---|---|
| நீர் குடித்தான். | 2ம் வே. | நீரைக் குடித்தான். |
| கல்லெறிந்தான். | 3ம் ” | கல்லால் எறிந்தான். |
| கூலி வேலை | 4ம் ” | கூலிக்கு வேலை |
| மலைவீழ் அருவி | 5ம் ” | மலையின் வீழ் அருவி |
| என் வீடு | 6ம் ” | எனது வீடு |
| நாடு புகுந்தான். | 7ம் ” | நாட்டில் புகுந்தான். |

குறிப்பு :—முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இன்மையால், அவை அல்வழியில் சேர்க்கப்பட்டன.

**96.** அல்வழிப் புணர்ச்சி :— வேற்றுமை அல்லாத வழியில் பதங்கள் பொருந்தும் புணர்ச்சிக்கு அல்வழிப் புணர்ச்சி என்பது பெயர்.

**97.** அல்வழிப் புணர்ச்சி தொகைநிலைத் தொடர் என்றும், தொகாநிலைத் தொடர் என்றும் இரு வகைப்படும்.

**98.** தொகை நிலைத்தொடர்கள் :—தொகை நிலைத் தொடராவது, வேற்றுமை உருபுகள் அல்லாத ஏனைய உருபு இடையில் தொக்கு நிற்க, சொற்கள் தம்முள் தொடர்ந்து வருவதாம். இத்தொகை நிலைத்தொடர் வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஐந்து வகைப்படும்.

(உ-ம்.) வினைத்தொகை:—ஒலிகடல்—ஒலித்த கடல், ஒலிக்கின்ற கடல், ஒலிக்கும் கடல் என மூன்று காலத்துக்கும் உரிய இடை நிலைகள் தொக்குவந்ததால், இது வினைத்தொகை ஆயிற்று.

பண்புத்தொகை:— வெண்டாமரை — வெண்மையாகிய தாமரை என்பதில் ஆகிய என்னும் பண்பை உணர்த்தும் உருபு தொக்கு வந்ததால், இது பண்புத்தொகை ஆயிற்று.

சாரைப்பாம்பு:—சாரையாகிய பாம்பு என இரண்டு பெயர்கள் தம்முள் ஒட்டி இடையில் ஆகிய என்னும் பண்பை உணர்த்தும் சொல் தொக்கு வந்தமையால், இஃது இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாயிற்று.

உவமைத்தொகை—தளிரடி— தளிர்போன்ற அடி என்பது போன்ற என்னும் உவமை உருபு தொக்கு வந்ததால், உவமைத்தொகை ஆயிற்று.

உம்மைத்தொகை:—இராப்பகல்—இரவும் பகலும் என்பவற்றில் உள்ள எண் உம்மைகள் தொக்கு வந்ததால், இஃது உம்மைத் தொகை ஆயிற்று.

அன்மொழித்தொகை:—பெருந்தகை வந்தான் — பெருமையாகிய தகுதியையுடையவன் என விரியும் பெருந்தகை என்பதில் அல்லாத மொழியாகிய உடையவன் என்பது தொக்கு வந்ததால், இஃது அன்மொழித்தொகை ஆயிற்று.

**99.** தொகா நிலைத் தொடர்கள்:—நிலைமொழி வருமொழிகளுக்கு இடையில் உருபு முதலியன தொக்கு நில்லாமல் சொற்கள் ஒன்றோடொன்று தொடர்வன தொகா நிலைத் தொடர்களாகும்.

**100.** இத்தொடர்கள் எழுவாய்த் தொடர், விளித் தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், தெரி

நிலை வினை முற்றுத் தொடர், குறிப்பு வினை முற்றுத் தொடர், இடைச்சொல் தொடர், உரிச்சொல் தொடர், அடுக்குத்தொடர் என ஒன்பது வகைப்படும்.

(உ-ம்.)

1. எழுவாய்த்தொடர்—மரம் வளர்ந்தது.
2. விளித்தொடர்—இராமா வா.
3. பெயரெச்சத்தொடர்—உண்ட சோறு, கரிய கண்ணன்.
4. வினையெச்சத்தொடர்—உண்டுவந்தான் பையச் சென்றான்.
5. தெரிநிலை வினை முற்றுத்தொடர் — வந்தான் இராமன்.
6. குறிப்பு வினை முற்றுத்தொடர்—கரியன் கண்ணன்.
7. இடைச்சொல் தொடர்—மற்றொன்று.
8. உரிச்சொல் தொடர்—நனி பேதை.
9. அடுக்குத்தொடர்—பாம்பு பாம்பு!

குறிப்பு:—தொகை நிலைத்தொடர் தொகை எனவும், தொகா நிலைத்தொடர் விரி எனவும் பெயர் பெறும்.

> ந. சூ:—வேற்றுமை ஐம்முதல் ஆறும்; அல்வழி
> தொழில்பண்பு உவமை உம்மை அன்மொழி
> எழுவாய் விளிஈ ரெச்சம்முற்று இடைஉரி
> தழுவு தொடர்அடுக்கு எனஈ ரேழே. 27.

**101.** மேற்கூறிய தொடர்கள் நிலைமொழிப் பொருளோடு வருமொழிப் பொருள் பொருட்பொருத்தமுறத் தழுவி நின்றால், தழுவு தொடர் எனப்படும்.

(உ-ம்.) வீட்டைக்கட்டினான்:— இதில் நிலைமொழியோடு வருமொழி பொருட் பொருத்தமுறத் தழுவுவதால், இது வேற்றுமைப் புணர்ச்சியில் தழுவு தொடராயிற்று.

பொற்றொடி:—இதில் பொன்னால் தொடி எனக்கொண்டால் இரு சொற்களும் பொருட்பொருத்தமுறத் தழுவவில்லை. ஆத

வின், இடையில் ஆகிய என்னும் சொல்லைப்பெய்து, பொன்னால் ஆகிய தோடி எனக்கொள்ள வேண்டியதாயிற்று. இது வேற்றுமைப் புணர்ச்சியில் தழாத் தொடராகும். இவ்வாறு வரும் தொடர்கள் உருபும் பயனும் உடன்தொக்கதொகை எனப்படும்.

மரம் வீழ்ந்தது:—இதில் இரண்டு சொற்களும் பொருட் பொருத்தமுறத் தழுவினதால், இஃது அல்வழிப் புணர்ச்சியில் தழுவு தொடராயிற்று.

சுரை ஆழ அம்மி மிதப்ப:—இதில் சுரை என்பது ஆழ என்னும் சொல்லையும், அம்மி என்பது, மிதப்ப என்னும் சொல்லையும் பொருள் பொருத்தமில்லாமல் தொடர்ந்தன. இவற்றைச் சுரை மிதப்ப, அம்மி ஆழ எனக் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். ஆகவே, 'சுரை ஆழ, அம்மி மிதப்ப' என்பன, அல் வழிப் புணர்ச்சியில் தழாத் தொடராயின.

## உயிர்முன் உயிர் புணர்தல்

## Vowel before Vowel

**102.** (a) அ, இ, உ என்னும் மூன்று சுட்டெழுத்துக்களின் முன்னும் எகர வினாவின் முன்னும் உயிரும் யகரமும் வந்தால், வகரமெய் தோன்றும்: (b) பிறமொழி முதல் மெய்கள் வந்தால் அம்மெய்கள் மிகும்.

(உ - ம்.)

(a) அ + அரசன்—அவ்வரசன்
இ + அரசன்—இவ்வரசன்
உ + அரசன்—உவ்வரசன்
எ + அரசன்—எவ்வரசன்

மூன்று சுட்டெழுத்துக்களின் முன்னும் எகர வினாவின் முன்னும் உயிர்வர, வகரம் தோன்றியது.

அ + யானை—அவ்யானை
இ + யானை—இவ்யானை
உ + யானை—உவ்யானை
எ + யானை—எவ்யானை

யகரம் வர, வகரம் தோன்றியது.

(b)

| | | |
|---|---|---|
| அ + கடை—அக்கடை | | சுட்டின் முன்னும் வினாவின் முன்னும் மூன்று இனமெய்களும் வர, அவை மிகுந்தன. |
| இ + மனை—இம்மனை | | |
| உ + விதம்—உவ்விதம் | | |
| எ + பக்கம்—எப்பக்கம் | | |

**103.** செய்யுளில் சுட்டெழுத்துக்கள் நீண்டுவந்தால், இடையில் யகர மெய் தோன்றும்.

(உ-ம்.) ஆ + இடை—ஆயிடை

ந. சூ:—எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்,
பிறவரின் அவையும், தூக்கிற் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே. 28.

**104.** வேற்றுமைப் புணர்ச்சியில் உயிரீற்றுச் சில மரப் பெயர்களுக்கு முன்னர் வரும் கசதபக்கள் மிகுதலோடு அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்தும் மிகும்.

(உ-ம்.)

| | | | |
|---|---|---|---|
| வாழை + காய் | — | வாழைக்காய் | வலி மிகுந்தது |
| வாழை + பழம் | — | வாழைப்பழம் | |
| பலா + காய் | — | பலாக்காய் | |
| விள + காய் | — | விளங்காய் | இனம் மிகுந்தது |
| மா + பழம் | — | மாம்பழம் | |
| மா + காய் | — | மாங்காய் | |

ந. சூ:—மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து
வரப்பெறு நவுமுள வேற்றுமை வழியே. 29.

**105.** நிலைமொழி ஈற்றிலுள்ள அகர உயிரின்முன் அத்து என்னும் சாரியை வரின், அச்சாரியையின் அகர உயிர் கெடும்.

(உ-ம்.) மா(ம்) + அத்து = மாத்து

ந. சூ:—அத்தின் அகரம் அகரமுனை இல்லை. 30.

**106.** *அகரத்தை ஈற்றில் உடைய சொற்களில் செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் முன்னும், பல வகைப்பட்ட பெயரெச்சத்தின் முன்னும், வினை முற்றின் முன்னும், ஆறும் வேற்றுமை அகர உருபின் முன்னும், அஃறிணைப் பன்மைப் பெயர் முன்னும், 'அம்ம' என்னும் அசைச்சொல்லின் முன்னும் வரும் கசதபக்கள் இயல்பாய்ப் புணரும்.*

(உ - ம்.) உண்ணிய + தந்தான்—உண்ணிய தந்தான். (செய்யிய என்னும் வினையெச்சம்.)

உண்ட + பையன் = உண்ட பையன்—இறந்த காலப் பெயரெச்சம்.

செல்கிற + குதிரை = செல்கிற குதிரை—நிகழ்காலப் பெயரெச்சம்.

செல்லாத + குதிரை = செல்லாத குதிரை—எதிர்மறைப் பெயரெச்சம்.

சிறிய + குதிரை = சிறிய குதிரை—குறிப்புப் பெயரெச்சம்.

வந்தன + பசுக்கள் = வந்தன பசுக்கள்—தெரிநிலை வினை முற்று.

கரியன + பன்றிகள் = கரியன பன்றிகள்—குறிப்பு வினை முற்று.

தன + கைகள் = தன கைகள்—6-ஆம் வே. அகரவுருபு.
பல + சேனை = பல சேனை—அஃறிணைப் பன்மைப் பெயர்.
அம்ம + தா = அம்ம தா—அசைச்சொல்.

ந. சூ:—செய்யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரின் எச்சம்முற்று ஆறன் உருபே
அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே. 31.

**107.** அல்வழிப் புணர்ச்சியில் இகர ஐகார ஈற்றுப் பெயர்ச்சொற்களின் முன் கசதபக்கள் எழுவாய்த்தொடரிலும், வினைத்தொகையிலும், உம்மைத்தொகையிலும் இயல்பாகும்.

(உ - ம்)

(a) பருத்தி + சிறிது = பருத்தி சிறிது—எழுவாய்த்தொடர்.
இடி + கரை = இடி கரை —வினைத்தொகை.
காடி + புலி = காடி புலி —உம்மைத்தொகை.

(b) யானை + பெரிது = யானை பெரிது—எழுவாய்த்தொடர்.
வனை + கழல் = வனை கழல் —வினைத்தொகை.
யானை + குதிரை = யானை குதிரை—உம்மைத்தொகை.

**108.** அல்வழிப் புணர்ச்சியில் இகர ஐகார ஈற்றுப் பெயர் முன் வரும் வல்லினம் பண்புத்தொகையிலும் உவமைத்தொகையிலும் மிகும்.

(உ - ம்) மார்கழி + திங்கள் = மார்கழித் திங்கள் } பண்புத்
சாரை + பாம்பு = சாரைப் பாம்பு } தொகை

காவி + கண் = காவிக்கண் } உவமைத்
தாமரை + கை = தாமரைக்கை } தொகை

**109.** அல்வழிப்புணர்ச்சியில் சில பெயர்களின் முன் வரும் கசதபக்கள் மிகுந்தும் மிகாமலும் வரும். இவ்வாறு வருதல் உறழ்ச்சியென்றும் விகற்பம் என்றும் சொல்லப்படும்.

(உ - ம்.)

கிளி + சிறிது = கிளி சிறிது, கிளிச்சிறிது. } இயல்பாதலும்
தினை + குறிது = தினைகுறிது, தினைக்குறிது. } மிகுதலும்.

ந. சூ:—அல்வழி இஐ முன்னர் ஆயின்
இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும். 32.

## மெய்ம்முன் மெய் புணர்தல்

### (Consonant before Consonant)

**110.** ணகர னகர ஈறு:— ணகர னகர ஈற்றுச் சொற்களின் முன் வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால், அந்த ணகர னகரங்கள் முறையே டகரமும் றகரமுமாகும்.

(உ-ம்)

கண் + களிறு = கட்களிறு } ணகரம் டகரமாகவும்
பொன் + தட்டு = பொற்றட்டு } னகரம் றகரமாகவும் திரிந்தன.

**111.** வேற்றுமைப் புணர்ச்சியில் ணகர னகர ஈற்றுச் சொற்கள் முன் மெல்லினம், இடையினம் வரத் திரியாது, இயல்பாகும்.

(உ-ம்)

கண் + மணி = கண்மணி } மெல்லினம் வர
பொன் + மணி = பொன்மணி } இயல்பாயிற்று.
மண் + வன்மை = மண் வன்மை } இடையினம் வர
பொன் + வன்மை = பொன் வன்மை } இயல்பாயிற்று.

**112.** மேற்கூறிய ணகர னகர மெய்கள் அல்வழிப் புணர்ச்சியில் மூவின மெய்களும் வர இயல்பாகும்.

(உ-ம்)

மண் + கடிது = மண் கடிது } அல்வழிப் புணர்ச்சி
பொன் + பெரிது = பொன் பெரிது } யில் வல்லினம் வர இயல்பானது.

மண் + மாண்டது = மண் மாண்டது } அல்வழியில்
பொன் + மாண்டது = பொன் மாண்டது } மெல்லினம் வர இயல்பானது.

மண் + வலிது = மண் வலிது } அல்வழியில் இடையி
பொன் + வலிது = பொன் வலிது } னம் வர இயல்பானது.

ந. சூ:—ணனவல் லினம்வர டறவும் பிறவரின்
இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு; அல்வழிக்கு
அனைத்து மெய்வரினும் இயல்பா கும்மே. 33.

**113.** லகர ளகர ஈறு:—வேற்றுமைப் புணர்ச்சியில் லகர ளகர ஈற்றுச் சொற்களின்முன் வல்லினம் வரின், லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவும் திரியும்.

(உ-ம்.)

கால் + குறை = காற்குறை } வேற்றுமையில் வலி வர, றகர
முள் + குறை = முட்குறை } டகரங்களாய்த் திரிந்தன.

**114.** அல்வழிப் புணர்ச்சியில் வல்லினம் வர, லகர ளகரங்கள் இயல்பாகவும் விகற்பித்தும் வரும்.

கால் + குறிது = கால் குறிது. } அல்வழியில் இயல்பாயின.
முள் + குறிது = முள் குறிது. }

கால் + குறிது = கால் குறிது }
காற்குறிது }
முள் + குறிது = முள் குறிது } அல்வழியில் உறழ்ந்தன.
முட்குறிது }

**115.** இரு வழியிலும் லகர ளகர ஈற்றின்முன் மெல்லினம் வரின், லகரம் னகரமாகவும், ளகரம் ணகரமாகவும் திரியும்.

(உ-ம்.) கல் + மலை = கன்மலை } வேற்றுமையில் னகர ணக
வாள் + மாண்பு = வாண் மாண்பு } ரங்களாகத் திரிந்தன.

கல் + நெரிந்தது = கன்னெரிந்தது } அல்வழியில் னகர
வாள் + மாண்டது = வாண் மாண்டது } ணகரங்களாகத் திரிந்தன.

**116.** இரு வழியிலும் லகர ளகரத்தின் முன் இடையினம் வரத் திரியாது இயல்பாகும்.

(உ-ம்.)

| | |
|---|---|
| கல்+யானை = கல் யானை<br>தோள்+வலிமை = தோள் வலிமை. | வேற்றுமையில் இடையினம் வர, இயல்பாயின. |
| கல்+யாது = கல் யாது?<br>முள்+வலிது = முள் வலிது. | அல்வழியில் இடையினம் வர, இயல்பாயின. |

ந. சூ:—லளவேற் றுமையிற் றடவும் அல்வழி
அவற்றோடு உறழ்வும் வலிவரி னாம்; மெலி
மேவின் னணவும், இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழி யானும் என்ப. 34.

## ய, ர, ழ ஈற்றின் முன் வல்லினம்

**117.** *அல்வழியில் ய, ர, ழ ஒற்றுக்களின் முன் வல்லினம் வரின், இயல்பாகியும் மிகுந்தும் வரும்.*

(உ-ம்.)

| | |
|---|---|
| வேய்+கடிது = வேய்கடிது<br>வேர்+சிறிது = வேர் சிறிது<br>வீழ்+தீது = வீழ் தீது | எழுவாய்த் தொடரில் இயல்பாயின. |
| பேய்+பூதம் = பேய் பூதம்<br>நீர்+கனல் = நீர் கனல்<br>இகழ்+புகழ் = இகழ் புகழ் | உம்மைத் தொகையில் இயல்பாயின. |
| பெய்+புனல் = பெய்புனல்<br>தேர்+பொருள் = தேர்பொருள்<br>தாழ்+சடை = தாழ்சடை | வினைத் தொகையில்இயல்பாயின. |
| மெய்+கீர்த்தி = மெய்க்கீர்த்தி<br>கார்+பருவம் = கார்ப்பருவம்<br>யாழ்+கருவி = யாழ்க்கருவி | பண்புத் தொகையில் மிகுந்தன. |
| வேய்+தோள் = வேய்த்தோள்<br>கார்+குழல் = கார்க்குழல்<br>காழ்+படிவம் = காழ்ப்படிவம் | உவமைத் தொகையில் மிகுந்தன. |

**118.** வேற்றுமைப் புணர்ச்சியில் யகர, ரகர, ழகர ஈற்றின் முன் வல்லினம் வரின் மிகுதலும், இனத்தோடு உறழ்தலும் ஆகும்.

(உ-ம்.)

| | |
|---|---|
| நாய்+கால் =நாய்க்கால்<br>தேர்+தட்டு=தேர்த்தட்டு<br>ஊழ்+பயன்=ஊழ்ப்பயன் | வேற்றுமையில் வலி மிக்கது. |
| வேய் +குழல் =வேய்க்குழல், வேய்ங்குழல்<br>ஆர் +கோடு =ஆர்க்கோடு, ஆர்ங்கோடு<br>குமிழ் +கோடு =குமிழ்க்கோடு, குமிழ்ங்கோடு | வேற்றுமையில் இனத்தோடு உறழ்ந்தன. |

ந. சூ:—யரழ முன்னர்க் கசதப அல்வழி
இயல்பும் மிகலும் ஆகும்; வேற்றுமை
மிகலும் இனத்தோடு உறழ்தலும் விதிமேல்.

**119.** 'தேன்' என்னும் சொல்லின் முன் மூவின மெய்களும் வந்தால். இயல்பாகும்.

(உ-ம்.)

| | |
|---|---|
| தேன்+கடிது =தேன் கடிது.<br>தேன்+மாண்டது=தேன் மாண்டது.<br>தேன்+யாது =தேன் யாது? | அல்வழியில் இயல்பாயின. |
| தேன்+செம்மை=தேன் செம்மை<br>தேன்+மாட்சி =தேன் மாட்சி<br>தேன்+யாப்பு =தேன் யாப்பு | வேற்றுமையில் இயல்பாயின. |

**120.** 'தேன்' என்னும் சொல்லின் முன் மெல்லினம் வந்தால், இரு வழியிலும் னகர மெய் இயல்பாதலே அன்றிக் கெடுதலும் ஆகும்.

(உ-ம்) தேன்+மொழி—தேன் மொழி, தேமொழி—அல்வழியில் இயல்பும் கெடுதலும்.
தேன்+மலர் — தேன் மலர், தேமலர்—வேற்றுமையில் இயல்பும் கெடுதலும்.

**121.** 'தேன்' என்னும் சொல்லின்முன் வல்லினம் வந்தால், ஈற்று னகரமெய் இயல்பாதலே அன்றிக் கெட, வந்த வல்லினமாவது இன மெல்லினமாவது மிகும்.

(உ - ம்.) தேன் + குழம்பு = தேன் குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு—அல்வழியில் இயல்பு, வலி மிகுதல், இனமாதல் காண்க.

தேன் + குடம் = தேன் குடம், தேக்குடம், தேங் குடம்—வேற்றுமையில், இயல்பு, வலி மிகு தல், மெலி மிகுதல் காண்க.

ந. சூ:—தேன்மொழி மெய்வரின் இயல்பும், மென்
மேவின் இறுதி அழிவும், வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமாம் இருவழி. **46.**

**122.** வன்தொடர்க் குற்றியலுகரம் ஒழிந்த மற்ற ஐந்து தொடர்க் குற்றுகரத்தின் முன்னும் வல்லினம் வர, அல்வழியில் இயல்பாகும்.

(உ - ம்.) ஆறு + தலை = ஆறு தலை — நெடில்தொடர்
எஃகு + பெரிது = எஃகு பெரிது — ஆய்தத்தொடர்
வரகு + சிறிது = வரகு சிறிது — உயிர்த்தொடர்
வந்து + தந்தான் = வந்து தந்தான் — மென் தொடர்
எய்து + பொருள் = எய்துபொருள் — இடைத்தொடர்

ந. சூ:—வன்தொடர் அல்லன முன்மிகா அல்வழி. **37.**

**123.** இடத்தை உணர்த்தும் அங்கு, இங்கு என்னும் சொற்களுக்கு முன் வரும் கசதப மிகும்.

(உ - ம்.) அங்கு + சென்றான் — அங்குச் சென்றான்.
இங்கு + சென்றான் — இங்குச் சென்றான்.

**124.** காலத்தை உணர்த்தும் அன்று, இன்று முதலிய சொற்களுக்கு முன் வரும் கசதபக்கள் இயல்பாய்ப் புணரும்.

(உ - ம்.) அன்று + பார்த்தேன் — அன்று பார்த்தேன்.
என்று + கண்டாய் ? — என்று கண்டாய் ?

## V. யாப்பு

## (Prosody)

**125.** அறிவில் சிறந்தோர் பல வகைச் சொற்களால் அணி பெறப் பாடுவது யாப்பாகும். (யாப்பு, பாட்டு, பா, செய்யுள், கவி என்பன ஒரு பொருட் சொற்கள்).

**126.** எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை எனச் செய்யுள் உறுப்புக்கள் அறுவகைப்படும்.

**127.** எழுத்து:—முதலெழுத்தும், சார்பெழுத்தும் ஆகிய எழுத்துக்களே செய்யுளுக்குரிய எழுத்துக்களாகும்.

### அசை

### (Syllables)

**128.** அசை:—எழுத்துக்கள் தனித்தும் சேர்ந்தும் சீருக்கு உறுப்பாக நிற்பது, அசையாகும். அது, நேரசை, நிரையசை என இரு வகைப்படும்.

**129.** நேரசை:—குற்றெழுத்தும், நெட்டெழுத்தும் தனித்தாவது, முறையே ஒற்றடுத்தாவது வந்தால், நேரசையாம் (நேர்மை—தனிமை.)

(உ - ம்.) ஆ—நெட்டெழுத்துத் தனித்து வந்த நேரசை
ழ்—குற்றெழுத்துத் தனித்து வந்த நேரசை
வேள்—குற்றெழுத்து ஒற்றடுத்து வந்த நேரசை
வேல்—நெட்டெழுத்து ஒற்றடுத்து வந்த நேரசை

குறிப்பு:—தனிக்குறில் சீருக்கு முதலில் நேரசையாகாது.

**130.** நிரை அசை :—இரண்டு குற்றெழுத்துச் சேர்ந்தும், குறில் நெடிலைச் சேர்ந்தும், இவை இரண்டும் முறையே ஒற்றடுத்தும் வரின், நிரை அசையாம்.

(உ-ம்.) வெறி —இரண்டு குறில் சேர்ந்த நிரையசை
கூறு —குறில் நெடில் வந்த நிரையசை
நிறம் —இரண்டு குறில் ஒற்றடுத்து வந்த நிரையசை

விளாம் — குறில் நெடில் ஒற்றடுத்து வந்த நிரையசை.

## சீர்

## (feet)

**131.** அசையால் ஆக்கப்படுவது சீராகும். அச்சீர், ஓரசைச் சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நான்கு வகைப்படும்.

**132.** ஓரசைச்சீர்:-நேரசையாவது, நிரையசையாவது தனித்து நின்று சீராய் வருவது ஓரசைச் சீராம்.

(உ-ம்.) "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்,
நிலமிசை நீடுவாழ் வார்."

இதில் வார் என்னும் நேரசை தனித்துச் சீராய் வந்தது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

இதில் தக என்னும் நிரையசை தனித்துச் சீராய் வந்தது.

குறிப்பு:—நேரசைச்சீர் நாள் என்றும், நிரையசைச்சீர் மலர் என்றும் சொல்லப்படும். இவற்றிற்கு 'வாய்பாடு' என்பதுபெயர். இவை பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றில் வரும்.

**133.** ஈரசைச்சீர்:—இரண்டு அசைகள் கூடி வரின், ஈரசைச்சீர் எனப்படும். அச்சீர் நான்கு வகையாம்.

(உ - ம்.) அசை வாய்பாடு

| | |
|---|---|
| நேர் + நேர்—தேமா<br>நிரை + நேர்—புளிமா | இவை மாச்சீர் எனப்படும் |
| நிரை + நிரை—கருவிளம்<br>நேர் + நிரை—கூவிளம் | இவை விளச்சீர் எனப்படும். |

குறிப்பு:—இவை இயற்சீர் என்றும், அகவற்சீர் என்றும் வழங்கப்படும்.

**134.** மூவசைச்சீர் :—மூன்று அசைகள் சேர்ந்து வரின் மூவசைச்சீர் எனப்படும். மேற்கூறிய ஈரசைச் சீர்களின் இறுதியில் நேர் அசையேனும் நிரை அசையேனும் தனித்தனி சேர்க்கப்பட மூவசைச் சீராகும்.

(உ - ம்.) அசை வாய்பாடு

| | |
|---|---|
| நேர் + நேர் + நேர்—தேமாங்காய்<br>நிரை + நேர் + நேர்—புளிமாங்காய்<br>நிரை + நிரை + நேர்—கருவிளங்காய்<br>நேர் + நிரை + நேர்—கூவிளங்காய் | இவை காய்ச்சீர் எனவும், வெண்சீர் எனவும் சொல்லப்படும். |

குறிப்பு:—இக்காய்ச்சீர் வெண்பாவுக்குரிய சீராகும்.

| | |
|---|---|
| நேர் + நேர் + நிரை—தேமாங்கனி<br>நிரை + நேர் + நிரை—புளிமாங்கனி<br>நிரை + நிரை + நிரை—கருவிளங்கனி<br>நேர் + நிரை + நிரை—கூவிளங்கனி | இவை கனிச்சீர் எனவும் வஞ்சிச்சீர் எனவும் வழங்கப்படும். |

**135.** நாலசைச்சீர் :—நான்கு அசைகள் சேர்ந்து வரின், நாலசைச்சீர் ஆகும். இது செய்யுளில் சிறுபான்மையே வரும்.

## அடி
## (Metrical line)

**136.** சீர்களால் ஆக்கப்பட்டுச் செய்யுளுக்கு உறுப்பாய் வருவது அடியாகும். அது, குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகைப்படும்.

**137.** குறளடி (Dimeter) :—இரண்டு சீர்களைக் கொண்டு நடக்கும் அடி குறளடியாம் (குறள்-குறுகியது.)

(உ - ம்) "காமரு சித்த
ராம ணிடத்தில்
போமணில் சொற்ற
சீர்மை யுரைப்பாம்."

**138.** சிந்தடி (Trimeter):-மூன்று சீர்களைக்கொண்டு நடக்குமடி சிந்தடியாம்.

(உ -ம்.) இருது வேற்றுமை இன்மையால்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடக் கையினாய்."

**139.** அளவடி (Tetrameter) நான்கு சீர்களைக் கொண்டு நடக்குமடி அளவடி அல்லது நேரடி என்று கூறப்படும்.

"கரம்பயில் முரசினங் கறங்கக் கைதொடர்
நரம்பினு மியிழிசை நவில நாடகம்
அரம்பைய ராடிய அரங்கின் ஆண்டொழிற்
குரங்குகள் முறைமுறை குனிப்பக்காண்டியால்."

**140.** நெடிலடி (Pentameter):—ஐந்து சீர்களைக் கொண்டு நடக்குமடி நெடிலடியாம்.

(உ - ம்) "ஆக விம்மொழி யாசில கேட்டறி வுற்ருள்
ஓகை கொண்டுக ளிக்கும னத்தளு யர்ந்தாள்
போகை நன்றிவ னென்பது புந்தியின் வைத்தாள்
தோகை யுஞ்சில வாசக மின்னன சொன்னுள்."

**141.** கழிநெடிலடி (Polimeter):—ஐந்து சீர்களுக்கு மேற்பட்ட சீர்களைக்கொண்டு நடக்குமடி கழிநெடில் அடியாம் (கழிநெடில்-மிகவும் நீண்டது.)

## VI. அணி

### (Figures of speech)

**142.** அணி என்பது, செய்யுட்கு அழகு செய்து நிற்பதாம். அது சொல்லணி பொருளணி என இரண்டு வகைப்படும். இவற்றுள் பொருள் அணியே சிறப்புடைத்து.

**143.** சொல்லணி (Figures of Orthography and Etymology):-எழுத்தும சொல்லும் அடியுமாகிய மூன்றும் பலவாறு தொடர்ந்து நின்று செய்யுளை அழகு பெறச் செய்வது சொல்லணியாம்.

"நாக நெற்றியி னன்மணியோடைபோ
ஞக நெற்றியி னன்மணி யாறுபாய்
நாக நெற்றியி னன்மலர்க் காவப்பா
ஞக நெற்றியி னன்மதி தோன்றிற்றே.

**144.** பொருளணி (Figures of Rhetoric):—இது தன்மை, உவமை, உருவகம் முதலாகப் பல வகைப்படும்.

**145.** தன்மையணி (Essential qualities):—நடக்கும் நிகழ்ச்சிகளை இயல்பாக அமைத்துப் பாடுவது தன்மையணியாம்.

(உ-ம்.) "தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட் டாற்றவும்
தேயும் நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆய மங்கையர் அங்கை வருந்துவார்."

குறிப்பு:—இச்செய்யுளில் ஆய்ச்சியர் தயிர் கடையும் இயல்பை விளக்கியவாறு காண்க.

**146.** உவமை அணி (Simile):—(a) இரண்டு பொருள்களுக்கு ஒப்புமை தோன்றச் சொல்லுவது உவமையணியாம். இது வடமொழியில் உபமாலங்காரம் என்று கூறப்படும். இது உவமானம், உவமேயம், உவமை உருபு, பொதுத்தன்மை என்ற நான்கு உறுப்புக்களை உடையது.

(உ-ம்) "பால்போலும் இன்சொல்
பவளம்போல் செந்துவர்வாய்."

குறிப்பு:—இவற்றில் பால், பவளம் என்பன உவமானமாம்; சொல், வாய் என்பன உவமேயங்களாம். 'போலும்' என்பது உவம உருபாம். இனிமையும், சிவப்பும் பொதுத் தன்மையாம். உவமானம் உவமை எனவும், உவமேயம் பொருள் எனவும் சொல்லப்படும்.

இந்த உறுப்புக்களில் ஒன்று இரண்டு தொக்கு வருதலும் உண்டு.

(உ-ம்.) துடி இடை, சேல் விழி } இவைகளில் உவமை உருபும் பொதுத்தன்மையும் தொக்கு வந்தன.

## உவம உருபுகள்

ந. சூ:—போலப் புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே. 38.

(b) எடுத்துக்காட்டு உவமையணி:—இது உவமானத்தையும் உவமேயத்தையும் தனித்தனியே நிறுத்தி இடையில் உவம உருபு இல்லாமல் சொல்லுவது.

(உ-ம்.) "அகர முதல வெழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே யுலகு."

(c) இல்பொருள் உவமையணி:—இது உலகத்தில் இல்லாத பொருளை உவமையாகச் சொல்லுவதாம்.

(உ-ம்.) "மலடி வயிற்று மகன்போல."

**147.** உருவக அணி (Metaphor):—(a) உவமேயத்தில் உவமானத்தின் தன்மையை ஏற்றிச்சொல்வது.

(உ-ம்.) சேனை யாகிய கடல்
அடிக் கமலம்

குறிப்பு:—இவ்வுருவகத்தில் உவமேயத்திற்கும் உவமானத்திற்கும் இடையில் ஆகிய என்ற உருபு விரிந்தும் தொக்கும் வரும்.

(b) ஏகதேச உருவகம்:—இது பொருளின் ஒரு பகுதியை உருவகப்படுத்தி, மற்றொரு பகுதியை உருவகப்படுத்தாமல் கூறுவது.

(உ-ம்.) "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்."

குறிப்பு:—இதில் பிறவியானது கடலாக உருவகப்படுத்தப் பட்டதற்கிணங்க, இறைவனடி புணையாக உருவகப்படுத்தப் படாமை காண்க.

**148.** தற்குறிப்பேற்றவணி (Poet's own creation):- இது இயற்கையாக நிகழும் நிகழ்ச்சியில் கவி தனது கற்பனையை ஏற்றிக் கூறுவது.

(உ-ம்.) தமயந்தி முகத்தின் அழகுக்குத் தோற்றுச் சந்திரன் மறைந்தான்.

குறிப்பு:—இதில் இயல்பாக மறையும் சந்திரனைப் பார்த்துக் கவி தமயந்தி முகத்தின் அழகுக்குத் தோற்றுச் சந்திரன் மறைந்தான் என்னும் கருத்தை ஏற்றிக் கூறுவது காண்க.

செய்யுள்

"மண்படுதோட் கிள்ளி மதயானை மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால் — விண்படர்ந்து
பாயுங்கொ லென்று பனிமதியம் போல்வதூஉம்
தேயும் தெளிவிசும்பி னின்று."

# VI FORM

## I எழுத்து

### (Letters)

எழுத்துக்களின் பிறப்பு—போது

**1.** எழுத்துக்களின் பிறப்பு என்பது, எழுத்தாகிய குறியின் ஒலி. மக்களது முயற்சியினால் உடலின் உள்ளே நின்ற காற்று எழுப்ப எழுகின்ற ஒலியானது, மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகிய நான்கு இடங்களையும் பொருந்தி, உதடு, நாக்கு, பல், மேல்வாய் ஆகிய இவைகளின் முயற்சி வேறுபாட்டால், பலவகைப்பட்ட எழுத்துக்களாய் ஒலிக்கும்.

**2.** முதல் எழுத்துக்களின் பிறப்பிடம் :—உயிரும் இடையெழுத்தும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கும் ; வல்லினம் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கும் ; மெல்லினத்திற்கு மூக்கு இடமாகும்.

ந. சூ:—அவ்வழி,

ஆவி இடைமை இடம்மிடறு ஆகும் ;
மேவும் மென்மைமூக்கு ; உரம்பெறும் வன்மை. **1.**

**3.** சார்பு எழுத்துக்களின் பிறப்பு:—ஆய்தவெழுத்து, தலையை இடமாகக் கொண்டு பிறக்கும் ; முயற்சி வாய் திறந்து ஒலித்தல் ; மற்றைய சார்பு எழுத்துக்கள் தத்தம் முதலெழுத்துக்களைப் போலப் பிறக்கும்.

ந. சூ:— ஆய்தக் கிடம்தலை ; அங்கா முயற்சி ;
சார்பெழுத் தேனவும் தம்முதல் அனைய. **2.**

**4.** உயிரளபெடை :— உயிரளபெடையாவது, உயிர் நெட்டெழுத்துத் தனக்கு உரிய இரண்டுமாத்திரையின் மிக்குஒலித்தலாகும். (உயிர் + அளபு + எடை) அளபு எடையாவது, அளவைக்கடத்தல்.

செய்யுளில் ஓசை குறையும்போது மொழி முதல், இடை, கடை என்ற மூன்று இடங்களிலும் உள்ள நெட்டெழுத்துக்கள் அளபெடுக்கும். அளபெடுத்த நெட்டெழுத்திற்குப்பின் அதற்கு இனமான குறில் அளபெடுத்ததற்கு அறிகுறியாக எழுதப்படும்.

(உ - ம்.) ஓஒதல்—மொழி முதலில் வந்த அளபெடை.
செறாஅய்—மொழி இடையில் வந்த அளபெடை.
படாஅ—மொழி இறுதியில் வந்த அளபெடை.

குறிப்பு :—இவை செய்யுளில் ஓசை குறைந்தவிடத்து அவ்வோசையை நிறைக்க வந்த அளபெடைகளாம். இவ்வாறு அளபெடாவிடின் செய்யுளின் ஓசை குறையும். எனவே, இவற்றிற்குச் செய்யுள் இசை அளபெடை என்பது பெயர்.

செய்யுட்களில் சில இடங்களில் இனிய ஓசையைத் தருவதற்காகக் குறில் நெடிலாக அளபெடுப்பதுமுண்டு. அதற்கு இன்னிசை அளபெடை என்பது பெயர்.

(உ - ம்) "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லாம் மழை."

இதனுள் கெடுப்பதும், எடுப்பதும் என நிற்பினும் செய்யுள் ஓசை குறையாது, ஆயினும், இனிமையான ஓசையைத் தருவதற்குக் குறில் நெடிலாகி அளபெடுத்தது. அதனால் இவை இன்னிசை அளபெடை ஆயின.

செய்யுட்களில் சில இடங்களில் பெயர்ச்சொல் வினையெச்சம் ஆதல் பொருட்டு அளபெடுக்கும். அதற்குச் சொல்லிசை அளபெடை என்பது பெயர்.

(உ - ம்.) "உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்."

இச்செய்யுளில் விருப்பம் என்று பொருள்படும் நசை என்னும் பெயர்ச்சொல், விரும்பி என வினையெச்சப் பொருளைத் தருதற்பொருட்டு அளபெடுத்தமை காண்க.

மொழிக்கு முதலில் மட்டும் வரும் ஔகாரம் ஒன்றும், மூன்று இடத்தும் வரும் மற்றைய நெடில்கள் பதினெட்டும், இன்னிசை அளபெடை ஒன்றும், சொல்லிசை அளபெடை ஒன்றும் ஆக உயிர் அளபெடை இருபத்தொன்றும்.

ந.சூ:—இசைகெடின் மொழிமுதல் இடைகடைநிலை நெடில்
அளபெழும் ; அவற்றவற்று இனக்குறில்குறியே. 3.

**5.** மொழியின் ஈற்றில் நிற்கும் எழுத்துக்கள்:— தனித்தும் மெய்யெழுத்துக்களோடு கூடியும் வரும் பன்னிரண்டு உயிரும், ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும்பதினொரு மெய்களும், குற்றியலுகரமும் ஆகிய இருபத்து நான்கு எழுத்துக்களும் மொழியின் ஈற்றில் நிற்கும் எழுத்துக்களாகும்.

(உ - ம்) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ— இவை ஓரெழுத்து ஒரு மொழிகளாதலால், மொழிக்கு முதலும், ஈறுமாதல் காண்க. அ, இ, உ சுட்டுப் பொருளைத் தரும் ; எ, ஏ—வினாப்பொருளைத் தரும் ; ஆ - பசு, ஈ - கொடு, ஊ - மாமிசம், ஐ - அழகு, ஒ - ஒப்புப் பொருள் தரும் வினைச்

சொல், ஓ - மதகு நீர் தாங்கும் பலகை, ஔ - பற்றுதல்.

சில, நிலா, புளி, தீ, கடு, பூ, சே, கை, நோ, போ, வௌ என எகரம் ஒழிந்த பதினோருயிர்கள் மெய்யுடன் கூடி மொழிக்கு ஈறாயின. (சே - எருது, நொ - துன்பப்படு, வௌ - அபகரி) மற்றவைகளையும் இவ்வாறே காண்க.

ந. சூ:—ஆவி ஞணநமன யரல வழளமெய்
சாயும் உகரம் நாலாறும் ஈறே.

# II. சொல்

## (Words)

**6.** மொழிகள் தனி மொழி என்றும், தொடர் மொழி என்றும் பொது மொழி என்றும் மூன்று வகைப்படும்.

**7.** தனிமொழி (Simple word):-ஒரு சொல் தனியே இருந்து ஒரு பொருளைத் தருவது தனி மொழியாம். இது ஒரு மொழி என்றும் சொல்லப்படும்.

(உ - ம்) கல், மண், நிலம், நீர்.

**8.** தொடர்மொழி (Compound word):—மொழிகள் இரண்டு முதலியனவாகத் தொடர்ந்து நின்று பல பொருள்களைத் தருவது தொடர் மொழியாம். அது சொற்றொடர் என்றும் சொல்லப்படும்.

(உ - ம்) மரம் வீழ்ந்தது.

**9.** பொது மொழி:—இது ஒரு சொல் ஒரு மொழி யாய் நின்று ஒரு பொருளையும், தொடர்மொழியாய் நின்று

பல பொருளையும் தருவதாம். எனவே, இது தனி மொழிக்கும் தொடர் மொழிக்கும் பொதுவாயிற்று.

(உ - ம்.) எட்டு, தாமரை, வேங்கை.

எட்டு—தனிமொழியான விடத்து எட்டு என்னும் தொகையைக குறிக்கும்; தொடர் மொழியான விடத்து எள்+து எனப் பிரிக்கப்படும். அப்பொழுது 'எள்ளை உண்பாயாக,' என்று பொருள் படும்.

தாமரை—தனி மொழியானவிடத்துத் தாமரை என்ற மலரைக் குறிக்கும்; தொடர் மொழியானவிடத்துத் தா+மரை என்று பிரிக்கப்பட்டு, தாவுகின்ற மான் எனப் பொருள் படும்.

வேங்கை—தனி மொழியானவிடத்து வேங்கை என்னும் மிருகத்தைக் குறிக்கும். தொடர் மொழியானவிடத்து வேம் + கை எனப் பிரிக்கப்பட்டு, 'வேகின்ற கை' என்று பொருள் படும்.

ந. சூ:—ஒருமொழி ஒருபொரு ளனவாம்; தொடர்மொழி
பலபொரு ளன;பொது இருமையும் ஏற்பன. 5.

## ஆகு பெயர்

### (Synecdoche)

**10.** ஒரு பொருளின் இயற்பெயர் அப்பொருளோடு சம்பந்தமுடைய மற்றொரு பொருளுக்குத் தொன்று தொட்டு வழங்கி வருவது ஆகுபெயராகும்.

அவ்வாகு பெயர், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், எண்ணல் அளவை, எடுத்தல் அளவை, முகத்தல் அளவை, நீட்டல் அளவை, சொல், தானி, கருவி, காரியம், கருத்தா, உவமை எனப் பதினாறு வகைப்படும்.

(பொருள் முதலாகிய ஆறினையும் 5-ஆம் பாரத்தின் பகுதியில் காண்க.)

எண்ணல் அளவை ஆதுபெயர்:—

(உ - ம்) ஆடையை அரையில் கட்டினன். இங்கு அரை என்னும் எண்ணல் அளவைப் பெயர், அவ்வளவைக் கொண்ட மனித உறுப்பிற்கு (இடைக்கு) ஆயிற்று.

எடுத்தல் அளவை ஆதுபெயர்:—

(உ - ம்) ஒருவன் கடைக்குச் சென்று ஒரு பொருளைச் சுட்டி, 'ஒரு வீசை கொடு,' என்றான். இதில் வீசை என்னும் எடுத்தல் அளவைப் பெயர், அவ்வளவைக்கொண்ட பொருளுக்கு ஆயிற்று.

முகத்தல் அளவை ஆதுபெயர்:—

(உ - ம்) உண்பது நாழி—நாழி என்னும் முகத்தல் அளவைப் பெயர், அவ்வளவைக்கொண்ட உணவுப் பொருளுக்கு ஆயிற்று.

நீட்டல் அளவை ஆதுபெயர்:—

(உ - ம்) உடுப்பது நான்கு முழம்—முழம் என்னும் நீட்டல் அளவைப் பெயர், அவ்வளவை உடைய துணிக்கு ஆயிற்று.

சொல்லாகு பெயர்:—

(உ - ம்) சொல்லை அறிந்தான்—சொல் என்னும் மொழியின் பெயர், அதன் பொருளுக்கு ஆயிற்று.

தானி ஆகுபெயர்:—

(உ - ம்) கழல் பணிந்தான்—கழல் என்னும் பொருளின் பெயர், அது அணியப்படும் தானம் ஆகிய பாதத்திற்கு ஆயிற்று.

கருவி ஆகுபெயர்:—

(உ - ம்) திருக்குறள் படித்தான்—குறள் என்னும் கருவியின் பெயர், அதனாலாகிய நூலுக்கு ஆயிற்று.

காரிய ஆகுபெயர்:—

(உ - ம்) இந்நூல் அலங்காரம்—அலங்காரம் என்னும் இலக்கணமாகிய காரியத்தின் பெயர், அதன் கருவியாகிய நூலுக்கு ஆயிற்று.

கருத்தாவாகுபெயர்:—

(உ - ம்) திருவள்ளுவர் படித்தான்—திருவள்ளுவர் என்னும் கருத்தாவின் பெயர், அவர் இயற்றிய நூலுக்கு ஆயிற்று.

உவமையாகுபெயர்:—

(உ - ம்) காளை வந்தான்—காளை என்னும் உவமானத்தின் பெயர், உவமேயமாகிய மகனுக்கு ஆயிற்று.

குறிப்பு:—திருக்குறள், திருவள்ளுவர் என்பவற்றில் திரு என்பன அடைமொழிகள். இவ்வடைமொழிகளை அடுத்து வரும் ஆகுபெயர்கள் அடையடுத்த ஆகுபெயர்களாம்.

இருமடி ஆகுபெயர்:—

(உ - ம்.) வரை எடுத்தான்—இதில் வரை என்னும் கணுவின் பெயர், முதலில் அக்கணுவையுடைய மூங்கிலுக்கு ஆகி, பின்பு அம்மூங்கில் வளரும் இடமாகிய மலைக்கு ஆயிற்று. (வரை-மலை) இவ்வாறு

இரு முறை மடிந்து வந்ததனால், இஃது இருமடி யாதுபெயர் ஆயிற்று.

மும்மடி ஆகுபெயர்:—

(உ - ம்.) கார் அறுத்தனர்—கார் என்னும் கருமை நிறப் பெயர், முதலில் மேகத்திற்கும், பின்பு அம்மேகம் பெய்யும் பருவத்திற்கும் ஆகி, பின்னர் அக்காலத்தில் விளையும் நெற்பயிருக்கு ஆயிற்று. (இங்கு மும்முறை மடிந்து வந்தது காண்க.)

குறிப்பு:—

(I) முதலாகு பெயருக்கும் சினையாகு பெயருக்கும் உள்ள வேற்றுமை :—

(1) முதலாகு பெயர், பொருளின் பெயர் அதன் சினைக்கு ஆவது.

(உ - ம்.) தாமரை முகம்.

சினையாகுபெயர், சினையாகிய உறுப்பின் பெயர் முதலுக்கு ஆவது.

(உ - ம்.) வெற்றிலை நட்டான்.

(2) இடவாகு பெயருக்கும் தானியாகு பெயருக்கும் உள்ள வேற்றுமை :—இடவாகுபெயர், இடத்தின் பெயர் இடத்தில் உள்ள பொருளைக் குறிப்பது.

(உ - ம்.) ஊர் அடங்கிற்று.

தானியாகு பெயர், இடத்திலுள்ள பொருளின்பெயர் இடத்தைக் குறிப்பது.

(உ - ம்.) கழல் பணிந்தான்.

II. ஆகுபெயருக்கும் அன்மொழித் தொகைக்கும் உள்ள வேறுபாடு:—

1. ஆகு பெயர், ஒரு சொல்லாய் வரும்; அன்மொழித் தொகை பல சொல்லாய் வரும்.

2. ஆகு பெயர், பொருள் முதலிய ஆறின் சம்பந்தத்தால் பிறிதொரு பொருளை உணர்த்தும்.

அன்மொழித்தொகை, வேற்றுமைத்தொகை முதலிய தொகைகளின் அடியாகப் பிறக்கும்.

3. ஆகுபெயர், தொன்று தொட்டு வரும்; அன்மொழித் தொகை, புதிதாக ஆக்கப்படும்.

ந. சூ:—பொருள்முதல் ஆறோடு அளவைசொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தோன்முறை உரைப்பன ஆகு பெயரே. 6.

## வேற்றுமை

## (Case)

**11.** முதல் வேற்றுமை (Nominative Case):—முதல் வேற்றுமை, திரிபு இல்லாத பெயரே. இது வினையையும், பெயரையும், வினாவையும் கொண்டு முடியும்.

(உ-ம்.) மரம் விழுந்தது:—வினை கொண்டு முடிந்தது.
இது மரம். —பெயரைக்கொண்டு முடிந்தது.
அவர் யார்? வினாவைக்கொண்டு முடிந்தது.

குறிப்பு:—முதல் வேற்றுமை, எழுவாய் வேற்றுமை என்றும் சொல்லப்படும். எழுவாயானது, செய்பவன், கருத்தா, வினை முதல் எனப் பல பெயர் பெறும்.

ந. சூ:—எழுவாய் உருபு திரிபில் பெயரே;
வினைபெயர் வினாக்கோளல் அதன்பய னிலையே. 7.

**12.** இரண்டாம் வேற்றுமை (Accusative case):—இதன் உருபு ஐ யாகும். இதன் பொருள் செயப்படுபொருள்.

இது, ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல் உடைமை என்னும் பொருளில் வரும்.

(உ - ம்) வீட்டைக் கட்டினான். — ஆக்கல்
காட்டை அழித்தான். — அழித்தல்
ஊரை அடைந்தான். — அடைதல்
ஊரை நீங்கினான். — நீங்கல்
புலியை ஒத்தான். — ஒத்தல்
பொன்னை உடையான் — உடைமை

ந. சூ:—இரண்டாவதனுருபு ஐயே ; அதன் பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி ஆகும். நீ.

**13.** மூன்றாம் வேற்றுமை (Instrumental case):- மூன்றாம் வேற்றுமையின் உருபுகள், ஆல், ஆன், ஒடு, ஓடு என்பனவாம். இதன் பொருள் கருவிப் பொருளும், கருத்தாப் பொருளும், உடனிகழ்ச்சிப் பொருளுமாம்.

ஆல், ஆன், என்னும் உருபுகள், கருவி, கருத்தாப் பொருளிலும், ஒடு, ஓடு என்னும் உருபுகள் உடன் நிகழ்ச்சிப் பொருளிலும் வரும்.

கருவி, முதற்கருவி, துணைக்கருவி என இரண்டு வகைப் படும்.

(உ - ம்) பொன்னால் ஆகிய காப்பு<br>பொன்னான் ஆகிய காப்பு } முதற்கருவி

(இங்குப் பொன், காப்புச் செய்வதற்கு இன்றியமையாத கருவி.)

தண்ட சக்கரங்களால் செய்த குடம்.—துணைக்கருவி. குடம் செய்வதற்குத் தண்டமும் சக்கரமும் துணை செய்தன.

கருத்தாப் பொருளாவது, காரியம் செய்பவனை உணர்த்தும். அது, ஏவுதற்கருத்தா என்றும் இயற்றுதற்கருத்தா என்றும் இரு வகைப்படும்.

(உ - ம்.) அரசனால் ஆகிய கோயில்<br>அரசனின் ஆகிய கோயில் } ஏவுதற்கருத்தா

(அரசன் ஏவக் கோயில் கட்டப்பட்டது.)

தச்சனால் ஆகிய கோயில்<br>தச்சனின் ஆகிய கோயில் } இயற்றுதற்கருத்தா

(இங்குத் தச்சனே கோயில் இயற்றினான்.)

குறிப்பு:—முதல் வேற்றுமைக் கருத்தாவிற்கும், மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவிற்கும் உள்ள வேறுபாடுகள் :—

(1) முதல் வேற்றுமைக் கருத்தா, செய்வினையைக் கொண்டு முடியும்; மூன்றாம் வேற்றுமைக் கருத்தா, செயப்பாட்டு வினையைக் கொண்டு முடியும்.

(2) முதல் வேற்றுமைக் கருத்தாவாயின், செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமையை ஏற்கும்; மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவாயின்,செயப்படுபொருள் முதல் வேற்றுமையை ஏற்கும்.

(உ - ம்.) கந்தன் வீட்டைக் கட்டினான்.<br>கந்தனால் வீடு கட்டப்பட்டது.

உடன் நிகழ்ச்சிப் பொருளாவது, வினைகொண்டு முடியும் கருத்தாவின் தொழிலைத் தன்னிடத்தும் உடன் நிகழப் பெறுவது.

(உ - ம்.) தந்தையோடு மகன் வந்தான்—இங்குக் கருத்தாவின் தொழில், வருதல். அத்தொழில் மகனிடத்தும் உடன் நிகழ்தல் காண்க.

ந. சூ:—மூன்று வதனுருபு ஆல்ஆன் ஒடுஓடு;
கருவி கருத்தா உடனிகழ் வதன்பொருள். 9.

**14.** நான்காம் வேற்றுமை (**Dative case**): *நான்காம் வேற்றுமையுருபு கு ஒன்றேயாம். அதன் பொருள் ஏற்றுக் கோடற்பொருளாகும். (ஏற்றுக்கோடல்—ஏற்றுக்கொள்ளு தல்). அது* கோடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, *முறை முதலிய பல பொருளில் வரும். (நேர்ச்சி-நட்பு, தகவு-தகுதி, அதுவாதல் - ஒன்று மற்றொன்றாதல், பொருட்டு - நிமித்தம்.)*

| | | |
|---|---|---|
| (உ - ம்.) | *கந்தனுக்கு வீட்டைக் கொடுத்தான்* | *—கொடை* |
| | *பாம்புக்குப் பகை கருடன்* | *—பகை* |
| | *இராமனுக்கு நண்பன் குகன்* | *—நேர்ச்சி* |
| | *அரசர்க்குரியது அருங்கலம்* | *—தகுதி* |
| | *சோற்றுக்கு அரிசி* | *—அதுவாதல்* |
| | *கூலிக்கு வேலை* | *—பொருட்டு* |
| | *வீமனுக்குத் தம்பி நகுலன்* | *—முறை* |

குறிப்பு:—குவ்வுருபு *நிற்றற்கு உரிய இடத்தில்* பொருட்டு, நிமித்தம், ஆக *என்பன சொல்லுருபுகளாய் வரும்.*

(உ - ம்.) *அறிவின்பொருட்டுக் கற்றான்.*
*அறிவின்நிமித்தம் கற்றான்.*
*அறிவுக்காகக் கற்றான்.*

ந. சூ:—நான்கா வதற்குரு பாகும் குவ்வே;
கோடைபகை நேர்ச்சி தகவுஅது வாதல்
பொருட்டுமுறை ஆதியின் இதற்கிதெனல் பொருளே.

**15.** ஐந்தாம் வேற்றுமை (**Ablative of motion**):— *ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள்* இன், இல் *என்பனவாம்.*

அதன் பொருள் நீக்கப் பொருளும், ஒப்புப் பொருளும், எல்லைப் பொருளும், ஏதுப் பொருளுமாம். (ஏது—காரணம்)

(உ - ம்.) மலையின் வீழ் அருவி — நீக்கப் பொருள்
காக்கையில் கரிது களம்பழம்—ஒப்பு ,,
மதுரையின் வடக்குச் சேலம்—எல்லை ,,
கல்வியில் பெரியர் கம்பர்—ஏது ,,

குறிப்பு:—ஒப்புப் பொருள் உவமப் பொருவு என்றும், எல்லைப்பொருள் உறழ் பொருவு என்றும் வேறு பெயர் பெறும்.

ந. சூ:—ஐந்தா வதனுருபு இல்லும் இன்னும் ;
நீங்கலொப் பெல்லை ஏதுப் பொருளே. 11.

**16.** ஆறும் வேற்றுமை (Genitive case): ஆறும் வேற்றுமையின் உருபுகள் அது, ஆது, அ என்பனவாம். இதன் பொருள் கிழமைப் பொருளாம். இக்கிழமைப் பொருள் தற்கிழமை என்றும், பிறிதின் கிழமை என்றும் இரண்டுவகைப்படும். தற்கிழமையாவது தன்னிடத்திலிருந்து பிரிக்கப்படாத பொருளின் சம்பந்தம். பிறிதின் கிழமை தன்னைவிட்டுப் பிரிக்கப்படக்கூடிய பொருளின் சம்பந்தம். தற்கிழமை பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபினாக்கம் என்ற ஐந்தையும் பற்றி வரும்.

பண்பு, குணப்பண்பு, தொழிற்பண்பு என இரு வகைப் படும்.

(உ - ம்.) கண்ணனது கருமை—குணம் } பண்புத்
கண்ணனது வரவு —தொழில் } தற்கிழமை
குதிரையினது கால்—உறுப்புத் தற்கிழமை
மக்களதுகூட்டம்—ஒன்றன்கூட்டத் தற்கிழமை
பறவைகளதுகூட்டம்--பலவினீட்டத் தற்கிழமை
நெல்லினது பொரி —திரிபினாக்கத் தற்கிழமை

பிறிதின் கிழமையாவது, தன்னின் வேறாகப் பிரிக்கப்படும் சம்பந்தம் உடையது. இது பொருள், இடம், காலம் என்ற மூன்றையும் பற்றி வரும்.

(உ - ம்.) கண்ணனுடைய பசு—பொருட்பிறிதின் கிழமை
முருகனது கோயில்—இடப்பிறிதின் கிழமை
முருகனது நாள் — காலப்பிறிதின் கிழமை
தனது தலை — ஆது உருபு

குறிப்பு:—இவ்வேற்றுமைக்கு 'உடைய' என்பது சொல் உருபாய் வரும்.

(உ - ம்) என்னுடைய வீடு.

ந. சூ:—ஆறன் ஒருமைக் கதுவும் ஆதுவும்
பன்மைக் கவ்வும் உருபாம்; பண்புறுப்பு
ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபி னாக்கமாம் தற்கிழ மையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே. 12.

**17.** ஏழாம் வேற்றுமை (Local ablative):—ஏழாம் வேற்றுமைக்கு உருபு கண் முதலியனவாகும். இதன்பொருளாவது தன்னை ஏற்ற பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களும், தற்கிழமை, பிறிதின் கிழமை என்னும் இரண்டு பொருள்களுக்கும் இடமாய் நிற்றலாம். எனவே, இவ்வேற்றுமையின் பொருள் இடப்பொருள்.

(உ - ம்) 1. மணியின் கண் ஒளி —தற்கிழமை } பொருள் இடமாயிற்று
பனையின்கண்பறவை —பிறிதின் ,, }

2. ஊரின் கண் வீடு—தற்கிழமை } இடம் இடமாயிற்று
வானத்தின் கண் பருந்து—பிறிதின் கிழமை }

3. நாளின்கண் நாழிகை-தற்கிழமை } காலம்
சித்திரையில் பாதிரி பூத்தது பி.கி. } இடமாயிற்று

4. கையின்கண் விரல்—தற்கிழமை } சினை இட
கையின்கண் மோதிரம்—பிறிதின் கிழமை } மாயிற்று.

5. இளமையின் கண் அழகு—தற்கிழமை } குணம்
முதுமையின் கண் செல்வம்-பிறிதின் கிழமை } இடமாயிற்று:

6. ஆட்டத்தின் கண் அபிநயம்—தற்கிழமை } தொழில்
ஆட்டத்தில் பாட்டு—பிறிதின் கிழமை } இடமாயிற்று.

ந. சூ:—ஏழன் உருபு கண்ணாதி யாகும்;
பொருள்முதல் ஆறும் ஓரிரு கிழமைக்கு
இடனாய் நிற்றல் இதன்பொருள் என்ப. 13.

**18.** எட்டாம் வேற்றுமை (Vocative case):— எட்டாம் வேற்றுமைக்கு உருபுகள் இல்லை. என்றாலும், சில பெயர்கள் விளியடையும்பொழுது ஈறு திரிதல், கெடுதல், மிகுதல், இயல்பாதல், ஈற்றயலெழுத்துத் திரிதல் முதலிய விகாரங்களைப் பெறும். இதன் பொருள் படர்க்கைப் பொருளை முன்னிலையாக அழைத்தலாம். இவ்வேற்றுமை விளி வேற்றுமை எனவும்படும். இவ்விளி அண்மையிலுள்ள வரை அழைத்தால் அண்மைவிளி என்றும், தொலைவிலுள்ள வரை அழைத்தால் சேய்மை விளி என்றும் சொல்லப்படும்.

(உ - ம்) அன்னை—அன்னாய்—ஈறு திரிதல்.
நண்பன்—நண்ப—ஈறு கெடுதல்.
மகன்—மகனே—ஈறு மிகல்.
தோழி — தோழி — இயல்பு.
மக்கள் — மக்காள்— ஈற்றயல் திரிதல்.

ந. சூ:—எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பயல்
திரிபு மாம்;பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே. 14.

## வினைச்சொல்

## (Verbs)

**19.** *வினைச்சொற்கள்* செயப்படு பொருள் குன்றிய வினை, செயப்படு பொருள் குன்றாவினை *என்றும்;* **தன்வினை,** பிறவினை *என்றும்;* உடன்பாட்டு வினை, எதிர்மறை வினை *என்றும்;* செய்வினை, செயப்பாட்டு வினை *என்றும் பல வகைப்படும்.*

(1) *செயப்படு பொருள் குன்றிய வினையாவது* (**Intransitive verb**), *செயப்படு பொருள் இல்லாத வினையாம்.*

(உ-ம்.) சென்றன், நின்றன்.

*செயப்படுபொருள் குன்றியவினையாவது* (**Transitive verb**), *செயப்படு பொருள் உள்ள வினையாம்.*

(உ-ம்.) படித்தான், அடித்தான்.

(2) *தன்வினையாவது, கருத்தா, தான் நேரே செய்யும் வினையாம்.*

(உ-ம்.) வந்தான்.

*பிறவினையாவது, கருத்தா பிறரைக் கொண்டு செய்விக்கும் வினையாம்.*

(உ-ம்.) செய்வித்தான்.

(3) *உடன்பாட்டு வினையாவது, தொழில் நடந்ததை உணர்த்தும் வினையாம்.*

(உ - ம்.) உண்டான், சென்றன்.

எதிர்மறை வினையாவது, தொழில் நடவாமையை உணர்த்தும் வினையாம்.

(உ - ம்) உண்டிலன், சென்றிலன்.

(4) செய்வினையாவது, கருத்தா செய்யும் வினையாகும்.

(உ - ம்) குடத்தைச் செய்தான்.

செயப்பாட்டு வினையாவது, கருத்தாவால் செய்யப் படும் வினையாம்.

(உ - ம்) குயவனல் குடம் வனையப்பட்டது

## பொது வினை

## (Common verbs)

**20.** பொது வினை என்பது, மேற்காட்டிய பல வகைகளில் ஒவ்வொரு வகைக்கும் பொதுவாக வரும் வினையாம்.

(1) செயப்படு பொருள் குன்றிய வினைக்கும் செயப்படு பொருள் குன்ற வினைக்கும் பொது வினை:

(உ - ம்) வெளுத்தான்.

குறிப்பு:—இது 'ஆடையை வெளுத்தான்,' என்று வந்தால், செயப்படு பொருள் குன்றவினை; 'முகம் வெளுத்தான்,' என்று வந்தால், செயப்படு பொருள் குன்றிய வினையாம்.

(2) தன் வினைக்கும் பிற வினைக்கும் பொதுவான வினைக்கு மேற்காட்டியவைகளே உதாரணமாம்.

(3) உடன்பாட்டு வினைக்கும் எதிர்மறை வினைக்கும் பொது வினை:

(உ - ம்) செய்யாய்.

குறிப்பு:—இது 'செய்' என்னும் ஏவலைக் குறிக்கும் பொழுது உடன்பாடாம்; 'செய்யமாட்டாய்,' என்று பொருள் படும்பொழுது எதிர்மறை வினையாம்.

(4) செய்வினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் பொது வினை.

(உ - ம்) புலி கொன்ற யானை

குறிப்பு:—இது 'புலியைக் கொன்ற யானை' என்று பொருள் படும்பொழுது செய்வினையாம், 'புலியால் கொல்லப்பட்ட யானை' எனப் பொருள்படும்போது செயப்பாட்டுவினையாம்.

**21.** தன்மை வினை முற்று, முன்னிலை வினை முற்று, ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினைமுற்றுக்கள், பெயரெச்ச வினையெச்சங்கள் ஆகிய இவைகள் இருதிணைக்கும் பொது வாக வரும் வினைகளாகும்.

(உ - ம்) நான் வந்தேன், நாம் வந்தோம் } தன்மை வினை முற்று.

நீ உண்டாய், நீர் உண்டீர் } முன்னிலை வினை முற்று.

நீ செல், நீர் செல்லும் } ஏவல் வினை முற்று.

குறிப்பு:—தன்மை, முன்னிலை, ஏவல் என்ற மூன்று வினை களும் திணை பால் இரண்டிற்கும் பொதுவாக வந்தமை காண்க.

வாழ்க:—வியங்கோள் வினைமுற்று.

வேறு, இல்லை, உண்டு } நான், நாம், நீ, நீர், அவன், அவள், அவர்கள், அது, அவை.

குறிப்பு:—வேறு, இல்லை, உண்டு என்ற சொற்களும் திணை பால் இடங்கட்குப் பொதுவாய் வந்தன.

உண்ட (நான், நாம் முதலியன)
உண்டு (வந்தேன், வந்தோம் முதலியன)

குறிப்பு:—இப்பெயரெச்ச வினையெச்சங்களும் திணை பால் இரண்டிற்கும் பொதுவாய் வந்தன.

**22.** 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினை முற்று, ஆண் பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய நான்கு பால்களுக்கும் பொதுவாய் வரும்.

(உ - ம்) உண்ணும்—அவன், அவள், அது, அவை.

**23.** 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் செய்து, செய்பு என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சங்களைப் போல உடன்பாட்டு இறந்தகால வினையெச்சமாகும்.

(உ - ம்) "மக்களை முன் காணு, மன நடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா"

இங்கு, காணு என்பது, கண்டு என்றும், நடுங்கா என்பது நடுங்கி என்றும், உயிரா என்பது உயிர்த்து என்றும், அணையா என்பது அணைத்து என்றும் இறந்த கால உடன்பாட்டு வினையெச்சப்பொருளைத் தந்தது காண்க.

'செய்யா' என்னும் வாய்பாட்டுச் சொல், இவ்வாறு வினையெச்சமாய் வருதல் அல்லாமல், ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகவும், எதிர்மறை வினைமுற்றாகவும், ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சமாகவும் வரும்.

(உ - ம்) ஓடா யானை—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
அவை ஓடா—எதிர்மறை வினை முற்று.
உண்ணு வருந்தின—ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்.

**24.** ஏவலுக்கும் பகுதிக்கும் உள்ள வேறுபாடு:—

(1) ஏவல், முன்னிலையிடத்திற்கே உரியது; பகுதி, பகுபதத்தின் எல்லா வினைகளுக்கும் பொதுவாய் முதலில் வருவது.

(உ-ம்) செல்—ஏவல் வினை.

குறிப்பு:—சென்றாய், செல்கிறோம், சென்றன, செல்லும் முதலிய வினைகளில் 'செல்' என்பது பகுதியாய் வந்தது.

(2) ஏவல், காலம் காட்டும்; பகுதி, காலங்காட்டாது.

(3) ஏவல், கட்டளையிடும்; பகுதி, செயலை உணர்த்தும்.

## முற்றெச்சம்

**25.** முற்று வினை, வினையெச்சப் பொருளிலேனும், பெயரெச்சப் பொருளிலேனும் வரின், முற்றெச்சம் எனப்படும்.

(உ-ம்) (1) கண்டனன் மகிழ்ந்தனன்.
சென்றனன் வந்தான்.

குறிப்பு:—கண்டனன், சென்றனன் என்னும் தெரிநிலை வினை முற்றுக்கள், கண்டு, சென்று என்று பொருள்படுதலின், முற்று எச்சமாயின.

(2) குமரன் வேலினன் வந்தான்.

குறிப்பு:—இதில் வேலினன் என்னும் குறிப்பு வினைமுற்று, வேலையுடையவனாய் எனப் பொருள்படுதலின், குறிப்பு முற்றெச்சமாயிற்று.

(3) வேலினன் குகன் வந்தான்.

குறிப்பு:—வேலினன் என்னும் குறிப்புமுற்று, வேலையுடைய எனப் பொருள்படுதலால் பெயரெச்சமாயிற்று.

ந. சூ:—வினைமுற் றேவினை யெச்சம் ஆகலும்
குறிப்புமுற்று ஈரேச்சம் ஆகலும் உளவே. 15.

## இடைச்சொல்

## (Particles)

**26.** 'மற்று' என்னும் இடைச் சொல், வினைமாற்றுப் பொருளிலும், அசை நிலைப் பொருளிலும், 'பிறிது' என்னும் பொருளிலும், 'பின்' என்னும் பொருளிலும் வரும்.

(உ-ம்) (1) "மற்று *அறிவாம் நல்வினை; யாம் இளையம்.*"

குறிப்பு:—*'நல்வினையை விரைந்து அறிவோம்' என்பதை மாற்றி, 'இனி மெல்ல நல்வினையை அறிவோம்' என்று பொருள் தருதலின், இது வினை மாற்றாயிற்று.*

(2) மற்று *எனை ஆள்க.*

குறிப்பு:—*இங்கு வேறு பொருளின்றி நிற்றலால் அசைநிலை யாயிற்று.*

(3) *அறம் செய்யத் தக்கது;* மற்றது *செய்யத் தகாதது.*

குறிப்பு:—*இதில் மற்று என்பது பிறிதாயிற்று.*

(4) மற்றிவளும் *கோற்கண்ணள் ஆகும் குனிந்து.*

குறிப்பு:—இதில் 'மற்று' *என்பது 'பின்' என்னும் பொருளில் வந்தது*

ந. சூ:—வினைமாற் றசைநிலை பிறிதுஎனும் மற்றே. 16.

**27.** 'கோல்' என்னும் இடைச்சொல்:—இது ஐயப் பொருளிலும் அசைநிலைப் பொருளிலும் வரும்.

(உ-ம்) *'இவ்வளவில் செல்லுங்கொல்!'*—ஐயம்
*'கற்றதனாலாய பயன் என்கொல் ?'—இதில் வேறு பொருள் இல்லாததால் அசைநிலை.*

ந. சூ:—கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே. 17.

**28.** 'தான்' என்னும் இடைச்சொல், அசை நிலைப் பொருளினும், தேற்றப் பொருளினும் வரும்.

(உ-ம்) (1) *பாவந்தான் செய்திட்டாலும் பார்ப்பவர் கடவுளாவர்—இங்குத் தான் என்பது அசை நிலையாயிற்று.*

*(2) வந்தவன்றான் பேசினான்.—தெளிவுப் பொருளைத் தருதலின் தேற்றமாயிற்று.*

**29.** 'மன்' என்னும் இடைச்சொல், அசைநிலை, ஒழியிசை, கழிவு, மிகுதி, நிலைபேறு என்னும் பொருள்களைத் தரும்.

(உ - ம்) *'அதுமன் கொண்கன் தேரே'—அசைநிலை.*

*'கூரியதோர் வாள்மன்'—இஃது 'இப்பொழுது 'ஒடிந்துவிட்டது' என்னும் மறைபொருளைத் தருதலால் ஒழியிசை.*

*'பண்டு காடு மன்'—ஆக்கம்.*

*'சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே!'-கழிவு.*

*'எந்தை எமக்கருளும் மன்'—மிகுதி.*

*'மன்று உலகத்து மன்னியது புரிமோ'—நிலை பேறு.*

ந. சூ:—மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்
கழிவு மிகுதி நிலைபே றாகும். 18.

**30:** 'முன், பின்' என்னும் இடைச்சொற்கள்:—இவை இடப் பொருளையும் காலப் பொருளையும் தரும்.

(உ - ம்) பின் இரு, முன் செய்—இவை இடத்தையும் காலத்தையும் உணர்த்தின.

**31.** 'இனி' என்னும் இடைச்சொல் இட எல்லையையும் கால எல்லையையும் உணர்த்தும்.

(உ-ம்) இனி எம் ஊர்—இடம்.
இனிச் செய்வேன்—காலம்.

**32.** 'தொறும், தோறும்' என்னும் இடைச்சொற்கள், தொழில் இடங்களின் பன்மைப்பொருளைத் தரும்.

(உ - ம்) படிக்குந்தோறும்
ஊர் தோறும்

**33.** 'அந்தோ, ஐயோ' என்னும் இடைச்சொற்கள், இரக்கப் பொருளைத் தரும்.

(உ - ம்) அந்தோ! இறந்தான். ஐயோ! போனான்.

**34.** 'அம்மா' என்பது வியப்புப் பொருளைத் தரும் இடைச்சொல்.

(உ - ம்) அம்மா பெரிது!

**35.** 'வாளா, சும்மா, கொன்னே' என்பன, பயன் இன்மைப் பொருளைத் தரும் இடைச்சொற்கள்.

(உ - ம்) வாளா விருந்தான்.
சும்மா விருந்தான்.
கொன்னே இழந்தான்.

## உரிச்சொல்

## (Qualifying words)

### ஒரு குணங் குறித்த பல உரிச்சொல்

**36.** சால், உறு, தவ, நனி, கூர், கழி என்னும் சொற்கள், மிகுதி என்னும் ஒரு குணத்தைக் குறிக்கும் உரிச்சொற்களாம்.

(உ-ம்) சாலப்பலர், உறு புனல், தவப் பிஞ்சு, நனி பேதை, கூர் வேல், கழி மடி.

ந. சூ:—சால உறுதவ நனிகூர் கழிமிகல். 19.

பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல்

**37.** 'கடி' என்னும் உரிச்சொல், காப்பு, கூர்மை, மணம், விளக்கம், சிறப்பு, விரைவு, அச்சம், புதுமை முதலிய பல குணங்களை உணர்த்தும்.

(உ-ம்) கடி நகர் —காப்பு
கடி வேல் —கூர்மை
கடி மாலை—மணம்
கடி மார்பன்—விளக்கம்
கடி அரண்—சிறப்பு
கடி சென்றான்—விரைவு
கடிப் பேய்—அச்சம்
கடி மணம்—புதுமை

ந. சூ:—கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும். 20.

## III. பொதுவியல்

**38.** வழு:—இலக்கணத்துக்கு மாறாய் வருவதும், தமிழ் நடைக்கு மாறாய் வருவதும், 'வழு' எனப்படும். (வழு—பிழை.) இவ்வழு ஏழு வகைப்படும்.

(உ-ம்) அவன் வந்தது —திணை வழு
அவன் வந்தாள் —பால் வழு

யாம் தின்றான் —இட வழு
நாளை வந்தேன் —கால வழு
கறக்கிற எருமை பாலோ சினையோ?—வினா வழு
'கடம்பூர்க்கு வழி யாது?' என்றால், 'இடக்காளை என் காளையன்று', எனல்—விடை வழு
குதிரைக் குஞ்சு—மரபு வழு

ந. சூ:—திணையே பாலிடம் பொழுது வினாவிறை
மரபாம் ஏழும் மயங்கினும் வழுவே. 21.

**39.** வழாநிலை:—இலக்கணத்துக்குப் பொருத்தமாக வாக்கியங்களை அமைப்பது வழா நிலையாம். (வழா நிலை—பிழைபடாதநிலை.)

(உ-ம்.) அவன் வந்தான், அது வந்தது, யாம் தின்றோம், நாளை வருவேன், கறக்கிற எருமை பாலே, கடம்பூர்க்கு இதுவே வழி, குதிரைக்குட்டி.

**40.** வழுவமைதி:—சொல் நடை, இலக்கணத்துக்கு விரோதமான குற்றமுடையதாயிருந்தாலும், பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதற்கு வழுவமைதி என்பது பெயர். இவ்வழுவமைதி திணை பற்றியும், பால் பற்றியும், இடம்பற்றியும், காலம் பற்றியும் அமையும். எனவே, இவை திணை வழுவமைதி, பால் வழுவமைதி, இட வழுவமைதி, கால வழுவமைதி என்று வழங்கப்படும்.

**41.** திணை வழுவமைதி:—உயர்திணை எழுவாயைத் தொடர்ந்த அஃறிணைப் பொருளாதி ஆறும், அவ்வுயர்திணை எழுவாயோடு சேர்த்து முடிக்கின், அவ்வுயர்திணை முடிபைக் கொள்ளும்.

(உ-ம்.) நம்பி போன் பெரியன்.
நம்பி நாடு பெரியன்.
நம்பி வாழ் நாள் பெரியன்.
நம்பி மூக்குக் கூரியன்.
நம்பி குடிமை நல்லன்.
நம்பி நடை கூடியன்.

நம்பி என்னும் உயர்திணை எழுவாயின் பயனிலையோடு அஃறிணை எழுவாயாகிய போன் முதலியன முடிந்தமை காண்க.

குறிப்பு:— 'போன்' என்னும் அஃறிணை எழுவாய் 'நம்பி' என்னும் உயர்திணை எழுவாயினது பயனிலையாகிய பெரியன் என்னும் உயர்திணை வினையைக்கொண்டு முடிதலால் வழுவாகி, தொடர்பு உண்டாயிருத்தல் பற்றிச் சேர்த்து முடித்தலால் வழுவமைதியாயிற்று.

ந. சூ:—உயர்திணை தொடர்ந்த பொருள்முதல் ஆறும்
அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின. 22.

**42.** திணைபால் வழுவமைதி:— திணையும் பாலும், மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, கோபம், இழிப்பு ஆகிய காரணங்களால் வழுவி வந்தாலும் குற்றம் இல்லை.

திணை வழுவமைதி

(உ-ம்.) (1) பசுவை 'என் அம்மை வந்தாள்' என்பதில் மகிழ்ச்சியினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(2) நரியாரே—உயர்வினால் அஃறிணை உயர் திணையாயிற்று.

(3) என் பிள்ளைகளே என் பொருள்—சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(4) 'ஒருவர் சொல்லுங் கேளான்; தானும் அறிந்து கொள்ளான்; அவ்வுயிரால் யாது பயன்?'—என்பதில் கோபத்தால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(5) நாம் அரசன் உடைமை—இழிப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

## பால் வழுவமைதி

1. ஒருத்தி தன் மகனை 'என் அம்மை வந்தாள்'-என்பதில் மகிழ்ச்சியினால் ஆண் பால் பெண் பாலாயிற்று.

2. ஒருவனை 'அவர் வந்தார்'—என்பதில் உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப் பாலாயிற்று (இதற்கு மரியாதைப் பன்மை என்றும் பெயர் உண்டு)

3. 'தாதா! உலகுக்கோர் தாயே' என்பதில் சிறப்பினால் ஆண் பால் பெண் பாலாயிற்று.

4. 'கசையடி பெறுவீர் காளையரே'—இஃது ஒருவனைப் பார்த்துச் சொல்லியபடியால், கோபத்தால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

5. பெண் சொல் கேட்பானை 'இவன் பெண்' என்பதில் இழிப்பினால் ஆண் பால் பெண் பாலாயிற்று.

ந. சூ:—உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே. 23.

**43.** பால் இட வழுவமைதி:—ஒருமைப்பாலில் பன்மைப்பாற் சொல்லையும், பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும், ஓர் இடத்தில் பிற இடத்துச் சொல்லையும் தழுவிக் கூறுதலும் உண்டு. அவை பால் வழுவமைதி என்றும், இடவழுவமைதி என்றும் வழங்கப்படும்.

## பால் வழுவமைதி

(உ.ம்.) 1. வெயில் எல்லாம் மறைத்தது மேகம்! இதில் 'வெயில்' என்னும் ஒருமைப்பாலில் எல்லாம் என்னும் பன்மைப் பாற்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது. இதற்கு ஒருமை பன்மை மயக்கம் என்று பெயர் உண்டு.

இரண்டு கண்ணும் சிவந்தது—இதில் பன்மையில் ஒருமை மயங்கியது.

## இட வழுவமைதி

(1) சாத்தன் தாய் இங்ஙனம் செய்வேனே—'யான்' எனச் சொல்லவேண்டிய தன்மையில் 'தாய்' எனப் படர்க்கைச்சொல் வந்தது. இஃது தன்மையில் படர்க்கை வந்த இடவழுவமைதி எனப்படும்.

(2) 'எம்பியை ஈங்குப் பெற்றேன்'.—இதில் தன் தம்பியை முன்னிலைப்படுத்தி அவனை நோக்கிக் கூறுதலால், 'நின்னை' எனச் சொல்லவேண்டிய முன்னிலையில் 'எம்பியை' எனப் படர்க்கைச் சொல் வந்தது காண்க. (இது முன்னிலையில் படர்கை வந்த இடவழுவமைதி எனப்படும்.

ந. சூ:—ஒருமையில் பன்மையும் பன்மையில் ஒருமையும்
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே. 24.

## கால வழுவமைதி

**44.** முக்காலத்திலும் இடைவிடாது நிகழ்கின்ற நிகழ்ச்சியை நிகழ்காலத்தில் சொல்லுதல் கால வழுவமைதி யாகும்.

(உ - ம்.) மலை நிற்கிறது.
கடவுள் இருக்கிறர்.
தீச் சுடுகிறது.

குறிப்பு:—மலைக்கு நிற்றலும், கடவுளுக்கு இருத்தலும், தீக்குச் சுடுதலும் என்றும் உள்ளனவாதல் அறிக.

ந. சூ:—முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே 25.

**45** விரைவு, மிகுதி, தெளிவு, இயல்பு பற்றியும் மூன்று காலங்களும் ஒன்று மற்றொன்றாக மாறி வரும் இதுவும் கால வழுவமைதியாம்.

(உ - ம்.) (1) 'படிக்கவில்லையோ?' என்று கேட்டவனுக்குப் படியாதவன் 'படித்தேன்' என்பதும், படிக்கின்றவன் 'படித்தேன்' என்பதும், காலம் மாறிக் கூறினமையின், காலவழுவமைதியாயின (இவை விரைவுபற்றி வந்தன.)

(2) 'காட்டில் சென்றால் ஆடை இழந்தாய்'—என்பதில் எதிர்காலம் மிகுதிபற்றி இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது.

(3) 'நீ பாம்புப்பற்றில் கைவிட்டால் சேந்தாய்'—இதில் தெளிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது.

(4) 'நான் சிறுவயதில் படிப்பது இந்த அறையிலேதான்'- இஃது இயல்பினால் இறந்த காலம் எதிர் காலமாகச் சொல்லப் பட்டது.

ந. சூ :—விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்
பிறழவும் பெறூஉம்முக் காலமும் ஏற்புழி. 26.

## மரபு

**46.** எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எவ்வாறு பெரியோர்கள் சொன்னார்களோ, அவ்வாறே நாமும் சொல்லுதல் மரபாகும்,

(உ - ம்.) குதிரைக் குட்டி, பசுவின் கன்று, பனை ஓலை, யானைப் பாகன், ஆட்டு இடையன் என்பன மரபாகும். இப்படி அல்லாமல், குதிரைக் கன்று, பசுவின் குட்டி, பனை இலை, யானை இடையன், ஆட்டுப் பாகன் என்று சொல்வது மரபு வழுவாகும்.

ந. சூ :—எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே. 27

## ஒரு பொருட்பன்மொழி

**47.** சொல் இன்பம் தோன்றும் பொருட்டு ஒரு பொருள்மேல் பல சொற்கள் தொடர்ந்து வருதலும் உண்டு.

(உ-ம்) மீமிசை ஞாயிறு, புனிற்றிளங் கன்று, நாகிளங் கமுகு, குழிந்து ஆழ்ந்த கண்—இவற்றில் மீ என்பதும் மிசை என்பதும் மேல் என்னும் ஒரே பொருளைத் தருவனவாம். ஆதலின், மீமிசை என்பது ஒரு பொருட் பன்மொழி. இது மீமிசைச் சொல் எனவும் படும்.

ந. சூ:—ஒரு பொருட் பன்மொழி சிறப்பினின் வழா. 28

## இரட்டைக் கிளவி

**48.** சில பதங்கள் பிரியாது இரட்டையாகவே வந்து பொருள் தரும். அவை இரட்டைக் கிளவி எனப்படும்.

(உ-ம்) கலகலத்த மனிதன்.
வானம் மடமட என்கிறது.
இவன் துறுதுறுவென்று பார்க்கிறான்.

குறிப்பு:—அடுக்குத் தொடருக்கும் இரட்டைக் கிளவிக்கும் உள்ள வேறுபாடு:—

(1) அடுக்குத் தொடரில் ஒரு சொல் நான்கு முறை வரையில் அடுக்கி வரும். இரட்டைக்கிளவியில் ஒரு சொல் இரு முறைக்கு மேல் வாராது.

(2) அடுக்குத் தொடர் பிரிந்து ஒலித்துத் தனித்தனியே பொருள் தரும்: இரட்டைக்கிளவி பிரிந்து ஒலியாது.

ந. சூ:—இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந் திசையா. 29

# IV. புணரியல்

## (Combination of words)

இயல்பும், மிகுதலும், திரிதலும்:

**49.** (1) இயல்பு:—மொழிக்கு இறுதியில் வரும் இருபத்து நான்கு எழுத்துக்களையும் ஈற்றிலுடைய சொற்களின் முன் வரும் ஞ, ந, ம, ய, வக்கள் இரு வழியிலும் இயல்பாகும். (இரு வழி-வேற்றுமை, அல்வழி.)

(உ-ம்). அல்வழிப் புணர்ச்சி

இள + ஞாயிறு —இள ஞாயிறு
பனை + நீண்டது—பனை நீண்டது
பொன் + மெலிது —பொன் மெலிது
கார் + யாது —கார் யாது?
எருது + வலிது —எருது வலிது

வேற்றுமைப் புணர்ச்சி

வலி + ஞமலி —வலி ஞமலி
தீ + நீட்சி —தீ நீட்சி
பொன் + மாட்சி —பொன் மாட்சி
கான் + யாறு —கான் யாறு
வாள் + வன்மை —வாள் வன்மை

குறிப்பு:—மற்றைய ஈறுகளோடும் இவ்வாறே கொள்க.

(2) மிகல்:—தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த யகரத்தின் முன்னும் ஐகாரத்தின் முன்னும், நொ, து என்பவைகளின் முன்னும் வருகின்ற ஞ, ந, ம என்னும் மெல்லெழுத்துக்கள் மிகும்.

(உ-ம்.) அல்வழி

| | | |
|---|---|---|
| மெய் + ஞான்றது — மெய்ஞ்ஞான்றது<br>மெய் + நீண்டது — மெய்ந்நீண்டது<br>மெய் + மாண்டது — மெய்ம்மாண்டது | | குறில் வழி யகர மெய் |
| கை + ஞான்றது — கைஞ்ஞான்றது<br>கை + நீண்டது — கைந்நீண்டது<br>கை + மாண்டது — கைம்மாண்டது | | தனி ஐகாரம் |
| நொ + நாகா — நொந்நாகா<br>நொ + மாடா — நொம்மாடா | | நொமுன் மெய்ம்மிகுதல். |

(நொ - வருந்து, து - உண்.)

வேற்றுமை

| | | | |
|---|---|---|---|
| மெய் + ஞாற்சி | — மெய்ஞ்ஞாற்சி | குறில் வழி 'ய' | |
| மெய் + நீட்சி | — மெய்ந்நீட்சி | | |
| மெய் + மாட்சி | — மெய்ம்மாட்சி | | |
| கை + ஞாற்சி | — கைஞ்ஞாற்சி | தனி 'ஐ' | |
| கை + நீட்சி | — கைந்நீட்சி | | |
| கை + மாட்சி | — கைம்மாட்சி | | |

குறில் வழி 'ய' தனி 'ஐ', 'ஞெ' 'நு' முன் மெலி மிக்கன.

(3) திரிதல்—நிலைமொழி இறுதியிலுள்ள ண, ள, ன, ல என்னும் மெய்களுக்குப் பின் வருகின்ற 'ந'கரம் திரியும்.

(உ - ம்.) அல்வழி

மண் + நீண்டது — மண்ணீண்டது

முள் + நீண்டது — முண்ணீண்டது

பொன் + நீண்டது — பொன்னீண்டது

கல் + நீண்டது — கன்னீண்டது

வேற்றுமை

மண் + நீட்சி—மண்ணீட்சி

முள் + நீட்சி—முண்ணீட்சி

பொன் + நீட்சி—பொன்னீட்சி

கல் + நீட்சி—கன்னீட்சி

ண, ள, ன, ல முன் நகரம் திரிந்தது.

ந. சூ:—எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்கள் இயல்பும்
குறில்வழி யத்தனி ஐஙொது முன்மெலி
மிகலுமாம்; ணளனல வழிநத் திரியும். 30

## முன்னிலை வினை முன்னும் ஏவல் வினை முன்னும் வல்லினம் புணர்தல்

**50.** உயிரையும் ய, ர, ழ என்னும் மூன்று மெய்களையும் இறுதியாகவுடைய முன்னிலை வினை முன்னும் ஏவல் வினை முன்னும் வரும் வல்லினம் இயல்பாகும். சில இடங்களில் ஒரு புணர்ச்சியிலேயே இயல்பும் மிகுதலும் உண்டாகும்.

(உ-ம்) (1) உண்டனை + கந்தா —உண்டனை கந்தா
உண்டாய் + சாத்தா —உண்டாய் சாத்தா
உண்டீர் + சாத்தரே—உண்டீர் சாத்தரே

இங்கு உயிர் முன்னும், ய, ர முன்னும் முன்னிலை வினையில் வலி இயல்பாயிற்று.

(2) வா + கொற்றா—வாகொற்றா
பாய் + சாத்தா —பாய்சாத்தா
சேர் + கொற்றா—சேர்கொற்றா
வாழ் + புலவா —வாழ்புலவா
} ஏவல் வினை முன் வலி இயல்பாயிற்று

(3) நட + கொற்றா —நடகொற்றா, நடக்கொற்றா
எய் + கொற்றா —எய்கொற்றா, எய்க்கொற்றா
ஏவல் வினையில் வலி விகற்பித்தது.

இவையெல்லாம் வினைமுற்றுத் தொடராதலால், அல்வழிப் புணர்ச்சியாம்.

ந. சூ:—ஆவி யரழ இறுதிமுன் னிலைவினை
ஏவல்முன் வல்லினம் இயல்போடு விகற்பே. 31

## இயல்பும் மிகுதலும் விகற்பித்தலும்

**51.** இகர ஐகார ஈறுகள்:—அல்வழிப் புணர்ச்சியில் இகர ஐகாரங்களின் முன்வரும் வல்லினம் இயல்பாதலும் மிகுதலும் விகற்பித்தலும் ஆகும்.

புலி + சிறிது — புலி சிறிது
யானை + பெரிது — யானை பெரிது } எழுவாய்த் தொடரில் வலி இயல்பாயின

செடி + கொடி — செடிகொடி
யானை + குதிரை — யானைகுதிரை } உம்மைத்தொகையில் வலி இயல்பாயின

இடி + சுவர் — இடிசுவர்
உரை + கல் — உரைகல் } வினைத்தொகையில் வலி இயல்பாயின

மார்கழி + திங்கள் — மார்கழித் திங்கள்
சாரை + பாம்பு — சாரைப்பாம்பு } பண்புத் தொகையில் வலி மிக்கன

பனை + கை — பனைக்கை — உவமைத்தொகையில் வலி மிக்கது.

கிளி + குறிது — கிளி குறிது, கிளிக் குறிது
தினை + சிறிது — தினைசிறிது, தினைச்சிறிது } எழுவாய்த்தொடரில் விகற்பித்தன

கடி + கமலம் — கடி + கமலம், கடிக்கமலம் — உரிச்சொற்றொடரில் விகற்பித்தது

ந. சூ:—அல்வழி இஐ முன்னராயின்
இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும். 32

## சில எண்ணுப் பெயர்கள் இரட்டித்தல்

**52.** ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, பத்து ஆகிய இவ்வொன்பது எண்களும் இரட்டித்து வந்தால், நிலைமொழியின் முதலெழுத்து ஒழிய மற்ற எழுத்துக்கள் எல்லாம் கெடும். நிலைமொழி முதலில் நிற்கும் நெடில் குறுகும். உயிர் வரின், வகரம் தோன்றும். மெய் வரின், வந்த மெய் மிகும்.

(உ - ம்)
ஒன்று + ஒன்று — ஒவ்வொன்று
இரண்டு + இரண்டு - இவ்விரண்டு
ஐந்து + ஐந்து — ஐவைந்து
ஆறு + ஆறு — அவ்வாறு
ஏழு + ஏழு — எவ்வேழு
எட்டு + எட்டு — எவ்வெட்டு } உயிர் வர வகரம் மிகுந்தது

| | |
|---|---|
| மூன்று+மூன்று—மும்மூன்று<br>நான்கு+நான்கு—நந்நான்கு<br>பத்து+பத்து—பப்பத்து | வருமொழி முதலில்நின்ற மெய்கள் மிக்கன. |

குறிப்பு:—ஒன்றேன்று, ஒரோவொன்று, இரண்டிரண்டு என வருதலும், வெவ்வேறு, பப்பாதி என வேறு பெயர்கள் வருதலும் கொள்க.

ந. சூ:—ஒன்பது ஒழித்தஎண் ஒன்பதும் இரட்டின்
முன்னதின் முன்னல ஓட, உயிர்வரின்
வவ்வும், மெய்வரின் வந்ததும் மிகல்நெறி. 33

## சாரியை தோன்றல்

**53.** ஐகாரத்தின் முன் மெய்:—வேற்றுமைப் புணர்ச்சியில் ஐகார ஈற்றுச்சொற்கள் நாற்கணமும் வர இறுதி ஐ கெட்டு, அம்முச் சாரியை பெற்று வருதலும் உண்டு.

| | | |
|---|---|---|
| (உ - ம்) | தாழை+பூ —தாழம்பூ<br>எலுமிச்சை+மரம்—எலுமிச்ச மரம்<br>ஆவிரை+வேர் —ஆவிரம் வேர் | 'ஐ' கெட்டு அம்முச் சாரியை பெற்றன. |
| | புன்னை+கானல்—புன்னையங் கானல்<br>முல்லை+தொடை—முல்லையந்தொடை | இறுதி அழியாமல் சாரியை பெற்றுவந்தன |
| | முல்லை+பறவு—முல்லைப் பறவு<br>கொல்லை+சாரல்—கொல்லைச்சாரல் | சாரியை பெறாது வந்தன. |

ந. சூ:—வேற்றுமை யாயின் ஐகான் இறுமொழி
ஈற்றழி வோடும்அம் ஏற்பவும் உளவே. 34

**54.** மகரத்தின்முன் ஞ, ந புணர்தல்:—நும், தம், எம், நம் என்னும் சொற்களின் ஈற்று மகரத்திற்கு முன் ஞ, ந வரின், அம்மகரம் வரும் எழுத்தாகத் திரியும்.

| | | |
|---|---|---|
| (உ-ம்.) | நும் + ஞாண், நூல்—நுஞ்ஞாண், நுந்நூல் | நிலை மொழி ஈற்று மகரம் ஞகர மாகவும் நகரமாகவும் திரிந்தன. |
| | தம் + ஞாண், நூல்—தஞ்ஞாண், தந்நூல் | |
| | எம் + ஞாண், நூல்—எஞ்ஞாண், எந்நூல் | |
| | நம் + ஞாண், நூல்—நஞ்ஞாண், நந்நூல் | |

குறிப்பு:—உம் + ஞாண், நூல்—உஞ்ஞாண், உந்நூல் என வருதலும் கொள்க.

ந. சூ—நும்தம்,
எம்நம் ஈறும் மவ்வரு ஞநவே. 35

**55.** *தனிக்குற்றெழுத்தின் முன் வரும் லகர ளகரங்கள் அல்வழியில் தகரம் வருமொழி முதலில் வருமாயின் ஆய்தமாகவும் திரியும்.*

(உ-ம்.) கல் + தீது—கஃறீது
முள் + தீது—முஃடீது

குறிப்பு:—இவை கற்றீது, முட்டீது எனவும் வரும்.

ந. சூ:—குறில்வழி லளத்தவ் வணையின் ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழி யானே. 36

**56.** அகர ஈற்றின்முன் வலி.—'செய்யிய' என்னும் வாய்பாட்டு *வினையெச்சம், பல வகைப் பெயரெச்சங்கள், வினைமுற்றுக்கள், ஆறும் வேற்றுமை அகரவுருபு, அஃறிணைப் பன்மைப்பெயர்கள், அம்ம என்னும் இடைச்சொல் ஆகிய அகரவீற்றுச் சொற்களின் முன் வரும் வல்லினம் இயல்பாகும்.*

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| உண்ணிய+தந்தான் | — உண்ணியதந்தான் | வினையெச்சம் |
| வந்த+குதிரை | — வந்த குதிரை | பெயரெச்சங்கள் |
| அரிய+பொருள் | — அரிய பொருள் | |

| | | |
|---|---|---|
| வந்தன+பசுக்கள் | — வந்தன பசுக்கள் | வினை முற்று |
| கரியன+குதிரைகள் | — கரியன குதிரைகள் | வினை முற்று |
| வருக+கொற்று | — வருக கொற்று | வினை முற்று |
| தன+கைகள் | — தனகைகள்— | 6-ஆம் வேற்றுமை அகரவுருபு |
| பல+குதிரைகள் | — பல குதிரைகள்— | அஃறிணைப் பன்மைப்பெயர் |
| அம்ம+கொற்று | — அம்ம கொற்று— | 'அம்ம' என்னும் இடைச்சொல் |

ந. சூ:—செய்யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரின் எச்சம்முற்று ஆறன் உருபே
அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே. 37

**57.** அவ், இவ், உவ் என்னும் அஃறிணைப் பலவின் பால் சுட்டுப்பெயர்களின் இறுதி வகரம் அல்வழியில் வலி மெலி இடையாகிய மூவினமெய்களும் வர முறையே ஆய்த மும் மெல்லினமும் இயல்பாகும்.

(உ-ம்.) அவ்+கடிய —அஃகடிய—ஆய்தமாயிற்று
இவ்+ஞான்றன —இஞ்ஞான்றன-மெலிமிக்கது
உவ்+யாவை —உவ்யாவை—இயல்பாயிற்று

ந. சூ:—சுட்டு வகரம்மூ வினம்உற முறையே
ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும். 38

**58.** வகர மெய்யீற்றுச் சுட்டுப் பெயர்கள் வேற் றுமை உருபு ஏற்கும்போது அற்றுச்சாரியை பெறும்.

(உ-ம்.) அவ்+ஐ—அவற்றை
இவ்+ஐ—இவற்றை
உவ்+ஐ—உவற்றை
} அற்றுச் சாரியை பெற்று வந்தன.

குறிப்பு :—'அவற்றினை' என அற்றுச் சாரியையோடு இன் சாரியை பெறுதலும் உண்டு.

குற்றியலுகரப் புணர்ச்சி—ஒற்று இரட்டித்தல்

**59.** டகர, றுகர ஈறுகளையுடைய நெடிற்றொடர்க் குற்றியலுகரங்களின் முன்னும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களின் முன்னும் வேற்றுமைப் புணர்ச்சியில் நாற்கணமும் வர உகரமேறிய மெய் பெரும்பாலும் இரட்டும்.

(உ - ம்.)

| | |
|---|---|
| ஆடு + கறி —ஆட்டுக்கறி<br>ஆறு + வண்டல் —ஆற்று வண்டல்<br>முரடு + மனிதன் —முரட்டு மனிதன்<br>வயிறு + எரிச்சல் —வயிற்றெரிச்சல் | நாற்கணமும் வர இரட்டித்தல் காண்க. |

குறிப்பு:—(1) பெரும்பான்மை இரட்டும் எனவே, சிறுபான்மை இரட்டா.

| | |
|---|---|
| காடு + சென்றான் —காடு சென்றான்<br>கிணறு + மூழ்கினான் —கிணறுமூழ்கினான் | வேற்றுமையில் ஒற்றுக்கள் இரட்டாவாயின. |

(2) பெரும்பான்மை வேற்றுமையில் இரட்டும் எனவே சிறுபான்மை அல்வழியில் இரட்டுதலும் கொள்க.

காடு + அரண்—காட்டரண்
களிறு + யானை—களிற்று யானை

ந. சூ:—நெடிலோடு உயிர்த்தோடர்க் குற்றுக ரங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே. 39

**60.** மென்றொடர் வன்றொடராதல்:—மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள் சில, வேற்றுமையில் தமக்கு இனமாகிய வன்றொடராகத் திரியும்; பல திரியா.

| | |
|---|---|
| (உ - ம்) மருந்து + பை — மருத்துப் பை<br>தூங்கு + மனம் — தூக்கு மனம்<br>இரும்பு + வலிமை—இருப்புவலிமை<br>கன்று + ஆ — கற்றா. | வன்றொடராயின. |

| | |
|---|---|
| வண்டு + கால்—வண்டுக்கால்<br>பந்து + நலம்—பந்துநலம்<br>நண்டு + வளை—நண்டுவளை<br>சங்கு + ஒலி—சங்கொலி | வன்றொடராகாதன. |

குறிப்பு:—இரும்பு + மனம் — இருப்பு மனம், நஞ்சு + பகைமை—நச்சுப் பகைமை என அல்வழியில் வன்றொடராதலும் ; குரங்கு + குட்டி—குரங்குக் குட்டி, குரக்குக் குட்டி எனவும்: அன்பு + தளை—அன்புத்தளை, அற்புத்தளை எனவும் வேற்றுமை அல்வழிகளில் விகற்பித்தலும் கொள்க.

ந. சூ:—மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையில்
தம்மின வன்றொடர் ஆகா மன்னே.

## இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி

**61.** (1) இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியில் சில, இயல்பாக வேண்டிய இடத்தில் விகாரப்படும்.

(உ - ம்) நின் + புறங்காப்ப — நிற்புறங்காப்ப — இங்கு இயல்பாக வேண்டிய இடத்தில் திரிதல் விகாரம் அடைந்தது.

(2) சில இடத்தில் இயல்பாகும்.

(உ - ம்.) மண் + சுமந்தான் —மண் சுமந்தான்
பொன் + கொடுத்தான் —பொன் கொடுத்தான்
இங்கு ண, ன என்பன ட, ற ஆகாமல் இயல்பாயின.

(3) சில உயர்திணைப் பெயரினிடத்தும் பொதுப் பெயரினிடத்தும் உருபு விரிந்தும் மறைந்தும் வரும்.

(உ - ம்.) நம்பியை + கண்டான்—நம்பியைக் கண்டான் — உயர்திணையில் உருபு விரிந்து நின்றது.
மகன் + பெற்றான் — மகற்பெற்றான்—உயர்திணையில் உருபு தொக்கது.

*கொற்றனை+கொணர்ந்தான்—கொற்றனைக் கொணர்ந்தான்—பொதுப் பெயரிடத்து உருபு விரிந்தது.*

*ஆண்+பெற்றாள் — ஆண் பெற்றாள்—பொதுப் பெயரிடத்து உருபு தொக்கது.*

*இவை போன்ற பிறவும் இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியில் வரும் வேறுபாடுகளாம்.*

ந. சூ:—இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை இடத்து விரிந்தும் தோக்கும்
விரவுப் பெயரின் விரிந்து நின்றும்
அன்ன பிறவும் ஆகும் ஐ உருபே. 41

## V. யாப்பு

### (Prosody)

### மோனை

### (Alliteration)

**62.** மோனை:—*பல அடிகளிலாவது, ஓரடியின் பல சீர்களிலாவது முதல் எழுத்து ஒற்றுமைப்பட்டு வரத் தொடுப்பது மோனையாம்.*

*ஒன்றுபடும்பொழுது ஒரே எழுத்துத் திரும்பவும் வந்து ஒன்று படுதலும், கிளை எழுத்துக்களோடு ஒன்று படுதலும் உண்டு.*

கிளை எழுத்துக்கள்:—(அ, ஆ, ஐ, ஔ)—(இ, ஈ, எ, ஏ யா)—(உ, ஊ, ஒ, ஓ)—(ஞ, ந)—(ச, த)—(ம, வ).

அடி மோனை (Alliteration in line):—*அடிதோறும் முதலில் ஒரே எழுத்து வருவது அடி மோனையாம்.*

(உ - ம்.) "மாவும் புள்ளும் வதுவையிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை
மாயோ ளின்னுயிர் புறத்திறுத் தற்றே."

இங்கு ஒவ்வோர் அடியிலும் முதல் எழுத்தே மீண்டும் மீண்டும் வந்தமையின், அடிமோனை ஆயினமை காண்க.

சீர்மோனை (Alliteration in feet):—ஓரடியின் பல சீர்களில் முதல் எழுத்து மீண்டும் வருவது சீர்மோனையாம். (சீர்களில் மோனை வருவதால் சீர்மோனை ஆயிற்று.)

"விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்."

இவ்வெண்பாவில் முதலடியில் 'வி' என்னும் எழுத்திற்கு 'வெ' என்பதும், இரண்டாமடியில் 'க' என்பதற்கு 'க' என்பதும், மூன்றாம் அடியில் 'வ' என்பதற்கு 'வ' என்பதும், நான்காம் அடியில் 'பொ' என்பதற்குப் 'பொ' என்பதும் சீர்மோனை யாயின. இரண்டாவது மூன்றாவது, நான்காவது அடிகளில் முதலில் வந்த எழுத்துக்களே மீண்டும் வந்தன. முதலடியின் மோனை கிளையெழுத்தால் ஆனது.

முற்றுமோனை (Alliteration in all feet):—எல்லாச் சீர்களிலும் முதலெழுத்தே ஒன்றிவருமானால், முற்று மோனை எனப்படும்.

(உ - ம்) "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை."

இக்குறள் வெண்பாவில் முதற்சீர் முதலெழுத்தான 'து' என்பதே மற்ற மூன்று சீர்களின் முதலிலும் வந்திருத்தலைக் காண்க.

## எதுகை

## (Rhyme)

**63.** எதுகையாவது, அடிகளிலும், அடிகளின் சீர்களிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டு முதலிய எழுத்துக்கள் ஒன்றி வரத் தொடுப்பது.

அடி எதுகை (Rhyme in lines):—அடிகள்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது அடி எதுகையாகும்.

(உ - ம்) "வடியேர்கண் ணீர்மல்க வான்பொருட்கட் சென்றார்
கடியார் கனங்குழாய் காணார்கொல் காட்டுள்
இடியின் முழக்கஞ்சி ஈர்ங்கவுள் வேழம்
பிடியின் புறத்தசைத்த கை.")

இச்செய்யுளில் ஒவ்வோர் அடியின் முதற்சீரிலும் இரண்டாம் எழுத்து ஒன்றினமை காண்க.

சீர் எதுகை (Rhyme in feet):—ஓர் அடியின் சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது சீர் எதுகையாம்.

(உ - ம்) "இன்பத்து ளின்பம் விழையாதான் துன்பத்துட்
டுன்ப முறுத லிலன்."

முதலடியில் 'விழையாதான்' என்னும் சீரைத்தவிர ஏனைய மூன்று சீர்களிலும் இரண்டாமெழுத்து ஒன்றி வந்தமை காண்க.

குறிப்பு:—அடியெதுகை அளவொத்தே இருக்க வேண்டும். முதலடி முதற்சீர் 'யாதும்' என்றிருந்து, இரண்டாமடி முதற்சீர் 'அதுவும்' என்றிருத்தல் கூடாது, 'ஆதும்' என்றிருத்தல் வேண்டும்.

## தளை

## (Combination of feet)

**64.** சீர் ஒன்றோடொன்று சேர்வது தளையாம். எனவே, நின்ற சீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை இணையுமானல், அதற்குத் தளை என்பது பெயர். (தளை-கட்டு.)

அத் தளை எழு வகைப்படும். வெண்பாவுக்கு உரிய தளை வெண்டளை. அஃது, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை என இரு வகைப்படும்.

குறிப்பு:—ஏனைய தளைகள் பாடமின்மையால் விடப்பட்டன.

**65.** மாமுன் நிரையும், விளம்முன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளையாகும்.

(உ-ம்) 'பாலோடு நீர்கலந் தற்றே பணிமொழி'—இங்குப் 'பாலோடு' என்ற கூவிளத்தின் முன் 'நீர்கலந்' என்ற சீரின் முதல் அசையாகிய நேரும், அற்றே' என்ற .தேமாச்சீரின் முன் 'பணிமொழி' என்ற சீரின் முதல் அசையாகிய நிரையும் அமைந்திருத்தல் காண்க.

**66.** வெண்சீர் வெண்டளை:—இது மூவகைச் சீராகிய காய்ச்சீரின் முன் வரும் சீரின் முதலசை நேராய் வருவது.

(உ-ம்) செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள் நேர்நிரைநேர் நேர்நிரைநேர் நேர்நேர்நேர் நேர்நிரைநேர் கூவிளங்காய் கூவிளங்காய் தேமாங்காய் கூவிளங்காய் இவ்வெண்பா அடியில் காய்ச்சீர் முன் நேர் வந்தது காண்க.

**67.** அலகிடுதல் (Scansion):— செய்யுட்களின் ஓசை நோக்கி அசை, சீர், தளை முதலியவை தவறில்லாமல்

நிற்குமாறு சீரை அசையாகப் பிரித்தலுக்கு அலகிடுதல் என்பது பெயர்.

(உ-ம்.) "ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு."

இச்செய்யுளில் முதலில் நான்கு சீர் கொண்ட அளவடியும் பின்னர் முச்சீர் கொண்ட சிந்தடியும் வந்தது காண்க.

ஏ திலார் குற் றம் போல் தங் குற் றங் காண் கிற் பின்
நேர்நிறை நேர் நேர் நேர் நேர் நேர் நேர் நேர் நேர் நேர்
கூவிளம் தே மாங் காய் தே மாங் காய் தே மாங் காய்
தீ துண் டோ மன் னு முயிர்க்கு.
நேர் நேர் நேர் நேர் நேர் நிரைநேர்
தே மாங் காய் தே மா பிறப்பு

'ஏதிலார்' என்ற கூவிளச்சீரின் முன் 'குற்றம்போல்' என்ற தேமாங்காய்ச் சீரின் முதல் அசையாகிய நேர் அசை வந்து இயற்சீர் வெண்டளையானது. குற்றம்போல் என்ற காய்ச்சீரின் முன் தங்குற்றம் என்னும் காய்ச்சீரின் முதலசையாகிய நேர் அசை வந்து வெண்சீர் வெண்டளையானமை காண்க. இதுபோலவே பிறவற்றையும் அமைத்துக்கொள்க. இச்செய்யுளின் ஈற்றுச்சீர் பிறப்பு என்னும் குற்றியலுகர வாய்பாட்டால் முடிந்தது.

குறிப்பு:—ஈற்றுச்சீர் நேர் நேராவது, நிரை நேராவது வந்து குற்றியலுகர வாய்ப்பாட்டால் முடிந்திருக்குமானல், முறையே காசு பிறப்பு என்னும் வாய்பாட்டுச் சீர்கள் என்று சொல்ல வேண்டும்.

## வெண்பாவின் பொது இலக்கணம்

**68.** அடி:—இச்செய்யுளின் ஈற்றடி முச்சீரடியாயும் ஏனையடிகள் நாற்சீரடியாயும் வரும்.

சீர்:—இச்செய்யுளில் காய்ச்சீரும், மாச்சீரும் விளச்சீரும் வரும்.

தளை:—இச்செய்யுள் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் பெற்று வரும். ஏனைய சீர்களும் தளைகளும் இச் செய்யுளில் கலவா.

முடிபு:—இச்செய்யுள் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளில் ஒன்றை ஈற்றுச் சீராகக்கொண்டு முடியும். இவை களே வெண்பா அனைத்திற்கும் பொதுவிலக்கணமாகும்.

**69.** வெண்பாவானது, குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, பஃ றொடை வெண்பா என ஐந்து வகைப்படும்.

**70.** குறள் வெண்பா:—இஃது இரண்டடிகளையுடை யதாய், ஈற்றடி சிந்தடியாய் அமைய, ஒரு விகற்பத்தாலும், இரு விகற்பத்தாலும் வருவதாம்.

(உ - ம்.)

1. "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்."

இஃது ஒரு விகற்பத்தால் வந்த குறள் வெண்பா.

2. "யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு."

இஃது இரு விகற்பத்தால் வந்த குறள் வெண்பா.

**71.** நேரிசை வெண்பா:—இஃது இரண்டு குறள் வெண்பாக்கள் நடுவில் தனிச்சீர் பெற்று, ஒரு விகற்பத்தா லும் இரு விகற்பத்தாலும் பொருந்த ஒரு பாட்டாய் வரு வது.

(உ - ம்.) (1) "நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்

நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை."

இஃது ஒரு விகற்பமாய் வந்த நேரிசை வெண்பா.

(2) "நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்ப துவும்நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று."

இஃது இரு விகற்பமாய் வந்த நேரிசை வெண்பா.

**72.** இன்னிசை வெண்பா:—இது வெண்பாவின் பொதுவிலக்கணம் பெற்று, ஒரு விகற்பத்தாலும், பல விகற்பத்தாலும் இயன்று, நான்கடியாய், தனிச்சீர் பெறாது வரும்.

(உ-ம்) "வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்."

இஃது ஒரு விகற்பத்தால் தனிச்சீர் இன்றி வந்த இன்னிசை வெண்பா.

## கட்டளைக்கலித்துறை

**73.** கட்டளைக்கலித்துறை:—இஃது ஐஞ்சீர் கொண்ட நெடில் அடிகள் நான்கு உடையதாய், அடிதோறும் முதல் நான்கு சீர்களும் வெண்டளை பிறழாமல் வர, கடைசி ஒரு சீர் விளங்காயாகி வந்து, முதற்சீர் முதலசை நேரசையாயின் ஒற்றை நீக்கிப் பதினாறெழுத்தும், நிரையசையாயின் பதினேழெழுத்தும் கொண்டு வருவதாகும்.

(உ - ம்.)

"தேனார் கமழ்தொங்கல் மீனவன் கேட்பத்தெண் ணீரருவிக்
கானார் மலயத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்
யானா நடாத்துகின் றேனென் றெனக்கே நகைதருமால்
ஆனா வறிவி னவர்கட்கென் னாங்கொலென் னாதரவே."

இதில் முதற்சீர் முதலசை நேரசையாய் வந்தமையால், அடிதோறும் ஒற்றொழித்து 16 எழுத்து வந்தமை காண்க.

"சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிக் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே"

இதில் முதற்சீர் முதலசை நிரையசையாதலால், அடிதோறும் ஒற்று நீங்க 17 எழுத்து வருதல் காண்க.

## VI. அணி

**74.** வேற்றுமையணி:—உபமான உபமேயங்களுக்குள் ஒன்றுக்கொன்று வேறுபாடு தோன்றக் கூறுவது வேற்றுமை அணியாகும்.

"தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு."

இங்குத் 'தீயினால் சுட்ட புண் ஆறும்; நாவினால் சுட்ட வடு ஆறாது,' என்ற வேற்றுமை காண்க.

**75.** வேற்றுப் பொருள் வைப்பணி:—பொதுப் பொருளால் சிறப்புப் பொருளையும், சிறப்புப் பொருளால் பொதுப் பொருளையும் முடித்துக் காட்டுவது வேற்றுப் பொருள் வைப்பணியாம்.

(உ - ம்) அநுமான் கடல் கடந்தான்; பெரியோர்க்கு அரிது யாது?

இதில் சிறப்புப்பொருள், அநுமான் கடல் தாண்டுதல்; பொதுப்பொருள், 'பெரியோர்க்கு அரிது யாது?' எனல். 'பெரியோர்க்கு அரிது யாது?' என்ற பொதுப்பொருள், 'அனுமான் கடல் கடந்தான்' என்ற சிறப்புப் பொருளால் சாதிக்கப்பட்டது.

**76.** அவநுதியணி:—ஒன்றுக்கு இயல்பாயுள்ள தன்மையை மறுத்து வேறொரு தன்மையை ஏற்றிச் சொல்லுவது அவநுதியணியாம் (அவநுதி—மறுத்துரைத்தல்)

(உ - ம்.) நிறைந்த செல்வம் பாக்கியம் அல்ல; சோம்பல், செருக்கு, பாவப் பயிற்சிகளுக்கு இடமாதலால், அது மிகக்கொடிய தீதேயாம்.

**77.** வஞ்சப்புகழ்ச்சியணி:— பழிப்பினால் புகழ்ச்சியாவது, புகழ்ச்சியால் பழிப்பாவது ஒன்றைக்கூறுவது வஞ்சப் புகழ்ச்சியணியாம். இது வியாஜஸ்துதியலங்காரம் எனப்படும்.

(உ - ம்.) (1) 'பாரி ஒருவனும் அல்லன்;
மாரியும் உண்டுஈண்டு உலகுபுரப் பதுவே.'

குறிப்பு:—இங்குப் பாரி என்னும் வள்ளலைப் பழித்தது போல அவன் புகழ் கூறப்பட்டிருப்பது காண்க. (இது வடமொழியில் நிந்தா ஸ்துதி எனப்படும்.)

(2) பெற்ற கல்வியைத் துரோகமென்று ஆசிரியருக்கே கொடுத்தான்.

குறிப்பு:—இதில் 'மாணவன் தன் கல்வியை ஆசிரியருக்கே கொடுத்துவிட்டான்,' என்று புகழ்வதுபோல அவன் அறியாமையைக் கூறிப் பழித்தல் காண்க.

**78.** காட்சியணி:— உபமான உபமேயங்களுக்கு உள்ள தொடர்பைச் சொல்லுவது காட்சியணியாம்.

(உ - ம்) "*கற்றதை மறந்து மேலும் கற்றல் கைப்பொருளை இழந்து மேலும் ஈட்டுதல்.*"

**79.** ஒட்டணி:—உபமானம் கூறிய மாத்திரத்தில் உபமேயம் பெற வைப்பது ஒட்டணியாம். இது பிறிது மொழிதல் அணி எனவும் படும்.

(உ - ம்) "*அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.*" —*விடாமுயற்சி செய்யவேண்டும் என்பது இதன் பொருள்.*

**80.** உயர்வு நவிற்சியணி:—ஒரு பொருளைக் கேட்போர் வியக்கத் தக்கவாறு உயர்த்திக் கூறுவது உயர்வு நவிற்சியணியாம். இது வடமொழியில் அதிசயோக்தி அலங்காரம் எனப்படும்.

(உ - ம்) '*வானளாவும் நீள் மாடம்.*'—*இதில் மாடத்தினது உயர்வு உயர்த்திக் கூறியது காண்க.*

---

Printed at the Excelsior Power Press Madura.